# கல்கி

KALKI 12-4-81 ரூ. 1.20





"நாயைக் கொண்டாந்ததே தப்பு! அதுகிட்டே பேப்பரை வேறே காண்பிச்சிட்டுக் கொடுக்கறியே!"

"சாரி சார்! பேப்பர் வால்யூவேஷனுக்கு எங்கே போகுதுன்னு ட்ரேஸ் பண்ண இதை விடச் சிறந்த வழி இல்லை!"

# வாழ்வின் இணையிலா இனிமைகள்
# அவை என்றென்றும் புதுமைகள்




**நீங்கள் எப்போதும்**
**விரும்பும் சுகந்த மணம்**




# விண்வெளியில் புதிய சகாப்தம்!

இம்மாதம் அமெரிக்காவில் நாஸா ஸ்தாபனம் விண்வெளியில் ஏவுகிற கொலம்பியா விண்கலம் – விண் ஆய்வுத் துறையில் ஒரு புதிய சகாப்தம்.

இதுவரை துணைக் கோள்களை - விண்வெளிக்கு அனுப்புகிற சக்தி வாய்ந்த ராக்கெட்டுகள் மறுபடி பயன்படுத்த முடியாதவை. அனுப்ப வேண்டியவற்றை அனுப்பி விட்டு அப்படியே அழிந்து விடுபவை.

ஆனால் ''ஸ்பேஸ் ஷட்டில்'' என்கிற விண்வெளிப் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்படும் 'கொலம்பியா' மறுபடியும் பயன்படத்தக்கது. எனவே ''ஸ்பேஸ் ஷட்டில்'' முற்றிலும் புதுமையானது. சிக்கனமானதும் கூட.

இப்பொழுதெல்லாம் ஒரு தகவல் துணைக் கோளை (Communication satellite) விண்வெளியில் சுழல விடப் பயன்படும் டெல்டா ராக்கெட் 34, மிலியன் டாலர்களை விழுங்குகிறது. ஆனாலும் அதை மறுபடியும் பயன்படுத்த முடியாது. ஸ்பேஸ், ஷட்டில்' மூலம் ஒரே நேரத்தில் நான்கு தகவல் துணைக் கோள்களை அனுப்ப ஒவ்வொன்றுக்கும் 8.5 முதல் 10.9








Figure 1-4 — A Space Shuttle typical mission profile

மிலியன் டாலர் வரைதான் – நான்கில் ஒரு பங்கு அளவுதான் – செலவு ஏற்படும். தவிர இந்த ஷட்டில்களைத் திரும்பத் திரும்ப நூறு தடவைகள் மேலே அனுப்ப முடியும்.

சர்வ தேச நாடுகள் பலவற்றின் பூரண ஒத்துழைப்புடன் செயல்படுகிறது, இந்த ''ஸ்பேஸ் ஷட்டில்'' திட்டம். 25 நாடுகள் இதன் கட்டுமானப் பணியிலும் விமானம் தரை இறங்குகிற ஏற்பாடுகளிலும் உதவுகின்றன.

தரையில் உள்ள ஆய்வு நிலையங்களில் சாத்தியமாகாத பல சாதனைகளை விண்வெளி



## அடுத்த வாரம்:

# ரசிகமணி ரசித்த மணிகள்

### மீ.ப.சோமு எழுதுகிறார்.

பின், எடையற்ற சூன்யச் சூழலில் வெற்றி கரமாய்ச் செய்ய முடியும் என்று விஞ்ஞான உலகு நம்புகிறது. இதனால் தொழில் துறை, விவசாயத் துறை கனி வளத் துறை நகர்ப் புற மேம்பாட்டுத் திட்டங்கள் போன்ற பல துறைகளுக்கும் பயன்கள் ஏற்படும். இதற்கெல்லாம் கொலம்பியா உதவும்.

சூரிய சக்தியிலிருந்து மின் ஆற்றலை ஒழுங்கு படுத்திப் பூமிக்கு அனுப்பக் கூடிய சக்தி வாய்ந்த நிலையங்களை விண்வெளியில் அமைக்கவும் இது பூர்வாங்க முயற்சி.

கொலம்பியா மூலம் 75க்கும் மேலான விண்வெளிப் போக்கு வரத்துப் பயணங் களுக்கு ஏற்கெனவே உலக நாடுகள் பல ஒப்பந்தம் செய்து கொண்டு விட்டன. அந்த அளவுக்கு இந்த 'ஸ்பேஸ் ஷட்டில்' வெற்றி கரமாக அமையும் என்று உறுதியாய் நம்பு கிறார்கள்.

'ஸ்பேஸ் ஷட்டில்' ஒன்றைப் பயன் படுத்திக் கொள்ளக் கட்டணம் செலுத்தும் வாடிக்கையாளராக முதன் முதலில் ஒப் பந்தம் செய்து கொண்டுள்ள நாடு பாரதம் தான். நம்முடைய 'இன்ஸாட்-1' என்கிற துணைக் கோளை ஸ்பேஸ் ஷட்டில் மூலம்தான் மேலே அனுப்பப் போகிறோம்.

பூமியைச் சுற்றிச் சுழன்று வரப் போகும் 'கொலம்பியா'வில் சாமான்கள் வைப்பதற் கான விசாலமான கார்கோ அறை உண்டு. ஐந்து சிறிய துணைக் கோள்களை அதில் வைக்கலாம். அல்லது இந்த விண்கலம் இன்னொரு சிறிய விண் கலத்தைத் தனக் குள்ளே சுமந்து செல்லலாம்.

50 அடி நீளமுள்ள இயந்திரக் கை ஒன்று இதன் சிறப்பான அமைப்பு. மனிதக் கரம் போலவே, தோள் பட்டை, முன் கை, மணிக் கட்டு என்கிற மூன்று மடிப்புக்களை உடைய இந்த இயந்திரக் கை கார்கோ அறையி லிருந்து துணைக் கோள்களைத் தூக்கி எடுத்து விண்கலத்துக்கு வெளியே விண்வெளியில் உல கைச் சுற்றி வர விடும்.

வானியலறிஞர்கள் மிகத் 'தெளிவாக நட்சத்திரங்களையும் ஒளிக் கூட்டங்களையும் பார்க்க வசதியாக 15422 கிலோ எடை யுள்ள டெலஸ்கோப் ஒன்றையும் இந்த ஷட் டில் எடுத்துச் செல்ல முடியும்.

ஆராய்ச்சியாளர்கள் இந்த விண்கலத்தில் அமைந்துள்ள ஆய்வுக் கூடத்தைப் பயன் படுத்திக் கொள்ளலாம். தங்கள் சொந்தக் கருவிகளை 200 பவுண்டு வரை விண்வெளி ஆய்வகத்தில் வைத்துக் கொள்ளவும் அனு மதிக்கப்படுவார்கள். இவை எல்லாம் எதிர் காலத் திட்டங்கள்.

இன்று கன்னிப் பயணத்தில் பரிசோதனை முயற்சியாக 'கொலம்பியா' 54 மணி நேரம் மட்டுமே செயல்படும். இந்த முதல் 'ஷட் டில்' பயணத்தில் செல்கிறவர் ஜான் யங் என்கிற ஐம்பது வயதுக்காரர். உடன் செல் கிற ராபர்ட் கிரிப்பன், இப்போதுதான் முதன் முறையாக விண்வெளிப் பயணத்தில் ஈடுபடுகிறார்.

ஜான் யங் ஏற்கனவே நான்கு முறை விண் வெளியில் பறந்தவர். நிலாத் தரையில் 71 மணி நேரத்துக்கு மேல் இருந்தவர்.

விண்வெளி ஷட்டில் கொலம்பியாவின் அமைப்பைப் படத்தில் காணலாம். முன்னால் விமானம் போன்ற தோற்றத்தில் உள்ளது தான் உலகைச் சுற்றி வரப் போகிற விண் கலம். இதுதான், பலரகத் துணைக் கோள் களையும் மற்றும் பல பரிசோதனைகளுக்கான உபகரணங்களையும் தன்னகத்தே கொண் டிருக்கிறது. யங்கும் கிரிப்பென்னும் இதில் தான் பயணப்படுகிறார்கள்.

இந்த விண்கல அமைப்புக்குப் பின்னால் உள்ள பெரிய கோபுர அமைப்பு விண்கலத் தின் இன்ஜின்களுக்கு 800 டன் எரிபொருளைத் திரவ ரூபத்தில் சுமந்து கொண்டிருக்கிறது.


அதற்கு இருபுறமும் உள்ள உயர்ந்த கோபுர அமைப்புக்கள் திட ரூபத்தில் எரி பொருளைக் கொண்டுள்ள பூஸ்டர் ராக்கெட் டுகள்.

முதலில் விண்கலத்தின் ராக்கெட்டும் பூஸ் டர் ராக்கெட்டுகளும் ஒரே சமயத்தில் இயங்கி மொத்த அமைப்பையும் உயரே எடுத்துச் செல்கின்றன. 28 மைல் உயரத்தில் பூஸ்டர் ராக்கெட்டுகளின் பணி முடிந்து அவை பிரிந்து கடலில் விழுகின்றன. அவற்றைக் கப்பல்கள் கண்டெடுத்து மீண்டும் பயணக் கேப் கென் னடி ராக்கெட் தளத்துக்குக் கொண்டு செல் கின்றன.

விண்கலமும் அதன் எரிபொருள் டாங்கும் பயணத்தைத் தொடர்கின்றன. டாங்கில் உள்ள எரிபொருள் அனைத்தும் தீர்ந்ததும் டாங்க் பிரிந்து விழுகிறது. பூமி மட்டத் துக்கு வரு முன்னர் வாயு மண்டல அழுத்தத் தின் பாதிப்பால் அது எரிந்து சாம்பலாக லாம். அல்லது கடலில் விழலாம்.

இனி விண்கலம் மட்டும் தனியே துணைக் கோளாகவே உலகைச் சுற்றி வரும். யங்கும் கிரிப்பென்னும் தங்களுக்குத் தரப்பட்டுள்ள பரிசோதனைகளைச் செய்வார்கள். பிறகு விண்கலம் பூமிக்குத் திரும்பும். அப்போது வாயு மண்டல அழுத்தத்தால் அது பாதிக் கப்படாதிருக்க – எரிந்து சாம்பலாகாதிருக்க– விசேஷப் பாதுகாப்புக்களைப் பெற்றுள்ளது. பூமி மட்டத்தில் ஒரு கிளைடர் விமானம் போல் சாதுவாகத் தரை தட்டுகிறது. கேப் கென்னடித் தளத்துக்கே திரும்பி வந்து அடுத்த பயணத்தைத் தொடரத் தயா ராகிறது!

-சுப்ரபாலன்


அரசியல்
கல்வி
மாணவர்கள்
என்ன, உங்க ஊர்லே குண்டர்கள் ராஜ்ஜியமா இருக்கு?... அடக்கி வைக்கக் கூடாதா?
மேற்கு வங்க இ.காங்கிரஸின் வன்முறைக் கிளர்ச்சி


இ.காங்கிரஸ் ஆட்சி
எனக்கொண்ணும் ஆபத்து இல்லை!..
அஸ்ஸாம்
பெரும்பான்மை இழந்த நிலை

# அமெரிக்கத் துப்பாக்கியும்; இந்திய அரிவாளும்!

ரேகன் சுடப்பட்டார் என்று அறிந்தபோது ஏற்பட்ட அதிர்ச்சி படிப்படியாக நீங்க, அவர் குணமடைந்து வருவது அறிந்து நிம்மதிப் பெருமூச்சு விடுகிறோம். மனைவியிடமும் டாக்டர்களிடமும் அவர் ஜோக் அடித்துக் கொண்டிருப்பதைப் பார்க்க வியக்கிறோம். மருத்துவ மனையிலேயே முக்கிய மசோதாக்களில் கையெழுத்திட்டு அளித்ததை அறிய மகிழ்கிறோம். மலையாக வந்த சோதனை பனியாக நீங்கியது. அமெரிக்க மக்களுக்கும் அவர்கள் ஜனாதிபதிக்கும் நமது நல்லெண்ணங்களைத் தெரிவித்து வாழ்த்துகிறோம்.

அமெரிக்காவில் துப்பாக்கிகள் பெருகிவிட்டன என்றும் அவற்றைக் கட்டுப்படுத்த அரசு எடுக்கும் முயற்சிகளை ஒரு சக்தி வாய்ந்த துப்பாக்கி ஆதரவுக் கும்பல் தோற்கடிக்கிறது என்றும் ரேகனுக்கே துப்பாக்கிகளைக் கட்டுப்படுத்துவதில் நம்பிக்கை இல்லை என்றும் பேசப்படுகிறது. ரேகன் சுடப்பட்ட சம்பவம், துப்பாக்கி உற்பத்தி, விநியோகம் இவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று விரும்பும் அமெரிக்கர்களின் கருத்துக்குப் பலமளிக்கிறது.

நமது புனித பாரத தேசத்திலோ துப்பாக்கிக்குக் கட்டுப்பாடு உண்டு; ஆனால் அரிவாள், கத்தி, நைலான் கயிறு, கருங்கற்கள், அமிலம், தீப்பந்தம் போலீஸ் தடி முதலிய பலவற்றுக்குக் கட்டுப்பாடே கிடையாது!

கைதிகள் குருடாக்கப்படுவதும், குருடர்கள் போலீஸ் தடியடிக்கு உள்ளாவதும், பஸ்களுக்குத் தீ வைப்பதும், எம்.எல்.ஏ. காரியாலயத்தில் பெண் தூக்கிலே தொங்குவதும், பட்டப்பகலில் நகைகளைக் கொள்ளையடிக்கப் பெண்மணிகள் குத்திக் கொல்லப்படுவதும், ஊர்வலங்கள் மீது கல்லெறிவதும் சர்வ சகஜமாகி விட்டன. சமீபத்திய செய்தி: மதுரை தியாகராஜர் பொறியியல் கல்லூரியில், கேவலம் கல்லூரித் தேர்தல் ஏற்படுத்திய பகைமையால் இரு மாணவர் கோஷ்டியினர் கத்தி, அரிவாள், தடி, சைக்கிள் செயின் ஆகியவற்றால் ஒருவரை ஒருவர் தாக்கிக்கொள்ள இரு மாணவர்கள் இறந்தனர்.

அமெரிக்கத் துப்பாக்கியானால் என்ன? இந்திய அரிவாளானால் என்ன? இரண்டும் ஒரே காரியத்தைத்தான் செய்கின்றன.

அடிப்படைக் கோளாறு, அண்ணல் காட்டிய அன்பு மார்க்கத்தை நம் தலைவர்கள் மறந்து கட்சி, ஜாதி, மதம், பொருளாதார ஏற்றத்தாழ்வு இவற்றின் பெயரால் பொறாமையையும் வெறுப்பையும் துவேஷத்தையும் மக்களிடையே வளர்த்து வருவதுதான்.

# பிராமணர்களின் வீழ்ச்சி!

தமிழ்நாடு பிராமணர்கள் சங்கம் பழனியில் மகாநாடு நடத்தியது. ஊர்வலங்கள், கோஷங்கள், சிலம்ப விளையாட்டுக்கள், சொற்பொழிவுகள், கலை இலக்கிய நிகழ்ச்சிகள் எல்லாம் அமர்க்களப்பட்டன.

மகாநாட்டுக்குத் தலைமை தாங்கத் திருவனந்தபுரத்திலிருந்து வந்த எஸ். சிவராமகிருஷ்ண அய்யர் ''பிராமணர்களின் வீழ்ச்சிக்குப் பிராமணர்களேதான் காரணம்'' என்று ஒரே போடாகப் போட்டுவிட்டார். ''அவர்கள் உன்னத லட்சியங்களை மறந்தார்கள்; தவத்தைத் துறந்தார்கள், எளிய உபயோகமான ஆன்மீக வாழ்விலிருந்து வழுக்கி விழுந்துவிட்டார்கள்'' என்றெல்லாம் துக்கப்பட்டிருக்கிறார். அவர் கண்ணீரைத் துடைத்துக்கொள்ள ஒரு கைக்குட்டை பரிசளிக்கலாம்!

பிராமணர்கள் மூக்கைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்த காலம் மலை ஏறி விட்டது. அவர்கள் எளிய ஆன்மீக வாழ்வு நடத்துவதால் இன்று அவர்களுக்

1981 ஏப்ரல் 12

ரௌத்திரி பங்குனி 30

மலர் : 39 இதழ் : 37



கல்கி



தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

கும் பயனில்லை; சமுதாயத்துக்கும் உபயோகமில்லை. ஜப தபம் செய்தபடி உட்கார்ந்து கொண்டிருந்தால் ஒரு அனந்தராம கிருஷ்ணனோ ஒரு சுந்தரம் அய்யங்காரோ தோன்றி இருக்க முடியாது. பிராமணர்கள் இன்றைய சூழலுக்கு ஏற்ப மாறித்தான் ஆக வேண்டும். விஞ்ஞானிகளாகவும், பொறி இயல் நிபுணர்களாகவும், டாக்டர்களாகவும், தொழில் அதிபர்களாகவும், வர்த்தகர்களாகவும் மளமளவென்று போட்டி போட்டுக்கொண்டு முன்னேறி நிறைய சம்பாதிக்க வேண்டும்.

அதே நேரத்தில் அவர்கள் டாம்பீகத்தை ஒதுக்கி சிவராமகிருஷ்ணன் குறிப்பிட்ட எளிய வாழ்வை மேற்கொள்ளும் மனப் பக்குவமும் பெறவேண்டும். ஈட்டிய செல்வத்தை ஜாதி, மத வித்தியாசம் பாராமல் பிறருக்கு நிரந்தரப் பயன் ஏற்பட முதலீடு செய்யவேண்டும். இதற்கு ஆன்மீக உணர்வு அவர்களுக்கு உதவும்.

தமிழ்நாடு பிராமணர்கள் சங்கம் இந்தக் கோட்பாடுகளை வளர்த்துக் கொண்டு பிராமணர்களுக்காக மட்டும் இயங்காமல் பிறர் துன்பம் துடைக்கவும் முன் வருமானால் அது மக்கள் அனைவரின் நன்மதிப்பையும் பெற்றுச் சிறந்தோங்கும்.

---

# கண் + காது + COMMENTS

(அங்கும் இங்கும் அலைந்த போது கண்களில் பட்டவைகளும் காதில் விழுந்தவைகளும்.)



● தங்கசாலையில் நடந்த ஒரு பட்டிமண்டபத்தில் கேட்ட ஜோக். (காவல் துறையினர் மன்னிக்க) ஒருவன் வீதி ஓரத்தில் சிறுநீர் கழித்துக் கொண்டிருந்தான். அப்போது அவன் நண்பன், ''டேய்... ரோடு ஓரத்தில் சிறுநீர் கழித்தால் போலீஸ் பிடிச்சுட்டுப் போயிடும்'' என்று கூறவே, சிறு நீர் கழித்துக் கொண்டிருந்தவன் அமைதியாகக் கூறிய பதில்: ''தரையில்வீணாகப்போவதைப் போலீஸ் பிடிச்சுட்டுப் போவது பற்றி எனக்கு ஆட்சேபனை இல்லை...'' பட்டிமண்டபங்கள் உணர்ச்சி வேகத்தில் எவ்வளவு கீழ்த்தரமாகி விடுகின்றன என்பதற்கு இது ஓர் எடுத்துக் காட்டு.




● தன் வீட்டின் எண்ணின் கூட்டுத் தொகை எட்டு என வருவதை விரும்பாத ஒரு தொழிலதிபர் தன் கார் ஷெட்டை வீடாக மாற்றி அதற்கு ''8'' என்ற எண் வரச் செய்து, தன் வீட்டு எண்ணின் கூட்டுத் தொகையில் '8' வருவதைத் தவிர்த்துவிட்டாராம்.

● சென்னை விமான நிலையத்தில் ஆண்கள் பெண்கள் கழிப்பறைகளைக் குறிக்க 'ஒப்பனை ஆண்கள்,' 'ஒப்பனைபெண்கள்' என்ற அறிவிப்புக் காணப்படுகிறது. இவை ''மேக்கப் மென்'', ''மேக்கப் விமன்'' என்றல்லவா பொருள் படுகிறது?

● தலைமைச் செயலகத்தின் வருவாய்த் துறையில் பணி புரியும் ஒரு செக்ஷன் ஆபீஸர், இனிமேல் தனக்குக் குழந்தைகள் வேண்டாம் என முடிவு செய்ததும், கடைசி மகளுக்கு இட்ட பெயர், ''போதும்ராணி!''


● வி. ஜி. பி. 'கோல்டன் பீச்'சில் தேனிலவு ஜோடிகளுக்கு மட்டும் ''ஹனிமூன் காட்டேஜ்'' என்ற பெயருடன் அலங்காரமிக்க அறை வாடகைக்கு விடப்படுகிறது.

● 'யானை வாங்கியவனிடம் அங்குசம் வாங்கக் காசில்லை' என்ற பழமொழிக்கு எடுத்துக் காட்டு சென்னை வானொலி–தொலைக் காட்சி நிலையங்கள். இவ்விரண்டிலும் ஆங்காங்கே 'குளிர் நீர்' அமைப்புகள் ஏற்பட்டிருந்தும், டம்ளர்கள் வைக்கப்படவில்லை. கோவில் தீர்த்தம் போல் கையில் நீரை ஏந்திக் குடிக்க வேண்டியுள்ளது. அட்லீஸ்ட் சங்கிலியுடன் கூடிய டம்ளர்களையாவது வைக்கக் கூடாதா?

● ஒரு பள்ளியின் சோதனைச் சாலையில் படப்பிடிப்பு நடத்த எண்ணிய பாலாஜியிடம், ''தவளைகள் வாங்கப் பணம் வேண்டும்'' என ஆசிரியர்கள் கூறியபோது அவர் நீட்டியது நூறு ரூபாய் நோட்டு.

● அரசு அலுவலகங்களுக்கும் பெண்கள் பெயரின் கவர்ச்சி தேவைப்படுகிறது. குறளகத்தில் புதிதாகச் செயல்படும் ஓர் அரசு அலுவலகத்தின் பெயர் 'தாரா' Tamilnadu Rural Reconstruction Association என்பதன் சுருக்கமாம் இது.

—தொகுப்பு: யெம்ஜி



# ஏழாண்டு இல்வாழ்க்கை!



திருமணமாகி ஏழாண்டுகள் ஆனால் கணவனுக்கு மனைவியிடம் அலுப்புத் தட்ட ஆரம்பிக்குமாம். சுற்று வட்டாரத்தில் உள்ள நங்கையரை நோட்டம் விட ஆரம்பிப்பானும்! மேல் நாட்டில் SEVEN YEAR ITCH என்பார்கள்!

இங்கே எப்படி?

இந்த வருஷத்தில் உங்களுக்குத் திருமணமாகி ஏழு ஆண்டுகள் பூர்த்தி ஆகிறதா? அப்படியானால் மே மாதம் முழுவதும் கல்கியில் இந்தப் பக்கம் உங்களுக்குச் சொந்தம்.

மனைவியை அல்லது கணவனை முன்னிலும் அதிகமாக நேசிக்கிறீர்களா? அல்லது குறைவாகவா? காரணம் என்ன?

சுருக்கமாக, சுவையாக எழுதுங்கள். முழு விலாசத்துடன் கணவன் மனைவி இருவரும் கையொப்பமிட வேண்டும். பிரசுரமானால் சன்மானம் உண்டு. படம் அனுப்பலாம்.

உறையின் மேல் 'ஏழாண்டு இல்வாழ்க்கை' என்று குறிப்பிடவும். திருப்பி அனுப்புதல், கடிதப் போக்குவரத்துக் கிடையாது.

அயான் பிளெமிங் மறைந்து விட்டார். ஆனால் அவர் உருவாக்கிய ஜேம்ஸ் பாண்ட் கதாபாத்திரம் சிரஞ்சீவித் தன்மை பெற்று விட்டான். டார்ஜான் போல் புதிய புதிய கதைகளில் இந்த ஒற்றன் சாகசங்கள் புரிந்த வண்ணம் இருக்கிறான். மீண்டும் ஒரு ஜேம்ஸ் பாண்ட் திரைப்படம் உருவாகியுள்ளது.

முதலில் ஒரு பிரிட்டிஷ் நீர்மூழ்கிக்கப்பலும் அடுத்து ஒரு ரஷ்ய நீர்மூழ்கியும் திடீரெனக் கடலிலிருந்து மாயமாக மறைந்து விடுகின்றன. ஆஸ்திரேலியாவில் விடுமுறையில் இருக்கும் பிரிட்டிஷ் துப்பறியும் வீரன் ஜேம்ஸ்பாண்ட் (ரோகர் மூர்) 007க்கு உடனே லண்டன் வருமாறு உத்தரவு பிறக்கிறது. அவனிடம் மர்மத்தை விடுவிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்படுகிறது.

கடலுக்கடியில் ஒருமாபெரும் நகரத்தையே வைத்திருக்கும் ஸ்ட்ராராம் பெர்க் என்பவன் இதுபோன்ற சப்மரீன் மறைவுகள் நிகழாமலிருக்கப் பணக்கார நாடுகளிடமிருந்து ஒரு பெருந் தொகையை அச்சாரமாகக் கேட்கிறான். அவனது இந்த நாசகாரச் செயலுக்கு உறுதுணை ஜாஸ் என்கிற ஏழு அடி உயரமுள்ள ஒரு பயங்கர மனிதன்.

ஜேம்ஸ் பாண்டைப் போலவே அன்யா என்கிற அழகிய ரஷ்ய உளவாளிப் பெண்ணும் ருஷ்ய அரசால் இதே பணிக்கு அனுப்பப்படுகிறாள். இருவரும் சந்தித்துக் காதலிக்கிறார்கள்.

ஸ்ட்ராம்பெர்க்கின் ஆட்கள் பாண்டைத் துரத்தும்போது கடலைக் கிழித்துச் செல்லும் ஒரு நவீன காரில் அன்யாவுடன் தப்பி விடுகிறான், பாண்ட்.

அடுத்து ஒரு அமெரிக்க நீர்மூழ்கியில் 007ம் அன்யாவும் சென்று ஸ்ட்ராம்பெர்க்கின் ரகசியங்களை அறிய முற்படும்போது இருவரும் ஸ்ட்ராம்பெர்க்கினால் கைது செய்யப்படுகின்றனர். அழகி அன்யாவுடன் ஸ்ட்ராம்பெர்க் அளவளாவிக் கொண்டிருக்கும் வேளையில், 007 தந்திரமாகச் செயல்பட்டும் வீரத்துடன் சண்டையிட்டும் கொடியோரை அழிப்பதுட.ன் ரஷ்யா—அமெரிக்கா இரு நாடுகளை நோக்கி அணு ஆயுத இலக்கு வைக்கப்பட்டிருந்த சப்மரீன்களைத் திசை திருப்பி அந்நாடுகளை அழிவிலிருந்து காப்பாற்றி அன்யாவை அழைத்துப் போய்விடுகிறான். சிலிர்க்க வைக்கும் சாகசங்கள், பிரமிக்க வைக்கும் அரங்க அமைப்புக்கள். —டி.எம்.ஆர்.

## THE SPY WHO LOVED ME



# சுவர்ணமுகி

## ஸ்ரீவேணுகோபாலன்

**முன்கதைச் சுருக்கம்**

திருவேங்கடமலையின் வட்டாரம். பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதி. வெள்ளைக்காரர்கள் வியாபாரிகளாகவும், யாத்திரிகர்களாகவும் நாட்டில் ஊடுருவி விட்டார்கள்.

திருவேங்கட மலையிலிருந்து சுவர்ணமுகி இறங்கிக் கொண்டிருந்தாள். காலிகோபுரம் வந்ததும் சுவர்ணமுகி திரும்பிப் பார்த்தபோது, அவளது துணைகளான மலையினத்தைச் சேர்ந்த பூங்கருவும், அவள் கணவன் உம்மனும் பின்னால் வந்து கொண்டிருந்தனர்.

சுவர்ணமுகிக்கு அடிவாரத்தில் பல்லக்கு காத்திருந்தது. அதில் ஏறிச் சென்றாள் சுவர்ணமுகி. பல்லக்கு மாடவீதி வந்ததும் "நிறுத்துங்கள்" என்றாள். சுவர்ணமுகி ராஜவீதியைப் பார்த்தபடி, "யாரையும் காணவில்லையே!" என்று கேட்டபோது 'பஞ்சம்' என்ற பதில் வந்தது. வீதி அலங்கோலமாகக் காட்சி தந்தது.

ராஜ வீதியில் மூன்று பரங்கியரைச் சுற்றி எளிய ஜனங்கள் அமர்ந்து அடிமை வியாபாரம் செய்தனர்.

ஒரு குதிரைவீரன் விலாவிலும் கழுத்திலும் ரத்தம் பெருக்கவந்து, குதிரை சுருண்டுவிழ அவனும் விழுந்தான். இடிந்த குரலில் சுவர்ணமுகியிடம், "தாங்கள் யார்? அது சுவர்ணமுகியின் பல்லக்கா?" என்று தாழ்ந்த குரலில் வினவினான்.

"ஆம்! சுவர்ணமுகியின் பல்லக்கு. நான் அவள் சேடி!" என்றாள் சுவர்ணமுகி.

"சண்டையில் சுவர்ணமுகியின் தந்தை வீரமரணம் அடைந்து விட்டார் என்று அவளிடம் சொல்லுங்கள்!" என்று கூறிவிட்டு அந்த வீரன் சுருண்டு விழுந்தான்.

● ● ●

The civil war brought about a great famine and the people were reduced to such pitiable condition that parents sold their children for keeping their body and soul together. Children were sold at the rate of five fanams worth of rice. European merchants bought these human merchandise and exported them to Foreign Countries.
- MORELAND

### 2

சுவர்ணமுகி திகைத்தாள்.

விருட்டென்று ஓடி வீரன் பக்கம் வந்தாள். அவன் முகம் அதற்குள் கூம்பியிருந்தது. கண்கள் மூடிவிட்டன. தரையோடு தரையாக அவன் பரவிக் கொண்டிருந்தான்.

''ஐயா!'' என்றாள் ஒரு முறை. ''ஐயா!'' என்றாள் இரண்டாம் முறை. பிறகு தோளைப் பற்றி உலுக்கினாள்.

திடீரென்று உயிர் பற்றியது போல் அவன் விழித்தான். அவளைப் பிரமிப்புடன் பார்த்தான். கோபம் வந்தது. ''இன்னும் போகவில்லையா?'' என்று அதட்டினான்.

''எங்கே?'' என்றாள் அவள்.

''எங்கேயாவது. இல்லாவிட்டால் சுவர்ணமுகிக்கு ஆபத்து.''

''இதோ போகிறோம். அதற்குள் ஒரே ஒரு கேள்வி. சண்டையில் யார் ஜெயித்தார்கள்?''

''இம்மராஜா!''

சுவர்ணமுகி முகத்தைத் திருப்பினாள். அதிர்ஷ்டம் அவள் பங்கில் இல்லை. எங்கேயோ பறந்து விட்டது.

கண்களில் நீர் துளிர்த்தது. சுருக்காகத் துடைத்தாள்.

பிறகு, ''ஐயா! உடம்பெல்லாம் ரணம்! உங்களுக்கு உதவி வேண்டாமா?'' என்றாள்.

''உதவி?'' என்றான் அவன். ''யார் என்ன செய்ய முடியும்? நான் இறந்து கொண்டிருக்கிறேன். என் கல்யாணி உயிருடன் இருக்கிறாளா?''

கல்யாணி அவன் குதிரை.

''இறந்து விட்டாள்.''

''நல்லது. என் முடிவு இனி இங்கேதான். கொஞ்சம் தண்ணீர் கொடுக்கிறீர்களா?''

பல்லக்கிலிருந்து கொணர்ந்து கொடுத்தாள்.

பருகியதும் சிறிதுதெம்பு கண்ணில்வந்தது.

''உங்கள் பெயர்?''

''கங்கா!''

''சுவர்ணமுகியின் சேடியா?''

''ஆமாம்.''



''நல்லது. இன்னும் ஒரு உதவி செய்வீர்களா?''

''செய்கிறேன்.''

''என்னை இழுத்து அந்த நிழலில் விடுங்கள்! சாகும்போது இதமாகச் சாக விரும்புகிறேன்.''

எழுந்தாள். அவன் கைகளைப் பற்றி மெதுவாக இழுத்தாள். அருகில் உடை மரம். கீழே அதன் தரித்திர நிழல். அதுகூட கானலில் வெளிறியிருந்தது.

''இனிமேல் சந்தோஷமாக இறப்பேன். நீங்கள் போகலாம்.''

அவள் தயங்கி நிற்க அவனுக்குக் கோபம் வந்தது. ''நீங்கள் போகலாம் என்று சொன்னேன். ஏன் நிற்கிறீர்கள்? ஆபத்து எந்தக் கணமும் இங்கே வரும். போங்கள்... போங்கள்.''

அவள் தயக்கமுடன் புறப்பட்டாள்.

நான்கு அடிகள் போயிருக்க மாட்டாள். ''கங்கணா!'' என்று அழைத்தான். திரும்பினாள்.

''போகும் வழியில் கிடைக்கும் தண்ணீரை அருந்தாதீர்கள்.''

''ஏன்?''

''எல்லாக் கிணறுகளிலும் விஷம் கலந்திருக்கிறார்கள் எதிரிகள்.''

''நல்லது'' என்று சொல்லி அவள், நாலு அடி எடுத்து வைத்தாள். அவன், ;

''கங்கணா!'' என்றான்.

திரும்பினாள்.

''எப்போதாவது வேட்டுப்பள்ளி போனால் கங்கம்மா என்று விசாரியுங்கள்!''

''சரி.''

''அவள் என் தாயார்! கடைசிவரை அவளை நினைத்தேன் என்று சொல்லுங்கள்.''

''சரி.''

''பாலாற்றங்கரையில் எனக்குக் கிரியை பண்ணச் சொல்லுங்கள்.''

''ம்.''

''போங்கள், போங்கள் சீக்கிரம்.''

தயக்கத்துடன் திரும்பினாள். பல்லக்கு வரை நடையிட்டாள். சிறிது நேரம் நின்றாள். பிறகு ஒரு வேதனையில் அவன் பக்கம் திரும்ப ஓடிவந்தாள்.



அதற்குள் அவன் அமிழ்ந்திருந்தான். கண்கள் மூடிவிட்டன. வாயிலிருந்து ரத்தம் சிந்தியது. தரையில் புழுதியோடு அழுந்தினான். உலகத்தை அநேகமாக மறந்துவிட்டான்.

**ப**ல்லக்கு பகல் முழுதும் பயணித்தது. எங்கும் தீ மெழுகியிருந்தது. சுவர்ணமுகி வழக்கமாகப் பார்க்கும் காட்சிகளைப் பார்க்க முடியவில்லை. அந்தப் பச்சைப் பசேல் சோலைகளும், புகை மூடிய மலைகளும் எங்கே?

மனசில் வேதனைப்பட்டாள்.

வெளிப்புறத்தைப் பார்க்க இயலவில்லை.

அப்படி ஒரு தீ ஜொலிப்பு. பூமியின் மேற்புறங்கள் ஆவியாக நெளிந்தன. மலைகள் வெறும் மொட்டைத் தரைகளாகத் தெரிந்தன. ஓடைகளில் வெளீர் என்று மணல் தெரிந்தது. வயல், வரப்புகளில் ஒருதுண்டுப் புல் இல்லை. எல்லாம் தரிசை, தரிசை!

ஒரு ஜீவராசியையாவது எங்கேயாவது பார்க்க வேண்டுமே!

இல்லை.

இத்தனை நாள் வீட்டுக்குள் இருந்தாள். வெளிப்புற உலகம் தெரியவில்லை. வளர்ப்புத் தந்தை ரங்கப்பா பலமுறை சொல்லியிருக்கிறார். கடந்த பதினைந்து ஆண்டுகளாக நாட்டில் நடப்பது சண்டைதான். அதுவும் கிரீடத்துக்காகச் சண்டை. சொந்த மனிதர்களுக்குள் சண்டை.

இதில் கையில் பலம் உள்ளவர்கள் எல்லாம் ஊரில் புகுந்து சூறையாடுகிறார்கள். அநியாய வரி விதிக்கிறார்கள். வீட்டுக்குள் புகுந்து நகைகளைக் கேட்கிறார்கள். இந்த லட்சணத்தில் ஜனங்கள் எப்படித் தங்கள் கடமைகளைச் செய்வார்கள்? விவசாயத்தை யார் கவனிப்பார்கள்? வியாபாரத்தை யார் பெருக்குவார்கள்?

அந்தி நெருங்கும்போது நாராயணவனத்தை அடைந்தார்கள்.

ஊரின் விளிம்புக்கு வந்ததும் போகிகள் நின்றார்கள். "அம்மா!" என்றான் உய்யன். "கொஞ்சம் இறங்கிப் பார்க்கிறீர்களா?"

பல்லக்கு இறங்கியது.

சுவர்ணமுகி வெளியே வந்தாள்.

என்றுமே அந்த மலைச் சூழல் அவளுக்குப் பெரும் உற்சாகம் தருவதுண்டு.

இறங்கிச் சுற்றிலும் பார்த்தாள்.

நகரி மூக்குத் தெரிந்தது.

அதைப் பார்த்ததும் திரும்பினாள். "உய்யா தீபம் ஏற்றவில்லையா?" என்றாள்.

தினமும் அந்த மலை முகட்டில் தீபம் ஏற்றுவார்கள். அது தீபஸ்தம்பமாக எரியும். கிழக்குக் கடற் கரையில் செல்லும் கப்பல்களுக்குத் திசை காட்டும்.

அந்தத் தீபம் இன்று எரியவில்லை.

"என்ன விஷயம்?" என்றாள் ஸ்வர்ணமுகி.

"அதைத்தான் நானும் கேட்கிறேன்" என்றான் உய்யன்.

"ஊரில்கூட விளக்குகள் இல்லை. அம்மா!" என்றான் பூங்கரு.

ஊர்ப் பக்கம் பார்த்தாள்.

அதற்குள் அந்தத் திசை கருகியிருந்தது. ஒரு மூடி போல இருட்டு எல்லாவற்றையும் மூடியிருந்தது.

"நம்ப ஊரா?" என்றாள் சுவர்ணமுகி.

"ஆமாம், தெரியலையா?" என்றான் பூங்கரு.

"ஏன் இப்படி இருக்கிறது? ஜனங்கள் இல்லையா?"

"தெரியவில்லை அம்மா. எனக்கே பயமாக இருக்கிறது."

சுவர்ணமுகி யோசித்தாள்.

"ஒருவேளை ரங்கப்பா இறந்தது ஊருக்குத் தெரிந்து விட்டதோ? அவர்கள் துக்கம் கொண்டாடுகிறார்களோ?"

வியப்புடன் ஊர்ப் பக்கம் பார்த்தாள்.

ரங்கப்பாவின் மாளிகைதான் அவளது வாசஸ்தலம். அதற்கு ஊருக்குள் புகுந்தும் போகலாம். வெளிப்புறம் வழியாகவும் போகலாம்.

"வீதி வழியாகப் போகலாம்" என்றாள் அவள்.

பல்லக்குப் புறப்பட்டது.

ஊரைச் சீக்கிரம் அணுகியது. வீதிக்குள் போனதும் "உய்யா!" என்றாள் சுவர்ணமுகி.

"அம்மா!"

"வீடுகளில் ஒரு பொட்டு வெளிச்சம் இல்லையே!"


ஊரில் ஏற்கனவே சுபிட்சம் குறைந்து அதன் லட்சுமிகரம் மறைந்துவிட்டது.

ஜனங்கள் சீக்கிரமாக உண்டார்கள். சீக்கிரமாக உறங்கினார்கள். நீண்ட நேரம்

### தயவுசெய்து சிரிக்கவும்!

வில்லியம் ஃபால்கனர் வெளிநாட்டில் பிரபலமான எழுத்தாளர். ஒருதடவை இவர் ஜப்பானியர்கள் கூட்டத்தில் பேசும்போது ஆங்கிலத்தில் ஒரு நகைச்சுவைச் சம்பவத்தை பதினைந்து நிமிடங்களுக்கு விளக்கிக் கூறினார். அதை இரண்டே நிமிடத்தில் கூட்டத்தினருக்கு மொழி பெயர்ப்பாளர் ஜப்பானிய மொழியில் கூறியபோது சபையோர்கள் சிரித்து மகிழ்ந்தனர். "நான் பதினைந்து நிமிஷம் சொன்ன விஷயத்தை எப்படி இரண்டே நிமிஷத்தில் விளக்கி விட்டீர்கள்!" என்று வியந்தார் வில்லியம். "நான் சொன்னதெல்லாம் இதுதான்: திருவாளர் பால்கனர் ஒரு நகைச்சுவைச் சம்பவத்தைக் கூறியுள்ளார். தயவுசெய்து அனைவரும் சிரிக்க வேண்டும்" என்று பதில் வந்தது மொழிபெயர்ப்பாளரிடமிருந்து!

- ஜி. நடராஜன்



விளக்கு வைக்கும் வீடுகள் மிக சொல்பமாகவே இருந்தன.

இப்போது அந்தச் சொல்பங்களிலும் விளக்குகளைக் காணோம்.

''பேச்சுக் குரல் கூட இல்லையே!'' என்றாள் சுவர்ணமுகி. உய்யன் கூட அதைக் கண்டு அதிசயப்பட்டான்.

வீதி நிசப்தமாக இருந்தது. ஒரு துளி சலனம் இல்லை. கனவு உலகத்தில் போவது போல் பிரயாணித்தார்கள்.

ஊர் வீதியைத் தாண்டியதும் அதற்கு அப்பால் சிறிது தூரம் சென்றால் அருணா ஆறு.

அந்த ஆற்றின் ஓரமாக அமைந்திருந்தது வேங்கடகிருஷ்ண விலாச மாளிகை.

ரங்கப்பரின் மாளிகை அது.

சுற்றிவர மண் அரணோடு நிற்பது விஸ்தாரமான தோட்டம். சின்னக் குளம். நடுவில் மாளிகை.

பல்லக்கு அரணுக்குள் நுழைந்தது. சுவர்ணமுகிக்கு வேதனை எழுந்தது. ரங்கப்பாவின் மரணத்தை எப்படி வேங்கடம்மாவிடம் சொல்லப் போகிறோம். வளர்ப்பு அம்மாவாக இருந்து அவள் மீது அன்பைப் பொழிபவள் வேங்கடம்மா. தவிர, ரங்கப்பாவுக்கு இணைபிரியாத மனைவி. அவளிடம் போய் எப்படிச் செய்தியைத் தெரிவிப்பது?

அவளைத் தவிர, அவர்கள் மகன் சந்திரகிருஷ்ணனிடமும், மகள் திவ்வியப் பிரபாவிடமும் எப்படித் தெரிவிப்பது?

ஆச்சரியமாக மாளிகைக்குள் விளக்குகள் அதிகம் தெரியவில்லை.

எப்போதும் ஐம்பதுக்கு மேல் விளக்கு ஏற்றி லட்ச தீபம் போல்" ஜொலிக்கும் மாளிகை.

இப்போது மங்கலான உட்புறமுடன் தெரிந்தது.

வாசலில் போய் இறங்கினாள்.

''அம்மா, அம்மா!'' என்று சொல்லி, உள்ளே போனாள்.

போகிகள் விடை பெற்றுப் போனார்கள்.

உய்யனும் பூங்கருவும் வாசலிலேயே நின்றார்கள்.

தாழ்வாரத்தைக் கடந்து நடைக்குப் போனாள். வீடு நிசப்தமாக இருந்தது. எல்லோரும் எங்கே?

இதற்குள்ளாக விஷயம் தெரிந்து வீட்டை விட்டுப் போய்விட்டார்களா?

நடையில் எரிந்த தீவர்த்தி ஒன்றுதான் வீடு முழுதும் சிறிது பிரகாசத்தைக் கொடுத்தது.

தீவர்த்தியை எடுத்தாள். ''அம்மா!'' என்று அழைத்து வேங்கடம்மாவின் அறைக்குள் சென்றாள்.

கதவு திறந்திருந்தது.

உள்ளே படுக்கை அறையில் வேங்கடம்மா படுத்திருந்தாள். அவள் மீது போர்வை போர்த்தியிருந்தது. சந்தேகத்தோடு அதை விலக்கியபோது கண்கள் மிரண்டு நின்றன.

அவள் மார்பில் கத்தி ஒன்று செருகப்பட்டிருந்தது. ரத்தம் இருபுறமும் புதிதாக வழிந்திருந்தது.



அருள்வாக்கு

## சமய ஒருமைப்பாடு

உலக சரித்திரத்தில் பல தேசங்களில்பல காலங்களில் பல மகான்கள் தோன்றி, பரதத்துவமாய் அமைந்த உண்மைகளை அவர்களுடைய மனத்துக்குப் புலனாகும்படி செய்து தங்களைப் பின்பற்றுவோருக்கு அவைகளை எடுத்துக் கூறி புது சமயம் போல் தோற்றுவித்தார்கள். இந்தச் சமயங்களின் சில கோட்பாடு, வேறுபாடுகள் ஜனங்களுடைய மனோபாவத்துக்கு அமைந்தபடி இருக்கலாம். ஆனால் எல்லா மதங்களிலும் அடிப்படையாக நல்வாழ்வு, பக்தி என்கிற ஒரு சமயத்தின் அவசியமான மார்க்கங்கள் ஒன்றேதான். வேதத்தின் சாரம்தான் எல்லா சமயங்களும்.

சமயங்களின் கொள்கைகள்வேறுபடலாம். அவைகள் ஒன்றுக்கொன்று முரணாகத் தோன்றலாம். ஆனால் சமய மனப்பான்மை அவைகளுக்கெல்லாம் ஒன்றுதான். கொள்கைகள் நம்மைப் பிரிக்கலாம். ஆனால் பக்தி நம்மை ஒன்று சேர்க்கும். நாமெல்லோரும் ஒரே கடவுளின் குழந்தைகள்.

சமயங்களெல்லாம் இறைவனை நாம் அடைவதற்கு இறைவனாலேயே அமைக்கப்பட்ட பல பிரிவுகள். அவை நம்முடைய சக்திக்கும் ருசிக்கும் தகுந்தவாறு பிரிவுபட்டு இருக்கின்றன. பகவான் கீதையில் ''மனிதர்கள் என்னைப் பலவாறாக எந்த ரூபத்திலும் எப்படி வணங்கினாலும் அவரவர்களுடைய பக்தியை நான் வேரூன்றச் செய்கிறேன்'' என்று கூறியிருப்பது இதற்குச் சான்றாகும். இதை நாம் அறிந்து கொண்டால் சமயச் சச்சரவுகளும் சண்டைகளும் நம்மில் ஏற்படக் காரணமில்லை.

—காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

''அம்மா!'' என்றாள். கிட்டத்தட்ட புலம்பல் போல் வார்த்தை வந்தது.

நடுக்கத்துடன் தீவர்த்தியை எடுத்துக் கொண்டு அடுத்த சந்திரகிருஷ்ணன் அறைக்குப் போனாள்.

அவன் கீழே படுத்திருந்தான்.

பாக்யராஜின் முன்னுரை:

இப்படத்தில் வரும் காட்சிகள் இரண்டரை மணி நேர நகைச்சுவை பொழுது போக்குக்கு மட்டும் முக்யத்துவம் கொடுத்து எடுக்கப்பட்டவை. எதையும் மனத்தில் கொள்ள வேண்டாம்.

ஒரு பெண்ணுக்காக மூன்று உயிர் நண்பர்கள் போட்டி போட்டு ஒருவன் மட்டும் (அதாவது கதாநாயகன்) ஜெயமடையும் கதை. மற்றபடி படம் பூரா.

ஹஹஹஹா ஹஹஹஹா ஹிஹிஹி ஹா ஹோ.

(ஏங்க தங்கச்சியை ஒரு தடவை கூப்பிடுங்க. கடைசியா பார்த்துக்கறேன். டேய் நீங்களும் பார்த்துக்கங்கடா!)

ஹஹ்ஹஹ்ஹஹா ஹஹா ஹா ஹிஹிஹி.
ஹஹா ஹஹா ஹஹ்ஹஹா ஹிஹிஹி.
(நான் எப்போதும் நாய்களிடமிருந்து தப்பிக்கப் பயன்படுத்துவது கிராக்ஜாக் பிஸ்கட்டுகளே.)
ஹிஹிஹி ஹோஹ்ஹோ ஹோ ஹாஹா.
(குடுகுடுப்பக்காரன் சொல்லியிருப்பானே கருப்பு சட்டை, வெள்ளை பாண்ட், கருப்புச் சட்டை வெள்ளை பாண்ட்.)

ஹோஹா ஹிஹிஹி ஹிஹிஹி ஹா.
—என்ன இருந்தாலும் காலேஜ் பையனை இப்படியா அடிப்பது?
—நோ. கமெண்ட்ஸ் முன்னுரை நினைவிருக்கா?
—அதுதான் போகட்டும், ஒட்டாத ரௌடிகள் கடைசியில் தேவையா?
—முன்னுரை ப்ளீஸ்!
—ஓவர் காமெடில கிளைமேக்ஸ் ஸ்பீடு டவுன். ஸ்கூட்டர் சமாசாரம் ஓவர்.
—முன்னுரை ப்ளீஸ்!
—ஓ.கே. மத்த ரெண்டு பேர் குழன்றுகொள்ள பாக்யராஜ் மட்டும் தலை நிறையச் சாணிகளுடன் வரும் பரிதாபம் பாக்யராஜுக்கே உரித்தானது. இருந்தாலும் ஒரு பெண்ணுக்காக இப்படியா... சரிசரி நினைவுக்கு வருகிறது.

கடைசிலே சண்டையில் ஒருவன் ஹிந்தி பண்டிட்டை போட்டு அடிக்க, "ஏம்பா நான் என்ன தப்பு பண்ணேன்" அவர் விழிக்க "நீங்க தப்பு பண்ணலை. எனக்குத்தான் அடிக்க வேற ஆள் கிடைக்கல" அவன் சொல்ல

ஹிஹிஹி ஹிஹி ஹி ஹிஹிஹிஹிஹி
ஹா ஹாஹா ஹா ஹா ஹா ஹாஹா ஹாஹா.
இவ்வளவு நேரம் சிரித்து ரொம்ப நாளாச்சு.

—நளினிசாஸ்திரி

## இன்று போய் நாளை வா!



அவனது போர்வையை நீக்க வேண்டியதில்லை. வெளியில் பார்க்கும்போதே ரத்தக் கறைகள் பளீரென்று மின்னின.

திவ்யப்பிரபா அறைவாசற்படியிலேயே கிடந்தாள்.

• • •

சீவர்ணமுகியின் கண்கள்வெளிறின.

நடுக் கூடத்துக்கு வந்தாள்.

கைகளில் தீவர்த்தியைப் பிடிக்க முடியவில்லை. உடல் அவ்வளவு பதறியது.

வீட்டில் எதிரிகள் வந்து விட்டார்களா?

இந்தச் சண்டையில் முக்கிய அங்கம் வகிப்பவர் ரங்கப்பா என்று அவர்களுக்குத் தெரியுமா?

தெரிந்துதான் அவர் குடும்பத்தையே நாசம் செய்ய வந்து விட்டார்களா?

அந்த வீட்டில் அவளும் தங்கியிருந்திருந்தால் கொலை செய்யப்பட்டிருப்பாள்.

திருப்பதிக்குப் போய்விட்டதால் தப்பினாள்.

தப்பினாளா? அல்லது....

தீவர்த்தியைக் கீழே போட்டாள். "உய்யா! உய்யா!" என்று சொல்லி வெளியில் வந்தாள்.

• • •

வெளியே இருட்டு மயம்.

உய்யனிடமிருந்து மறுகுரல் வரவில்லை.

ஆனால் வாயில் நடுவே நிற்கும் உருவம் என்ன?

"உய்யா! பூங்கரு!"

வெளிப்புறம் வர ஒரு வஜ்ஜிர பலக் கை அவள் கையைப் பற்றியது.

'ஆ' என்று அவள் அலறல் அந்த நிர்மானுஷ்ய வீட்டில் எதிரொலித்தது.

"போ உள்ளே!" என்று ஒரு கட்டையான குரல்.

தாழ்வாரத்தைத் தாண்டி நடைக்குள் அவளை நெட்டிக் கொண்டு போக,

கூடத்தில் கீழே விழுந்த பின்னும் எரிந்து கொண்டிருக்கும் தீவர்த்தி வெளிச்சத்தில்,

அந்த உருவம் தெரிந்தது.


எப்போதோ ஒரு முறை பார்த்த உருவம்.

(தொடரும்)


''எனது கூந்தல்
அடர்த்தியாகவும் பட்டுப்
போல் மிருதுவாகவும்
வளரக் காரணம்''
V.V.D
தேங்காய்
எண்ணெய்
உங்கள் தேவைக்கேற்றபடி
பலவித பாக்கிங்குகளில்
கிடைக்கின்றது.
V. V. தனுஷ்கோடி நாடார் & சன்ஸ்
தூத்துக்குடி-628 001
V.V.D
COCONUT OIL
EP-VVD-1005




# அச்சமளித்த வீட்டில் அதிர்ஷ்டம் அடித்தது!



"பேய் வீட்டுக்கா போகச் சொல்றீங்க?" என்று கலக்கத்துடன் கேட்டார் ராதிகா.

மிகப் பிரபலமாகப் பத்திரிகைகளில் அடிபட்ட இந்திரா நகர் கொலை நினைவிருக்கிறதா? அந்த வீட்டைத்தான் இவர் குறிப்பிட்டார். அந்த வீட்டில் இப்பொழுது வசித்துக் கொண்டிருக்கும் திரு ராம் ரெட்டியிடம் அனுமதி வாங்கிக் கொண்டு ராதிகாவை உணவு இடைவேளையின்போது அழைத்துச் சென்றேன். போகும்போதே ராதிகா சொன்னார்: "கொலை நடந்து எல்லோரது கவனத்துக்கும் ஆளாகியிருந்த வீட்டிற்கே நான் வந்து சேருவேன் என்று நினைக்கவேயில்லை. அப்பா எம். ஆர். ராதா எப்பொழுதாவதுதான் வீட்டுக்கு வருவார். அம்மாவோ ஒரு நாள் சென்னை என்றால் ஒன்பது நாள் வெளி நாடு. இந்த நிலையில் நானும், என்னுடன் நெருங்கிப் பழகும் ஒரு தோழியும் தனியாக இந்த வீட்டில் தங்கியிருந்தோம் என்றால் எங்கள் தைரியத்தை நீங்கள் மெச்ச வேண்டும்தானே! சில சமயம் தோழியும் இரவு வேளையில் தங்க மாட்டாள். நான் மட்டும் தனியாகக் கொலை நடந்த வீட்டில் தங்கியிருந்திருக்கிறேன்!"

இதற்குள் வீடு வந்து விட்டது. துள்ளலுடன் சந்தோஷமாக இறங்கி உள்ளே சென்றார். "இந்த வீடுதான் உண்மையிலேயே எனக்கு ஒரு திருப்பு முனையாக அமைந்தது. வாசலில் உள்ள இந்த அறையில்தான் இயக்குனர் பாரதி ராஜா வந்தமர்ந்து என்னை நடிக்க அழைத்தார். 'கிழக்கே போகும் ரயில்' படத்தில் நான் நடிப்பேன் என்று நினைத்துக்கூடப் பார்க்காத நேரம் அது. வெளி நாட்டுக்கு அவ்வப்போது சென்று வருவதுதான் என் வேலையாக இருந்தது. லண்டனில் சில காலம் ஹோம் சயன்ஸ் கற்றுக்கொள்ள ஆரம்பித்தேன். இந்தச் சமயத்தில் ஒரு முறை நான் சென்னை வர பாரதி ராஜா நடிக்க அழைக்க, எல்லாமே இனிதாக முடிந்தது.

"என்னைப் பொருத்த மட்டில் இந்த வீடு ரொம்ப ராசியான வீடு. இவ்வளவு பெரிய வீட்டை, சுமார் இரண்டு மூன்று லட்சம் மதிப்புள்ள இந்த வீட்டை இங்கு ஒரு கொலை நடந்தது என்ற ஒரே காரணத்துக்காக எண்பதாயிரத்துக்கு வாங்குகிறீர்களா என்று எங்களிடமே கேட்டார்கள். அப்பொழுது தெரியாத்தனமாக வேண்டாம் என்றுகூறி விட்டோம்."

✖ "இங்குதான் பாரதி ராஜா என்னை ஒப்பந்தம் செய்தார்"


இச்சமயத்தில் ராதிகாவின் பேச்சை இடைமறித்து, "எங்களுக்கும் இது ராசியான வீடுதான்" என்றார் ராம் ரெட்டி. "இந்த வீட்டுக்கு வருவதற்கு முன்னால் நாங்கள் இருந்ததை விட இப்பொழுது உயர்ந்திருக்கிறோம். எங்களுக்கும் ஆசைதான் வீட்டை வாங்க. ஆனால் விற்க மாட்டார்களே, இப்போது."

"அப்பொழுதும் டைனிங் டேபிள் இங்குதான் இருந்தது" என்றார் ராதிகா. "இந்த டைனிங் டேபிள் முன் உட்கார்ந்து கொண்டு நான் மணிக் கணக்கில் ஏதாவது கொறித்துக் கொண்டே படிப்பேன். படிப்பது, இசை கேட்பது, தோழிகளுடன் விளையாடுவது—இதுதான் காரியம் என்று இருந்த நாட்கள்.

"இந்த வீட்டின் சமையலறையைப் பொறுத்தவரை எல்லாமே எனக்கு அத்துப்படி. ஏனெனில் அன்று சமையல் செய்வதும் நான்தான். சாப்பிடுவதும் நான்தான்! சமையலில் எக்ஸ்பர்ட்டா என்று கேட்காதீர்கள்! ஏதோ தெரிந்த வரையில் சமையல் செய்தேன். சோம்பல் என்றால் இருக்கவே இருக்கிறது ரொட்டி, வெண்ணெய், ஜாம். ஒரு சமயம் காப்பிக்கு சர்க்கரை என நினைத்து நான் போட்டது உப்பு! அன்றிலிருந்து இந்த அறையில் நுழைந்தவுடன் முதலில்



⌘ ''இந்த அறையில் நான் செய்த அட்டகாசம் கொஞ்சமா என்ன?''



⌘ ''கொலை விழுந்த படுக்கை அறை இது தான்!''

உப்பை எடுத்து ஒரு பக்கமாக வைத்து விடுவேன். பிறகுதான் சமையல் தொடங்கு வேன்!

''இப்பொழுது கொலை நடந்த படுக்கை அறைக்குள் நுழைகிறேன்'' எனக் கூறிய வாறே அந்த அறைக்குள் சென்றார் ராதிகா. ''இந்த அறைதான் அன்று எனக்கும் படுக்கை அறை. ஒரு நாள் இரவு சுமார் பதினொரு மணி இருக்கும். ஒருவிதமான பேய்க்காற்று வீசத் தொடங்கியது. இந்த அறையின் ஜன்னல்களில் ஒன்றே ஒன்று மட்டும் மெல்லத் திறந்து மூடிக்கொண்டது. ஐந்து நிமிஷத்துக்கு ஒரு முறை. திறந்திருக்கும் மற்ற ஜன்னல்கள் ஆடவே இல்லை. இந்த ஜன்னல் மட்டும்... பயம் அதிகரித்தது. பக்கத்தில் படுத்திருந்த தோழியைத் தட்டி' எழுப்பினேன். 'ஜன்னல் கதவையெல்லாம் சாத்தாமல் படுக்காதே என்று எத்தனை தடவை சொல்வது? சீக்கிரம் சாத்திவிடு' என்று அவளை ஏவிவிட்டு நான் பதுங்கினேன். தூக்கக் கலக்கத்திலிருந்த அவள் நிதானமாகப் போய் ஜன்னல்களைச் சாத்தினாள். ஒவ்வொரு ஜன்னலுக்கும் அது அடித்துக் கொள்ளாமல் இருக்க மாட்டியிருந்த கொக்கியை எடுத்தாள். எனக்குப் பயத்தை ஏற்படுத்திய ஜன்னலுக்கு வந்தவுடன் கொக்கியை நீக்காமலே ஜன்னலைச் சாத்தினாள். கொக்கி இருந்தால்தானே நீக்க? அப்பொழுதுதான் எனக்கு நான் பயந்தது எவ்வளவு முட்டாள்தனம் எனத் தெரிந்தது. கொக்கி இல்லா ஜன்னல் மட்டும் காற்றில் இப்படியும் அப்படியும் அசைந்ததில் வியப்பென்ன? இதற்குப் போய் நான் பயந்திருக்கிறேன்!''

ராதிகா கதையைச் சொல்லக் கேட்டிருந்த ராம ரெட்டி, ''அதெல்லாம் சகஜங்க. இப்பக்கூடத்தான் இரவு பன்னிரண்டு மணிக்கு வெள்ளைப் புடவையுடன் காலில் சதங்கை ஒலிக்க ஒரு பெண் நடந்து வருகிறாள். நான் அவளைத் தெளிவாய்ப் பார்த்திருக்கிறேன். இதற்கென்ன சொல்றீங்க?'' என்றார்.

''ஐயையோ, நிஜமாவா?'' ராதிகாவும் ராதிகாவின் அம்மாவும் நடுங்க, ''நீங்க ஒண்ணு... அதெல்லாம் ஒண்ணுமே இல்லீங்க!'' என ரெட்டி சிரித்தார்.

பேட்டி: சலன்

புகைப்படம்: ஏ. வி. பாஸ்கர்




பம்பாயில் வகுப்புக் கலவரம் நடைபெற்ற சமயம். ஒருநாள் சின்ன அண்ணாமலை இரவு சினிமா பார்த்துவிட்டு அவர் தங்கியிருந்த வீட்டுக்குத் திரும்ப டாக்ஸி தேடினார். பல டாக்ஸிக்காரர்களும் மறுத்து விட்டனர். ஒரு டிரைவரிடம் போய் அரைகுறை இந்துஸ்தானியில் அண்ணாமலை "நானும் ஒரு இந்து, நீயும் ஒரு இந்து உதவிசெய்ய வேண்டாமா?" என்றார். உடனே டாக்ஸி டிரைவர் "ஆமாம் இந்துவுக்கு உதவி செய்யத்தான் வேண்டும். சரி காரில் ஏறு" என்று ஏற்றிக்கொண்டு மாதுங்காவில் அவர் தங்கியிருந்த வீட்டில் இறக்கி விட்டான். பிறகு, "சாப் - நான் இந்துவல்ல, ஒரு முஸ்லிம். உண்மையான முஸ்லிம் யாருக்கும் தீங்கு செய்யக் கூடாது என்பது குரான் வாக்கு" என்று கூறிவிட்டுக் கம்பீரமாகச் சென்றான்.

ஆதாரம்: "சொன்னால் நம்பமாட்டீர்கள்" - சின்ன அண்ணாமலை

-பி. நாராயணன்

# வாழ்க்கை சினிமா ஆகிறது!




**வா**ழ்க்கையின் சம்பவங்கள் சினிமா ஆகலாம். ஆனால் வாழ்க்கையையே சினிமாவாக எடுத்த வி.ஜி.பி. சகோதரர்களுள் ஒருவரான சந்தோஷத்தை மடக்கி...

கேள்வி: உங்கள் வாழ்க்கையைப் படமாக எடுக்கும் யோசனை எப்படித் தோன்றியது?

பதில்: நாங்கள் வெளிநாடு சென்றிருந்த போது சில நண்பர்கள் தங்கள் நிறுவனங்களை டாக்குமெண்டரியாகக் காட்டினார்கள். அதைப் பார்த்த பின்புதான் இந்த ஐடியா எங்களுக்குத் தோன்றியது.

கே: இந்தப் படத்தை யாருக்குத் திரையிட்டுக் காட்டுவீர்கள்?

ப: காட்டியுள்ளீர்கள் என்று கேளுங்கள். முதன் முதலில் இந்தப் படத்தை நாங்கள் திரையிட்டுக் காட்டியது எங்கள் பிள்ளைகளுக்குத்தான். ஏனெனில் இன்று நாங்கள் அவர்களுக்கு அளித்துள்ள வசதிகளின் பின்னே எங்களுடைய கடின உழைப்பு இருப்பதை அவர்கள் உணர்ந்து நாளை அவர்களின் பிள்ளைகளுக்கும் உணர்த்த வேண்டும். மேலும் எங்கள் வெளி நாட்டு வியாபார நண்பர்களுக்குத் திரையிட்டுக் காட்டினோம். இன்றுகூட நண்பர் ஒருவருக்குத்திரையிடத்தான் இப்போது நடந்த காட்சி.



கே: மக்கடை வைத்திருந்தவன் இன்று தம்முடன் சரிசமமாக உட்கார்ந்துள்ளானே என உங்கள் வெளி நாட்டு நண்பர்கள் நினைக்க மாட்டார்களா?

ப: மாட்டார்கள். உழைப்பால் உயர்ந்தவர்கள் என்று எங்கள் மீது அவர்களின் நம்பிக்கை அதிகரிக்குமே தவிரக் குறையாது.

கே: உங்கள் வெற்றி திடீரென்று ஏற்பட்டதா?

ப: இல்லை. உழைப்பு மொத்தமாக அமைந்திருக்கும் வெற்றி என்னவோ தவணைகளில் தான் கிடைத்தது.



கே: உழைப்பு மட்டுமே உங்களின் வெற்றிக்குக் காரணம் என்கிறீர்களா?


ப: உழைப்பு மெய் வருத்தக் கூலி தரும். கூலி என்பது வெற்றியாகாது. உழைப்போடு ஒற்றுமையும் இணையும்போதுதான் வெற்றி உருவாகும். நானும் என் அண்ணனும், என் அக்காவும் எங்கள் மூவருக்கும் மேலாக எங்கள் அன்னையும் ஒருசேர ஒற்றுமையாய் உழைத்ததால்தான் இன்று நாங்கள் தவணை முறையில் பணம் பெற்று மக்களை வெளி நாட்டுச் சுற்றுலாவுக்கு அனுப்ப என்னும் அளவுக்கு வெற்றி பெற்றுள்ளோம்.

கே: தவணை முறைக் கடைக்காரர்கள் சிலர் மக்களை ஏமாற்றி விடுகிறார்களே...

ப: தவறு மக்கள் பேரில்தான். ஒரு பொருள் பாதி விலைக்கு விற்கப்படுகிறது என்றால் அதன் பின்னணியில் ஏதோ மர்மம் இருப்பதை மக்கள் உணர வேண்டும். கடையிலுள்ள மொத்தப் பொருள்களின் அளவை — எண்ணிக்கையை — மதிப்பை ஒரக்கண்ணால் கணக்கிட்டு வந்தால் ஏமாற்றியே இருக்காது.

பேட்டியைத் தவணை முறையில் அல்லாது ஒட்டுமொத்தமாக அளித்ததற்கு நன்றி கூறி விடைபெற்றவர்:

—ஏ. வி. எம். கணேஷ்.




## ‘பருவ’ மழை

எனது—
ஏக்கப் பெருமூச்சு
கடும் புயலாய் மாறி
எதிர்வீட்டு ஜன்னலை
மெல்லத் திறந்து
பார்வைச் சாரல்களை
உன்னை
வீசியபோது....
‘பளிச்’ என்ற மின்னலுடன்
இரண்டு கண்கள்
‘படார்’ என்று
இடி இடித்து
ஜன்னலை மூடியது.
பருவ மழை
முறை தவறிப் பெய்தால்
விளைவு?
இப்படித்தான் இருக்குமோ!

‘‘மங்களமதி’’



## 17 எண்

1. வருகிற ஏப்ரல் 17ம் நாள் புனித வெள்ளி (Good Friday)
2. ஈ. வே. ரா. பெரியார் பிறந்த தினம் செப்டம்பர் 17ந் தேதி.
3. தூக்கத்தில் ரெக்கார்டு ஏற்படுத்திய கெளின் மேயர் என்ற ஜெர்மானியப் பெண் 17 ஆண்டுகள் தொடர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள்.
4. தேனில் உள்ள தண்ணீரின் அளவு 17 சதவிகிதம்.



## 17ம் நூற்றாண்டு

சென்னையில் ஆங்கில ஆட்சி 1639 ஜூலை 22

கடிகாரத்தில் நிமிட முள் பொருத்தப் பட்டது 1670.

அண்டன் வான் லீவன் ஹூக் ஆராய்ச்சிக்கான நுண் நோக்கியைக் கண்டு பிடித்தது 1665.

★

செவிட்டு ஊமைப் பள்ளிகள் 17.
குருடர்கள் பள்ளி 17.
தமிழ் நாட்டில் 1977-78 கணக்கெடுப்பின் படி.

—என். ரேவதி (வயது 17.)



## 23

மோட்டார்சைக்கிளில் மோதிக் கொல்ல முயன்ற முயற்சியில் தப்பிப் பிழைத்த கோமதியின் தலையில் பட்ட காயம், மற்றும் முழங்கால் முட்டி ஆகியவைகளில் பட்ட பலத்த காயம் ஆகியவை ஆறி வந்தன. டாக்டர்களின் மிகுந்த பிரயாசைக்குப் பின் புனர் ஜென்மம் எடுத்த மாதிரி பிழைத்து எழுந்தாள்.

ஆஸ்பத்திரி வெளிப்புறமுள்ள தோட்டப் பகுதியில் அவளைக் கைத்தாங்கலாகப் பற்றி நடக்க உதவிக் கொண்டிருந்தாள் சுமங்களா. அன்று பரமேஸ்வரனும் சுகுமாரனும் ஒருவர் மீது ஒருவர் பாய்ந்து சண்டையிடச் செய்துவிட்டு ஓட்டமும் நடையுமாகப் பிரதான சாலைக்குத்தான் விரைந்தும், டாக்ஸி ஒன்றைக் கூப்பிட்டதும் மருத்துவமனை நோக்கி அதில் பறந்ததும் எல்லாம் அடிக்கடி நினைவு வந்தன, சுமங்களாவுக்கு.

தோழிகள் இருவரையும் தூரமாக நின்று பார்த்துக் கொண்டிருந்தார், திருமேனி.

தம் அலுவல்களுக்கு நடுவே தினம் குறைந்தது இரண்டு முறையாவது தங்கையை வந்து பார்த்துக் கொண்டார்.

ஒரு நல்ல வரனைத் தேடித் திருமணத்துக்கு ஏற்பாடுகள் செய்யத் தொடங்கிய நேரத்தில் இந்த விபத்து அவைகளைப் பாதியில் நிற்க வைத்துவிட்டது.

ஆஸ்பத்திரியின் நடைபாதைத் தாழ்வாரத்தில் கோமதி ஏறிக் கொண்டிருந்தாள். அவளைப் பின்புறமாகப் பிடித்துக் கொண்டு நடந்தாள், சுமங்களா. அங்கிருந்த சக்கர நாற்காலியில் உட்கார வைத்து அவளைத் தள்ளிக் கொண்டு வந்தாள். நடை பாதைத் தாழ்வாரத்தின் மறு கோடியில் பரமேஸ்வரனின் வக்கீல் இவைகளையே பார்த்துக் கொண்டு நின்றார்.

அவர் இந்த இரண்டு வாரங்களாக அவளிடம் நடையாய் நடந்து கொண்டிருக்கிறார்.

அவள் கொடுக்கப் போகிற ஒரே ஒரு ஸ்டேட்மெண்டில்தான் பரமேஸ்வரனின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது என்று அவர் கூறினார்.

சுகுமாரனை இரக்கமற்ற தன்மையில் கொலை செய்த குற்றத்துக்காக அவன் கொலை நடந்த இடத்திலேயே கையும் களவுமாகப் போலீஸாரால் கைது செய்யப்பட்டுச் சிறையில் இருக்கிறான்.

கோமதி மேல் மோட்டார் சைக்கிளை மோதிக் கொலை செய்ய முயன்றது சுகுமாரன் என்பதைக் கோமதியிடமிருந்துபோலீசார் தெரிந்து கொண்டார்கள். சுகுமாரனைப் பிடிக்க எடுத்துக் கொண்ட முயற்சியில் அவன் சென்ற காரைத் தொடர்ந்து சென்றார்கள். சுகுமாரனைக் கொலை செய்துவிட்டு வெளியே ஓடிவந்த பரமேஸ்வரனைக் கையும் களவுமாகப் பிடித்து விட்டார்கள்.

கோமதி மேல் மோட்டார் சைக்கிளை மோதும்படி ஏவியவன் தான்தான் என்று போலீஸ் விசாரணையில் பரமேஸ்வரன் ஒப்புக்கொண்டு விட்டான்.

ஒன்று: கொலை முயற்சிக்கான தூண்டுதல். மற்றொன்று அப்பட்டமான கொலை. இரண்டு குற்றங்கள்.

ஜாமீனில் வெளியே விட மறுத்துவிட்டார்கள்.

போலீசார் சுமங்களாவை விசாரித்தார்கள்.

'கொலையுண்ட சுகுமாரனையும் என்னையும் இணைத்துப் பரமேஸ்வரன் விவாக ரத்து நோட்டீஸ் அனுப்பி யிருந்தார். சுகுமாரன் அவன் தரப்பில் வழக்காட ஒரு வக்கீலை நியமனம் செய்திருப்பதாகச் சொன்னான். அவரைப் பார்த்துவிட்டு வரலாம். அவரை ஹோட்டலில் உட்கார வைத்து விட்டு வந்திருக்கிறேன் என்றான். அவன் ரொம்பவும் அவசரப்படுத்தியதால் அவனுடன் சென்று அட்வகேட்டைப் பார்த்து விட்டு உடனே மருத்துவ மனை திரும்பி விடலாம் என்று போனேன். ஆனால், அவன் குறிப்பிட்டபடி கார் ஹோட்டலில் நிற்காமல் அடையாறு வழியே அந்தத் தனியான பங்களாவுக்குப் போய் நின்றது. ஒருவேளை வக்கீல் அங்கேதான் இருப்பார் என்று எண்ணிக் கொண்டு அங்கே போனேன். அங்கேயும் வக்கீல் இல்லை என்றவுடன் நான் திரும்பி வந்து விட்டேன்' என்று சுமங்களா ஸ்டேட்மெண்ட் எழுதிக் கொடுத்து விட்டாள்.

அங்கே என்ன நடந்தது என்று தனக்குத் தெரியாது என்றும், தான் வெளியேறிக் கொண்டிருந்தபோது பரமேஸ்வரன் உள்ளே நுழைந்ததைத் தான் பார்த்ததையும், அவர்களுக்குள் ஏதோ காரசாரமாக விவாதம் நடந்ததாகவும், அது பெரிய கை கலப்பில் முடியப் போகிறது என்பதை ஊகித்துக் கொண்டே வெளியேறி விட்டதாகவும் கூறினாள்.

அது அங்கே நடந்த கொலையை ஊர்ஜிதப் படுத்துவது போல இருந்தது.

பரமேஸ்வரனின் வக்கீல் அவளிடம் வந்து புதிய ஸ்டேட்மெண்ட் ஒன்று வாங்க முயன்று கொண்டிருந்தார்.

'' 'என்னை சுகுமாரன் கடத்திக் கொண்டு போய்க் கற்பழிக்க முயன்றபோது என்

# விட்டில் அணைத்த விளக்கு

-மகரிஷி-



கணவர் பரமேஸ்வரன் காப்பாற்ற வந்தார். சுகுமாரன் பயங்கரமான ஆயுதத்தால் என் கணவரைக் கொலை செய்ய முயன்றான். தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும் அதே நேரத்தில் என்னையும் காப்பாற்ற அவர் எடுத்துக் கொண்ட தற்காப்பு முயற்சியில் சுகுமாரனை என் கணவர் தாக்கினார்' என்று சொன்னால் போதும். பரமேஸ்வரனைப் பாதிக் காப்பாற்றலாம். அதற்கு உங்கள் ஒத்துழைப்பு வேண்டும்'' என்று அவர் நச்சரித்துக் கொண்டிருந்தார்.

இன்று...

நாற்காலியை மெது வாகத் தள்ளிக் கொண்டு வந்தவள் — பரமேஸ்வரனின் வக்கீல் நிற்பதைப் பார்த்து விட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''சுமங்களா நீங்கள்....''

அவளிடம் அவர் வந்தபோது கோமதியைத் தள்ளிக் கொண்டு உள்ளே போய் விட்டாள்.

வக்கீல் உள்ளே வந்தார்.

''மனக் கசப்புக்களை மறந்து விட்டு எங்களுடன் கொஞ்சம் ஒத்துழைக்கக்கூடாதா?''

''சுகுமாரனுக்கும் எனக்கும் தொடர்பு இருக்கிறது. நானும் அவனும் கணவன் மனைவியாக வாழ்கிறோம். அவர் என்னைப் பலமுறை அழைத்தும் நான் அவருடன் வாழ வர மறுத்து விட்டேன். அவர் சார்பில் இப்படி நீங்கள் கொடுத்த விவாகரத்து நோட்டீஸ் வாசகங்கள் நினைவில்லையா உங்களுக்கு?''

''அதைப் பற்றி என்ன? அதை எப்போது வேண்டுமானாலும் வாபஸ்பெறலாம். கோர்ட் வரை போனால்தானே வழக்கு? இப்போ அதுகூட உங்க கையிலேதானே இருக்கு.



நீங்களாப் பார்த்து அதைநிலேநிறுத்தலாம்... வாபஸ் பெறலாம்....''

''நோ....நோ... இவ்வளவு மகத்தான உண்மைகளைக் கண்டு பிடித்து அவர் என்னை விவாக ரத்து செய்யப் போகிறார். அவர் முயற்சிகளை விணடிக்கலாமா?''

''நன்றாக யோசனை செய்யுங்கள். அவ காசம் தருகிறேன். அவருடைய நோட்டீ சுக்கு நீங்கள் இன்னும் பதில் தரவில்லை. உங்கள் பதிலைப் பொறுத்துத்தான் எல்லாம்''

வக்கீல் போய்விட்டார்.

**சீ**க்கிர நாற்காலியில் உட்கார்ந்திருந்த கோமதி சுமங்களாவையே பார்த்துக் கொண் டிருந்தாள்.

''உன்னுடைய முடிவில் மாறுதல் ஏதும் இல்லையா?''

''இல்லை. மாறுதலே இல்லை. ஒரு கணம் கூட என்னை மனைவி என்று எண்ணாத ஒரு வனுக்காக நான் எதற்காக இரக்கப்படவேண் டும்? ஆரம்ப முதல் அவர் என்னை ஏமாற்றவும் வஞ்சிக்கவுமே தம் நேரத்தை யெல்லாம் செலவழித்துத் திட்டம் போட்டார். ஒவ் வொரு திட்டத்தையும் நான் எதிர் கொண் டேன். இப்பொழுது அவர் மாட்டிக்கொண்டு விழிக்கிறார். அவரைக் காப்பாற்ற மட்டும் நான் அவர் மனைவி என்கிற கௌரவப் பட்டத்தைச் சூட்டிக் கொள்ள விரும்பு கிறார். இதுவும் கூட அவருக்குக் கிடைக்கப் போகிற தண்டனைக் காலத்தைக் கொஞ்சம் குறைக்கத்தான்...

''உனக்குத் தெரியுமா? சுகுமாரனை விட்டு உன்மேல் மோட்டார் சைக்கிளை மோதச் சொன்னதும் அவர்தான். அதுவரை அவ ருடைய கையாளாகச் செயல்பட்டிருக்கிறான் அவன். எனினும் என் விஷயத்தில் அவன் அவருக்குத் தெரியாமல் தனித்தியங்கத் திட்டமிட்டான். நான் இதைப் புரிந்து கொண்டவுடனேயே விழித்துக் கொண்டு விட்டேன். என்னைக் கண் மண் தெரியாமல் அன்று அடித்துக் கொலை செய்வதற்கு அவ ருக்கு வழி வகுத்துக் கொடுத்தானே அன்றே விழித்துக் கொண்டு விட்டேன். என்னைப் பொறுத்தவரை அவர்கள் இருவரும் என் எதிரிகளே. என்னைச் சுட்டுப் பொசுக்கக் கையில் தீப்பந்தங்களுடன் சுற்றியவர்களே. அவர்கள் இருவரையும் மோத விடுவது தானே என் திட்டத்தின் உச்ச கட்டம். அது கூடத் தானாகவே நிகழ்ந்து விட்டது.''

அவள் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் அசா தாரணச் சிலிர்ப்பு இருந்தது.

**சு**மங்களாவுக்கு அவள் நேரிடைப்போட்டி யில் கலந்து கொண்டு விட்டு வந்த கம் பெனியிலிருந்து வேலைக்கான ஆர்டர் வந்து விட்டது. லக்னோவில் உள்ள அவர்களுடைய வட மாநிலங்களுக்கான தலைமை அலுவ லகத்தில் பயிற்சிக்காக அவள் இருக்க வேண்டிய தேதியையும் குறிப்பிட்டிருந் தார்கள்.

வாழ்க்கையில் என்றும் எந்நேரமும் ஏற் படாத ஓர் உற்சாகம் அவள் உள்ளத்தில் உதயமாகியிருந்தது.

கோமதி நன்றாக உடம்பு குணமாகி ஹாஸ் டலுக்கு வந்து விட்டாள். காலில் மட்டும் லேசான வலி இருந்து கொண்டிருந்தது. நாளடைவில் சரியாகி விடும் என்று டாக் டர்கள் கூறியிருந்தார்கள்.

கோமதியையும் அழைத்துக்கொண்டு ஒரு முறை சேலம் சென்றாள். சென்ன கிருஷ்ண புரம் வரசித்தி விநாயகருக்குச் செய்ய வேண் டிய வேண்டுதலைச் செய்துவிட்டுத் திரும் பினாள்.

கோமதி ஆட்டோவில் கல்லூரிக்குப் போகத் துவங்கி விட்டாள்.

சுமங்களாவின் முடிவில் யாரும் தலையிட வில்லை. அவளுக்குப் பாதை ஒன்றைக் காட்ட வேண்டும் என்ற அவசியமும் இல்லாமல் போய்விட்டது." அவளுடைய செய்கைகள், அவள் எடுக்கின்ற முடிவுகள் எல்லாம் சரி யாகவே இருந்தன. எனவேதான் அன்று சிவில் சிடி கோர்ட்டுக்கு சந்தானத்துடன் சென்று, தன் முடிவை எழுத்து வடிவில் நீட்டியபோதுகூட கோமதி ஒன்றும் கூற வில்லை.

மனுதாரர் — பரமேஸ்வரன்.

எதிர் மனுதாரர்கள் — சுமங்களா, சுகு மாரன்.

முதல் எதிர் மனுதாரர் சுமங்களா சமர்ப் பிக்கும் மெமோ:

இப்பவும் மேற்படி மனுவில் மனுதாரர் பரமேஸ்வரன் முதல் எதிரியாகிய சுமங் களாவும், இரண்டாவது எதிரியாகிய சுகு மாரனும் தகாத முறையில் உறவு வைத்துக் கொண்டுள்ளதாக ஓர் அபாண்டத்தைச் சுமத்தி முதல் எதிரியின் நன்னடத்தைக்கு மாசு கற்பித்து விட்டார். விவாகம் நடந்த நாளாக மனுதாரர் பரமேஸ்வரன் ஒரு நாள் கூட எதிர் மனுதாரராகிய சுமங்களாவுடன் வாழ்க்கை நடத்தவில்லை. வாழ்க்கை நடத் தாதது மட்டுமல்ல. வெளியில் இருந்து கொண்டுஅதிகமானதொல்லைகளும்கொடுத்து வந்திருக்கிறார். வேறு ஒருபெண்ணை விவாகம்




"காம்ப்ளான்® ஒண்ணுதான் சரி
என் குடும்பத்துக்கு
...திட்டமிட்ட பரிபூரண உணவு."
"பல வேளைகள் சாப்பிடத் தவறி விடும் என் கணவருக்கு"
"சாப்பிடும்போது சண்டித்தனம் செய்யும் என் மகனுக்கு"
"நோயுடல் தேறிவரும் என் தாயாருக்கு"
காம்ப்ளான்® ஒன்றுதான்
எவருக்கும் தேவைப்படும்
23 மூலாதார ஊட்டச் சத்துக்களால்
முழுமை பெற்றது.
"அசதியிலும் சரிவர சாப்பிட முடியாத எனக்கு"
காம்ப்ளான் ஒன்றுதான் திட்டமிட்ட விஞ்ஞானக் கலவையாக உடலுக்கு அன்றாடம் தேவைப்படும் 23 மூலாதார ஊட்டச் சத்துக்களை அளிக்கிறது: புரதங்கள், கார்போஹைட்ரேட், கொழுப்புச் சத்து, வைட்டமின்கள், உலோக தாதுக்கள். எனவேதான், டாக்டர்கள் பெரும்பாலும் சிபாரிசு செய்யும் ஆரோக்கிய பானமாக விளங்குகிறது காம்ப்ளான்.
கிடைப்பவை நால்வகை: இன்சுவை ரகங்களாக—சாக்லேட் காம்ப்ளான், ஏலக்காய்-குங்குமப்பூ காம்ப்ளான், ஸ்ட்ராபெர்ரி காம்ப்ளான், தவிர சாதா காம்ப்ளான்.
Glaxo
Complan
திட்டமிட்ட பரிபூரண உணவு
காம்ப்ளான்®
லின்டாஸ்-GLC. 10-3085 TM



நேத்திக்கு நீங்க கூட்டத்திலே பேசினது பிரமாதம் போலேயிருக்கு. ஜனங்க 'பட பட'ன்னு கைதட்டினாங்க.
கையா தட்டினாங்க... அட போப்பா! அவுங்க கொசு அடிச்சாங்க.
கொசுக்களைத் தட்டி விரட்டிடும் டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்
கண்ணே! கடலைக் கடைந்து அமுதம் எடுக்கவா? இல்லே, காடுமலே கடந்து குறிஞ்சி மலர் பறித்துவரவா?
அதெல்லாம் ஒண்ணும் வேணாம் இந்தக் கொசுக்களை விரட்டினாலே போதும்...
கொசுக்களை விரட்டிட எளிய வழி டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்.
இந்தாப்பா சர்வர்... நான் சைவம். கொசு விழுந்த சாப்பாடு வேண்டாம்!
கொசுக்களை அடித்து விரட்டிடும் டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்.
கொளுத்துவீர் டார்டாய்ஸ்-விரட்டுவீர் கொசுக்களை!
டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருளினால்.
தயாரிப்பாளர்:
பாம்பே கெமிகல்ஸ் ப்ரைவேட் லிமிடெட்
..போர்ட், பம்பாய்-400 023. ..போன்: 273831

செய்துகொள்ளும் நோக்கத்துடன் இம்மாதிரி அவதூறுகளைக் கூறித் தன் விவாக ரத்துக்கான முகாந்திரங்களைத் தேடிக் கொண்டிருக்கிறார். இன்றுவரை எதிர் மனுதாராகிய சுமங்களா தனியே தன் சொந்த வருமானத்தில் மட்டுமே ஜீவித்து வருகிறார். மனுதாரரின் விவாக ரத்துக்கான நோட்டீஸ் அவர் மனத்தைப் பெரிதும் பாதித்து விட்டதாலும்... இனியும் அவருடன் வாழ்வது மேலும் பல கொடுமைகளுக்கு ஆளாக நேரும் என்று அஞ்சுவதாலும் மனுதாரருக்கும் தனக்கும் விவாக ரத்து உத்தரவு பிறப்பிக்குமாறு வேண்டுகிறார். ஆகவே எதிர் மனுதாரர் பேரில் விவாக ரத்து உத்தரவிட முதல் எதிர் மனுதாரராகிய சுமங்களாவுக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை.'

என்று இதை அட்வகேட் சந்தானம் மாஜிஸ்டிரேட்டிடம் கொடுத்தவுடன் அதை அவர் வாங்கிப் படித்தார். பிறகு பின் வருமாறு எழுதினார்:

'முதல் மனுதாரர்கொடுத்துள்ள மனுவில் தனக்கும் விவாகரத்துக்கு ஆட்சேபணை இல்லை என்று தெரிவித்துள்ளபடியால் மனுவில் கண்டுள்ளபடி விவாக ரத்துக்கு உத்தரவிடுகிறேன்.'

சிடி. சிவில் கோர்ட்டில் விவாக ரத்துக்கான உத்தரவை வாங்கிக்கொண்டு விட்டாள் சுமங்களா.

அதைக் கையில் வாங்கிக் கொண்டவுடன் அவளை அறியாமல் மனம் நிம்மதியுடன் இருந்தது.

ஓர் அசுரனை வீழ்த்திய நிம்மதியும், தற்பெருமையும் அவள் உள்ளத்தில் ஒருசேரப் புகுந்து கொண்டன.

பரமேஸ்வரன் பேரிலும், கொலையுண்ட சுகுமாரன் பேரிலும் தனித் தனியாகவும், சேர்ந்தும் பல குற்றச்சாட்டுக்களைக் கண்டு பிடித்துக் குற்றப் பத்திரிகை தயாரித்திருந்தனர்.

அதில், மூன்று பெண்களின் தற்கொலைக்கு இவர்கள் காரணமென்பதும் இரண்டு பெண்கள் குடும்பத்தை விட்டு வெளியேறி, இவர்களை நம்பி வாழ்வைக் கெடுத்துக் கொண்டு பின்பு வயிறு வளர்க்கத் தவறான வழிகளை மேற்கொண்டு விடுதியில் வாழ்வதையும் கண்டு பிடித்திருந்தார்கள்.


நல்ல மானமுள்ள நடுத்தரக் குடும்பத்துப் பெண் ஒருத்தியை அவளுடைய கண்ணியமான கணவரிடமிருந்து பிரித்து அவர்களிடையே பெரிய மன விரிசலை உண்டாக்கி, அவமானம் தாங்காமல் கணவன் தற்கொலை செய்துகொண்டு மாண்டுபோகக் காரணமானது உட்பட.....

இப்படி அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளுடன் தொடங்கி....

சுமங்களாவை ஏமாற்றி விவாகம் செய்து கொண்டது...

அவளை நிராதரவாக விட்டது...

ஒரு திட்டமிட்ட சதியாக சுமங்களாவைத் தன் நண்பனின் உலர் சலவைச் சாலையில் வேலைக்கு அமர்த்திக் கொண்டது...



கணவன்: "பெல்ஸூம் ரவிக்கையுமா இது என்ன கண்றாவி... எங்கே கிளம்பிட்டே இந்தக் கோலத்தில்....?"

மனைவி: "முன்னைப் பழமையும் பின்னைப் புதுமையும்ங்கிற தலைப்பில் எங்க லேடீஸ் கிளப்பில் பேச!"

-உ. ராஜாஜி

---

அவன் மனைவியென இருக்கும்போதே சினிமா அதிபர் மகள் அம்பிகாவை விவாகம் செய்துகொள்ள முயன்றது...

அவன் மறு-விவாகம் செய்து கொள்ள முடியாமல் சுமங்களா குறுக்கே நின்றதால் நண்பன் சுகுமாரனுடன் சேர்ந்துகொண்டு அவளை ஒழித்துக்கட்டத் திட்டமிட்டது...

சுமங்களாவுக்கு உதவியாக இருந்த புரொபஸர் கோமதியை மோட்டார் சைக்கிளில் மோதிக் கொலை செய்யச் சுகுமாரனை ஏவி விட்டது....

இறுதியில் அவர்களுக்குள்ளேயே பகை மூண்டு, சுகுமாரனைப் பரமேஸ்வரன் கொன்றது....

அப்படிக் கொலை செய்து விட்டுத் தப்பிக்க எண்ணும்போது அடையாறு பங்களா ஒன்றில் கையும் களவுமாகப் பிடிபட்டது...

சுமார் முந்நூறு பக்கக் குற்றப்பத்திரிகை, அவன் தப்பிக்க ஒரு சிறு இடைவெளி கூட இல்லாமல் வலை பின்னிக் கொண்டிருந்தது.

சிறையில் இருந்த பரமேஸ்வரன்பலமுறை கேட்டுக் கொண்டும் சுமங்களா அவனைச் சந்திக்கப் போக மறுத்து விட்டாள்.

"ஒரே ஒரு முறை அவளைப் பார்த்தால் போதும். என் பாவமெல்லாம் கரைந்து போய்விடும். நான் இனி வெளியே வர முடியாது என்பதைப் புரிந்து கொண்டு விட்டேன். என்னைச் சுற்றிப் பின்னப்பட்டுள்ள சட்டத்தின் முள் வேலிகள் என்னை ஒவ்வொரு விநாடியும் குத்தி ரணமாக்கிக் கொண்டிருக்கின்றன. அந்த ரணங்களுக்கெல்லாம் ஒரு மருந்தாக, அவள் கம்பிகளுக்கு அப்பால் நின்று என்னை ஒரு முறை பார்த்தாலே

போதும். பேசக்கூட வேண்டாம். எனது மீதி நாட்களை நிம்மதியாகக் கழிப்பேன்.

"தூக்கு மேடையின் தூரம் நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகிறது. அதை இறுதியாக நெருங்கும் முன் அவளை ஒரு முறை பார்த்து விட்டால் போதும்" என்று அவன் எவ்வளவோ மன்றாடிப் பார்த்தான்.

வழக்கு நடந்து தீர்ப்புக்காகக் காத்துக் கொண்டிருந்தான்.

அவன் அன்று நீதிபதியின் தீர்ப்பைக் கேட்க ஒரு நாள் லீவு போட்டிருந்தாள். அடுத்த நாள் அவள் தன் பயிற்சியை மேற்கொள்ள லக்னோ புறப்பட வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை முன் கூட்டியே செய்து விட்டாள். முதல் நாளே சென்னை அலுவலகத்தில் எல்லாரிடமும் விடை பெற்றுக் கொண்டு விட்டாள். வழக்கு காரணமாக அவள் தன் பயிற்சிக் காலத்தைச் சில மாதங்கள் தள்ளிப் போடும் படி உண்மையான காரணத்தைக் கூறி, நிறுவனத்தின் மானேஜிங் டைரக்டர் வில்வேஸ்வரனுக்கு ஒரு விண்ணப்பம் எழுதி மூலம் அனுப்பியிருந்தாள்.

அதில் உள்ள அவசியம், மற்றும் உண்மைத் தன்மைகளைப் புரிந்து கொண்ட நிர்வாகம் வழக்கு முடியும்வரை அவள் சென்னைக் காரியாலயத்திலேயே பணியாற்றலாம்... வழக்கு முடிந்த பின் லக்னோ போகலாம் என்று அனுமதி அளித்தது.

பரமேசுவரன் என்ற அரக்கனை வீழ்த்த அவள் பட்ட சிரமங்கள் அவளுக்குத்தான் தெரியும்.

சுகுமாரனின் சபலத்தைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டாள். சுகுமாரனைத் தன் வலையில் போட்டுக் கொள்வதன் மூலம் பரமேஸ்வரனைச் சிறைபுறச் செய்ய முடியும்! அந்தச் சினத்தை மீண்டும் சுகுமாரன் மேலேயே திருப்பி விட முடியும் என்று அவள் வகுத்த வியூகம் நூற்றுக்கு நூறு சரியாகவே நடந்தது.


அந்தப் போராட்டத்தை அவள் ஒருத்தியாகவே நடத்தினாள். அவளுக்கு உறுதுணையாக நின்றவள் கோமதி.

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

ஒருவர்: உங்க வீட்டில் எல்லாக் கட்சிக் கொடிகளும் பறக்குதே என்ன விஷயம்?

மற்றவர்: எந்த நேரத்திலும் எந்த கட்சியில் நான் இருப்பேன்னு சொல்ல முடியாதே!

- கல்யாணராமன்



சுகுமாரனைக் கொலை செய்து விட்டுப் பரமேஸ்வரன் கைதான பின்பும் அவன் மேல் குற்றப் பத்திரிகை தயாரிக்கப்பட்ட பின்பும் அம்பிகா சுமங்களாவைப் பார்க்க வந்தாள்.

ஆனால், சுமங்களா அவளைப் பார்க்கவோ, அவளிடம் பேசவோ விரும்பவில்லை. ஹாஸ்டல் அறைக்கே அவள் தேடி வந்தபோது அவளைச் சந்திக்கச் சுமங்களா விரும்பவில்லை என்பதைக் கோமதி மூலம் சொல்லி அனுப்பி விட்டாள்.

அவள் மனமுடைந்து திரும்பும்போது, "என்னை ஒரு பெரிய விபத்திலிருந்து மீட்டவளுக்கு நன்றி சொல்ல வேண்டும் என்று வந்தேன். முன்பு நான் அவள் மனம் நோகப் பேசியதற்கு மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று நினைத்தேன். அதற்கொரு சந்தர்ப்பம் தர மறுக்கிறாள். பரவாயில்லை எப்படியும் அவளைச் சந்தித்து மன்னிப்பைக் கேட்பேன்" என்று கூறிப் போய் விட்டாள்.

அதே நிலைதான் அருணாசலம் பர்வதம் தம்பதிகளுக்கு.

ஆனால் ஒரு வித்தியாசம்.

அவர்கள் வழக்கு நடக்கும்போது நீதி மன்றத்துக்கு வந்தாலும் கூட தூரமாக நின்று சுமங்களாவை ஒரு பயத்துடன் பார்த்துவிட்டு ஒதுங்கி விடுவார்கள்.

ஒருமுறை கோமதியுடன் பேசிக்கொண்டே நீதிமன்றத்தில் நுழையும்போது சொப்பவும் அசந்தர்ப்பமாக அவர்களை எதிரும் புதிருமாகப் பார்க்க வேண்டிய சந்தர்ப்பம் ஒன்று நேர்ந்து விட்டது.

சுமங்களா வெறும் பார்வை ஒன்றை மட்டும் வீசினாள். அப்பார்வையில் உள்ள ஜ்வாலை தாங்காமல் பர்வதத்தின் உடம்பு நடுங்கியதை அவள் உணர்ந்தாள்.

மெதுவாகக் கையெடுத்துக் கும்பிடுவது போல கையைச் சேர்த்தபோது, பர்வதத்தின் கரம் நடுங்குவது தெரிந்தது.

கோமதியுடன் சுமங்களா மேலே போய் விட்டாள்.

அதன் பின் அவர்களை அவள் நீதி மன்றத்தில் பார்க்கவே யில்லை.

தீர்ப்பைக் கேட்பதற்காகத் தோழியர் இருவரும் நீதிமன்றம் புறப்பட்டார்கள். டாக்ஸிக்காக வெளியே வந்து நின்றார்கள்.

சிறைச்சாலைக்குப் போகும் வழியில் ஹாஸ்டல் வாசலில் கோமதியும் சுமங்களாவும் நிற்பதைப் பார்த்துவிட்டுத் திருமேனி தம் ஜீப்பை நிறுத்தச் சொன்னார்.

"கோர்ட்டுக்கா?" – ஜீப்பில் அமர்ந்த படியே கேட்டார் திருமேனி.

"ஆமாம்." என்றாள் கோமதி.

"தீர்ப்பைக் கேட்கும் முன் தன் தீர்ப்பைத் தானே எழுதிக் கொண்டு விட்டான் பரமேஸ்வரன். நீங்க கோர்ட்டுக்கு வரவேண்டிய அவசியமே இல்லை."

"திருமேனி!" – கோமதி தன் அண்ணனைப் பதற்றத்துடன் அழைத்தாள்.

"ஆமாம்... He Committed Suicide in his cell...!"

முற்றும்

# இதோ இன்க்ரிமின் தலைமுறை

## பெரிதாக மட்டுமல்ல
## சிறப்பாக வளர!






வளரும் பருவத்தில் மிகமிகப் பெரிய வேறுபாட்டை வழங்குவது இன்க்ரிமின். உண்மையென்னவெனில் இதர டானிக்குகளை விட ஒரு படி மேலானது இன்க்ரிமின். ஆரோக்கியமான வளர்ச்சிக்குத் தேவையான வைட்டமின்களோடு கூட இன்க்ரிமின் டானிக்கில் லைஸின் உள்ளது. லைஸின் பசியைத் தூண்டுகிறது. ஒரு குழந்தை நன்கு வளர, நன்கு சாப்பிட வேண்டும் என்பது எந்தத் தாய்க்குத்தான் தெரியாது? சிறப்பாக உண்பதை சீரிய வளர்ச்சியாக்குவது இன்க்ரிமின்.

Lederle தயாரிப்பு

*அமெரிக்கன் ஸயனமிட் கம்பெனியின் ரெஜிஸ்டர்டு ட்ரேடு மார்க்

## இன்க்ரிமின்* டானிக்



## சிறப்பாக உண்பதை சீரிய வளர்ச்சியாக்குகிறது.

Sista's-INC-1064/80 TAM


எங்கள்
தமிழ்ப் புத்தாண்டு
வாழ்த்துக்கள்
இந்தியன் பாங்க்
(இந்திய அரசு நிறுவனம்)
உங்கள் செல்வச்செழுமைக்கு உதவும் வங்கி

# வெண்ணெய் கோபுரம் — சுபா



ஸ்கூட் திறந்தே யிருந்தது. வந்த வேகத்தைக் குறைக்காமல் அவன் உள்ளே நுழைந்தான். அந்த இருளில் நெடிதாய் வளர்ந்திருந்த அசோக மரங்கள் குட்டிச்சாத்தான்களாய்க் காற்றில் சலசலத்தன. போட்டிருந்த சட்டையை உதாசீனம் செய்து குளிர் மார்பைத் தாக்கிற்று. அவசர அவசரமாய் ஸ்கூட்டரை ஸ்டாண்ட் போட்டு நிறுத்திவிட்டு உள்ளே பாய்ந்தான். வெளிச்சம் போதாத காரிடாரில் பாண்ட் பாக்கெட்டுக்குள் கையை நுழைத்து மருந்துப் பாட்டிலை எடுத்தான். பெயரை மறுபடியும் படித்துச் சரி பார்த்துக் கொண்டான். லிஃப்ட் பக்கத்து அறை ஒன்றைத் திறந்து கொண்டு டூட்டி நர்ஸ் ஒருத்தி இவனை இடிக்கிற மாதிரி கடந்து போனாள். சட்டென்று மருந்துப் பாட்டிலை இறுகப் பற்றி ஒதுங்கி நடந்தான்.

இன்டன்ஸிவ் கேர் யூனிட்டுக்கு இன்னும் கொஞ்சம் நடந்தாக வேண்டும். திடீரென்று மனசு படபடத்தது. நிலை கொள்ளாமல் அலைந்தது. கிடந்து தவித்தது. பிழைப்பாளா?

ஓடிப் போறேன், ஓடிப் போறேன் என்று பாய்ச்சல் காட்டும் உயிரை இழுத்துப் பிடிக்கிற சக்தி இந்த மருந்துப் பாட்டிலில்தான் இருக்கிறது. உடனே தன்னைத் தானே திட்டிக்கொண்டான். யேசுவை எப்படி மறக்கப் போயிற்று? அவர்தானே அந்த உயிரைப் பிடித்து நிறுத்த முடியும். இந்த மருந்தால் கூட முடியாததெல்லாம் அவரால்தானே செய்ய முடியும். வேகத்தைக் குறைக்காமலேயே மானசீக மண்டியிட்டு 'யேசுவே' என்றான். 'என் அன்னையைக் கைவிட்டுடாதேயும்' என்றான்.

''ஆண்டவரே... இவள்மேல் இரக்கமாயிரும்... கிறிஸ்துவே இவள்மேல் இரக்கமாயிரும்...'' அப்பாதான்! முதுகைக் காட்டிக் கொண்டு உடைந்துபோன குரலில் பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்.

ஜான் விக்டர் அதிர்ந்தான்.

''என்னப்பா... என்ன ஆச்சு?''

''ஷி இஸ் டையிங்... விக்டர்....''

அம்மாவின் தலைமாட்டில் நர்ஸ் நின்றிருந்தாள்.

''நர்ஸ்... மருந்து வாங்கி வந்திட்டேன்... உடனே கொடுங்க... இந்தாங்க...''

''நோ ஹோப்ஸ் மிஸ்டர்விக்டர்'' என்றாள் அவள் அமைதியான குரலில்.

''டாக்டர் ஆண்டவனை வேண்டிக்கச்சொல்லிட்டுப் போயிட்டார்....''

''அம்மா....''

அம்மா அசையவில்லை.

''ஷி இஸ் டெட்....''

வாய் தானே முணு முணுத்தது.

''மோனிகா... மோனிகா....''

அப்பா வாய் விட்டு அரற்றினார். தடாலென எழுந்தார். வேகம் தாளாமல் அப்படியே சரிந்தார். மயக்கமாய் உடல் தளர்ந்தது.

விக்டரின் கண்களில் கண்ணீர் சட்டென உறைந்தது. தொங்கிக் கொண்டிருந்த இதயம் கூடிப்பட்டு இறுகியது. ஓய்ந்த உடலில் வேகம் வந்தது.

| யார்? | யார்? | யார்? |
|---|---|---|
| நடிக்க வந்த நாள் முதல் வீடு மாறாமல் ஒரே வீட்டில் குடியிருக்கும் ஒரே கதா நாயகன் | மனைவி பெயரைத் தன் பெயருடன் இணைத்து சினிமா டைட்டிலில் காட்ட வைத்த ஒரே நடிகர் | தன் பெயரில் நெருப்பைச் சுமந்து நிற்கும் ஒரே நடிகை |

''அப்பா....''

நர்ஸ் பாய்ந்து எடுத்துத் தந்த தண்ணீரை வாங்கி அவர் முகத்தில் சுள்ளென்று அடித்தான். அசைந்து கொடுத்தார். கண்ணைத் திறந்து பார்த்து, சூழ்நிலை உறைத்தவுடன் கலங்கினார்.

''அப்பா... ரிலாக்ஸ்... ப்ளீஸ்... அம்மா செத்துட்டாங்களே... பிரார்த்தனை சொல்ல வேணும்? சொல்லுங்கப்பா....'' என்று மெல்ல அவர் தோளை அணைத்துத் தேற்றினான்.

கண்களை மூடிக் கொண்டான். இயல்பாய் வார்த்தைகள் அப்பாவின் நாவசைவில் உயிர் பெற்று ஓடி விழுந்தன.

''இப்பரதேசத்தை விட்ட ஆன்மாவே, அநந்த காருண்ய கிறிஸ்துவானவர் இன்று உன்னைத் தம் திருவடியாராகிய அற வோருடைய சமூகத்தில் அழைத்தருள்வாராக... தமது தேவத் திருமுன் உன்னை வைத்துக் கொள்ளுவாராக... வானத் தூதர்கள் அபிரகாம் இருக்கிற இடத்துக்கு உன்னை அழைத்துக் கொண்டு போவார்களாக....''

அந்தக் கரகரப்பான குரலுடன் இழைந்து வார்த்தை வார்த்தையாய்ப் பிரார்த்தித்த போது, மனசு கொஞ்சம் பாரத்தை வீசி யெறிந்தாற்போல் தோன்றிற்று.

அம்மாவை இனி கர்த்தர் பார்த்துக் கொள்வார்.

அப்பாவை விட்டுத்தான் பிடிக்கவேண்டும். அவரை அதிகமாய்த் தேற்றினால் துக்கம் பொங்கிப் பொங்கி வரும். தானாகஅடங்கிப் போகட்டும்.

மெல்ல எழுந்து வெளியே வந்தான். பதற்றப்படாமல் யோசிக்க வேண்டும். ஒவ்வொன்றாய்.

முதலில் வீட்டுக்குத் தகவல் சொல்லவேண்டும். ஃபிலோமினா செய்தியை எப்படித் தாங்குவாள்?

திடுமென்று விஷயத்தை உடைக்காமல் நாசூக்காய் எடுத்துச் சொல்ல வேண்டும். அப்புறம் இன்னும் யார் யாருக்குச் சொல்ல வேண்டும்? பெரிதாய் ஒரு பட்டியலே மனத்தில் புரண்டு படுத்தது.

திருச்சி சின்னம்மா, கொல்லம் மாமா, காலிகட் அத்தை....

அறைக்குள் நுழைந்து நர்ஸிடம் பேசினான்.

''பாடியை எடுத்துக்கிட்டுப் போகலாமில்லையா?''

''மொதல்ல பில் செட்டில் பண்ணணுமே. காலேல ஆறு மணிக்கெல்லாம் பணம் கட்டி எடுத்துட்டுப் போயிடுங்க....''

மணி பார்த்தான். நாலு.

''இன்னும் இரண்டு மணிநேரம் இருக்கே.'' என்று இழுத்தான்.

''ஸாரி மிஸ்டர் விக்டர்... வேறு ஒண்ணு செய்யுங்க. அந்த மணிக்கு சீஃப் வந்துடுவார். அவர்கிட்ட ஒரு வார்த்தை சொல்லிட்டு....''

''ஓ.கே. அப்பாவைக் கொஞ்சம் பாத்துக்குங்க.... நான் மெஸேஜ் கொடுத்திட்டு வந்திடறேன்....''

''இங்க வராதீங்க....'' என்றாள் அவள். ''பாடியை நாலாம் நம்பர் ரூமுக்கு மாத்திடுவோம்...''

அப்பாவைத் திரும்பிப் பார்த்தான். அழுகையின் சப்தம் குறைந்திருந்ததே தவிர வேகம் குறையவில்லை.

ஸ்கூட்டரை உதைத்துக் கிளப்பினான். டீக்கடை ஒன்று வழியில் ஆவென்று திறந்திருந்தது. உள்ளே நுழைந்து சில்லறை மாற்றிக்கொண்டான்.

தந்தி அலுவலகத்து வாசலிலேயே டெலிஃபோன் பூத் கதவில்லாமல் காத்திருந்தது.

ஐம்பது பைசா நாணயமாய்க் குவித்து, சலிப்பில்லாமல் ஒவ்வொரு முறையும் அம்மா செத்துப் போனதைப் பற்றிச் சொன்னான். எதிர்ப் பக்கம் ஃபோனிலேயே அழ ஆரம்பித்தவர்களுக்கு ஆறுதல் சொன்னான்.

விலாசத்தை நினைவுக்குக் கொண்டு வந்து தந்தி கொடுத்துவிட்டு வெளியில் வருகையில் மணி ஐந்தை நெருங்கிக் கொண்டிருந்தது. விடிய ஆரம்பித்திருந்தது. சட்டென்று பொறி தட்டிற்று.

காஃபினுக்குச் சொல்ல வேண்டும்.

அன்று நகரில் வீட்டுக்குப் போகிற வழியில் கடையைப் பார்த்த நினைவு.

அளவு கேட்பார்களே.

நர்ஸிங் ஹோமுக்கு மறுபடியும் வந்தான். பில்லியனுக்குப் பின்னால் ஸ்டெப்னி மேல் கட்டியிருந்த கயிற்றை உருவிக் கொண்டான்.

நான்காம் எண் அறைக்கு நடந்தான். அப்பா இன்னும் ஓய்ந்துதான் இருந்தார்.

தோளுக்குத் தோளும் காலுக்குக் கையும் அளவெடுத்துக் கொண்டான். கற்று முற்றும்

யார்? யார்? ஒரே ஒரு...

இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்த ஒரே நடிகை

தன் வீட்டிலேயே 'மினி' தியேட்டர் வசதிகளைச் செய்து கொண்டுள்ள ஒரே நடிகை

விடை 59 ம் பக்கம்

—திரைதானி

பார்த்தான். ஃபிரிஜுயில் போட்டு நடையைத் தேய்த்துக் கொண்டே வர, குப்பென்று அந்த வாசம் காற்றில் கலந்து விசிற்று.

நடந்தான்.

பணம் வாங்குகிற கௌண்டர் இன்னும் திறக்கப்படவில்லை. மொத்தம் எவ்வளவு கட்ட வேண்டி வரும்?

ஆறு மணிக்கு மேல்தான் எதுவுமே தெரியும்.

மெல்ல நடந்து ஸ்கூட்டரை அடைந்தான்.

கடையை அப்பொழுதுதான் இறந்து கொண்டிருந்தார்கள். கடை என்பதை விட ஒரு சின்னத் தச்சுப் பட்டறை என்றுதான் அழைக்கத் தோன்றிற்று.

''ஒரு காஃபின் அர்ஜண்டா வேணுமே..'' என்றான்.

''ஓசத்திப் பலகையா, மட்டமா?''

''ஓசத்திலேயே செய்துடுங்க.''

''சைஸ்?''

கயிற்றை எடுத்துக் கொடுத்தான்.

''எத்தனை மணிக்கு ரெடியாகும்?''

''வேன் சர்வீஸ் தேவைப்படுமில்லே?''

''ஆமாம்.''

''அட்ரஸ் குடுத்துட்டுப் போங்க. பன்னெண்டு மணிக்கு அனுப்பிடறோம்... ஏழுத்து. அய்யா கிட்ட அட்வான்ஸ் வாங்கிக்க....''

வீடு அமளி துமளிப் பட்டுக் கொண்டிருந்தது.

ஹாலின் மத்தியில் உடலைக் கிடத்தியிருந்தார்கள். சுற்றி நின்றபடி உட்கார்ந்தபடி பெண்கள் குரலெடுத்து அழுது கொண்டிருந்தார்கள்.

ஜான் விக்டருக்கு ஆச்சரியமாயிருந்தது. 'என் அம்மா செத்துக் கிடக்கிறாள்.... தூரத்து உறவு, நண்பர்களுக்கெல்லாம் துக்கம்பொங்கிக் கொண்டு வருகிறது... என்னை மட்டும் ஏன் இது பாதிக்கவில்லை....'

ஃபாதர் வந்து விட்டார். மங்கள ஸ்நானம் செய்வித்து உடுத்தி அம்மா தயாராகி விட்டாள். பிரார்த்தனைகள் சொல்லி அவளை மெல்லச் சவப் பெட்டிக்குள் எடுத்து வைத்தார்கள்.

வேன் சின்ன ஊர்வலமாய் சர்ச்சுக்குச் சென்றது. மணி அடித்து, மீண்டும் பிரார்த்தனைகள் சொல்லி... அம்மாவின் கடைசிக் கட்டப் பயணம் கர்த்தரிடம் சொல்லிக் கொண்டு கிளம்பிற்று.

விக்டருக்கு மனசு உறுத்திக் கொண்டிருந்தது. வீட்டில் நடந்த அந்தச் சின்ன உரசல்...

''கொல்லத்தி லிருந்து தாமஸ் வரவில்லையே.... '' என்று யாரோ இழுத்தார்கள்.

அப்பா கூடத் தயங்கினார்.

''அதுக்கு என்ன செய்யறது?'' என்று விக்டர்தான் குறுக்கிட்டான்.

''இன்னும் நெறையப் பேர் வரணும்... ஒவ்வொருத்தராப் பார்த்துக்கிட்டிருந்தா அம்மாவுக்கு உடம்பு ஊதிப் போயிடும். ஃபாதர் வந்த உடனே கிளம்பிடலாம்... விட்டுப் போனவங்க நேரே க்ரேவ் யார்டுக்கு முடிஞ்சா வரட்டும்....''

மறுத்துப் பேச யாருக்கும் தைரியம் வரவில்லை. ஆனால் முணு முணுப்புக்கள் சலசலப்பாய் அலை பரவின.

யாருக்காகவும் அம்மாவைக் காக்கவைக்கக் கூடாதென்று விக்டருக்குத் தோன்றிற்று. ஆனால் இப்போது அம்மாவுக்கு இதில் ஏதும் வருத்தமிருக்காதே என்ற சந்தேகம் மனத்தைக் கொஞ்சம் அரித்தது.

சுற்றிலும் துக்கம் தோய்ந்த முகங்கள்.

ஓலம் இல்லை. கேவல்கள் மட்டும் ஒன்றிரண்டு அங்கும் இங்குமாய்க் கேட்டன. இருந்ததையெல்லாம் கொட்டித் தீர்த்து விட்ட மாதிரி வறண்டுபோன முகங்கள்.

பூமி, பெரிதாய்ப் பள்ளம் தோண்டப்பட்டு, அம்மாவை வாங்கிக் கொள்ளத் தயாராய் இருந்தது. சவப் பெட்டி மூடப்பட்டு ஸ்க்ருக்கள் முடுக்கப்பட மூடி தயாராயிருந்தது.

சூழ்நிலையில் லேசாய்ச் சலசலப்பு.

சுற்றியிருந்தகூட்டம் பிளந்து ஃபாதருக்கு வழி விட்டது. வாட்டிக் கொண்டிருந்த சூரியனின் ஒளிக் கடலில் அவரது அங்கி வெள்ளையாய்ப் பளிச்சிட்டது.

அணிந்திருந்த கண்ணாடி அவ்வப்போது இரட்டை நட்சத்திரங்களாய் ஜ்வலிக்க, ஒரு கையில் ஜபமாலையை உருட்டிக் கொண்டு மௌனமாய் வந்தார். இன்னொரு கையில் புத்தகம். முகம் சாந்தமாய்த் துலங்கிற்று.

குழியருகில் வந்து நின்றார். புத்தகத்தைப் பிரித்தார். குரல், சூழ்நிலை மௌனத்தைச் சிதறடித்துக் கொண்டு கணீரென்று கிளம்பிற்று.

'நம் சகோதரியை... இவ்வுலக வாழ்வினின்று நம்மிடம் அழைத்துக்கொள்ள எல்லாம் வல்ல இறைவன் திருவுளம் கொண்டதால் இவர் உருவான மண்ணிற்கே திரும்பிச் செல்லும்படி இவர் உடலை நிலத்திற்குக் கையளிக்கிறோம்....'

விக்டருக்குக் களைப்பாயிருந்தது. பயமாயிருந்தது. இத்தனை நேரம் இல்லாத பயம் பயம்தான். அம்மா நாளையிலிருந்து கூட இருக்கப் போவதில்லையா? அவள் குரலை இனிமேல் கேட்கப் போவதில்லையா? தொண்டையில் துக்கம் சிக்கிற்று.

'நம் சகோதரியை ஆண்டவனிடம் ஒப்படைப்போம். ஆண்டவர் இவரைத் தம் அமைதியுள் ஏற்றுக் கொள்வாராக.'

போகிற சமயத்தில் ரொம்பக் கஷ்டப் பட்டாயா அம்மா? கடைசி நேரத்தில் கூட என்னைப் பார்த்து ஒரு வார்த்தை சொல்லவில்லையே...நான் இனிமேல் யாரைப் பார்த்து அம்மா என்று கூப்பிடுவேன்...

அம்மா... அம்மா...

ஃபாதர் பிரார்த்தனை முடித்துப் புனித நீரைத் தெளித்தார்.

ஸ்குருக்கள் முடுக்கப்பட்டு மூடிப் பெட்டியை அழுத்த மூடிற்று.

குழியில் மெதுவாய் இறங்கிற்று.

குனிந்து கையில் எடுத்த பிடி மண்ணைக் குழியில் இறைத்தார் ஃபாதர்.


விக்டர் குனிந்தான். மண்ணைக் கை இறுகப் பற்றிற்று. துடித்த விரல்களுக்கிடையில் மண் கல்லும் புல்லுமாய்ச் சிறைப்பட்டது. நிமிர்ந்தான். கையைத் தூக்கினான்:

தூக்கிய கையை இறக்க முடியவில்லை. கால் மடங்கிப் போயிற்று.

உடலின் இறுகிய பகுதி யெல்லாம் குழைந்து கொடுக்க உடல் சரிந்து விழுந்தான். கண்டத்திலிருந்து வெடித்துக்கொண்டு கிளம்பிற்று.

''அம்மா...அம்மா... என்னை விட்டுப் போயிட்டியாம்மா...''

இவ்வளவு நேரம் ஸ்திரமா யிருந்த வெண்ணெய்க் கோபுரம் உருகிக் கலையலாயிற்று.












# களுக்... களுக்..!

கல்யாணச் சாப்பாட்டுப் பந்தியில் ஒருவர் "சார் ஒரு சந்தேகம்.. நீங்க பெண் வீட்டைச்சேர்ந்தவங்களா?"

பதில்: "கை குடுங்க சார்... நீங்களும் இன்விடேஷன் இல்லாமே வந்த கேஸ்தானா?"

●

ஒருவர் ஒரு பத்திரிகைக்கு எழுதி அனுப்பிய கதை போன வேகத்திலேயே திரும்பி வந்தது. காரணம், அவர் ஆசிரியருக்கு எழுதியிருந்த குறிப்புதான்: "இது முற்றிலும் கற்பனையே. உயிருடன் இறந்தவர்களையோ, இருப்பவர்களையோ குறிப்பிடாது."

●

"ரயிலுக்கோ சினிமாவுக்கோ எதுக்கும் டிக்கட் ரிசர்வ் செய்யணும்னு எங்க மாமாவைத்தான் எல்லாரும் அனுப்பறாங்க.."

"ஏன்?"

"அவர்தான் எங்க வீட்டிலேயே கொஞ்சம் 'ரிசர்வ்டு டைப்' ஆச்சே!"

●

"பாட்டி, நானும் எதிர்வீட்டு பாலுவும் கிரிக்கெட் ஆடப்போகிறோம்"

"அசடு அசடு.. பெண் பிள்ளைகள் விளையாட்டெல்லாம் விளையாடறேளே!.."

●

"நான் நிறைய பணத்தைக் கொட்டி எடுக்கப்போற இந்தப்படம் மட்டும் சக்ஸஸ் ஆயிட்டா நான் பெரிய படாதிபதியாயிடுவேன்.."

"இல்லாட்டி?"

"சன்யாசம் வாங்கிக்கிட்டுப் பெரிய மடாதிபதி ஆவேன்."

●

"ஏன்டி கமலா, உன் கணவருக்கு இந்தச் சின்ன வயசிலேயே முழு வழுக்கை விழுந்துட்டதே!"

"நல்லதுக்குத் தானேடி, அது?"

"எப்படி?"

"சமைக்கும்போது முடி ஒண்ணும் கறியிலோ, குழம்பிலோ விழாதே!"

●

"வரவர என் கணவருக்கு ஞாபக மறதி அதிகமாயிடுத்து, டாக்டர்!"

"ஏன்?"

"எனக்கு உதட்டுக்கு லிப்ஸ்டிக் கேட்டால், ஒரு டின் பெயின்டும் பிரஷ்ஷும் வாங்கிக் கொண்டுவந்து நிக்கிறாரே!"

- ஜீ. நடராஜன்


அட்டையைத் தொடர்ந்து அறுவைகள்
கேள்வித் தாளில் உள்ள பிழைகளை திருத்திச் சொல்வது போல் விடைத் தாளில் உள்ள பிழைகளை திருத்தித் தர மாணவர்களுக்கு உரிமை வேண்டும்!
உரிமைக்குப் போராடுவோம்!
மாணவர் மன்றம்
என்னப்பா? ஒவ்வொரு கேள்வியையும் படிச்சிட்டு 'ஓவர் ஓவர்'னு சொல்றியே?
(வயர்லஸ் செட்டில்) இங்கே சூபர்வைஸர் நிக்கறார். இப்ப ஒண்ணும் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டாம்! ஓவர்!
என்னுபா... நாம எக்ஸாமை 'பாய்'காட் பண்ணிறு என்ன?
நாம எப்படி எக்ஸாமை 'பாய்'காட் பண்ண முடியும்? முடியவே முடியாது!... கேர்ல்காட் பண்ணலாம்!
'கொஸ்சின்ஸ்' எல்லாம் ரொம்ப ஈஸி!.... ஆனு 'ஆன்ஸர்ஸ்'தான் கொஞ்சம் ஹார்டா இருந்தது!
ஹாய் வா!..ம்.ம் உன் தலையெழுத்து எப்படி இருக்கு?
எல்லாம் எழுதிட்டு வரேம்ப்பா!
தலையெழுத்து நல்லா தாம்ப்பா இருக்கு!

## விழுந்த 12

சில நாட்கள் வீட்டிலேயே தங்கிவிட்ட தனுல் அலுவலகத்தில் கஸ்தூரிக்கு வேலை குவிந்து விட்டிருந்தது. கணக்கு வழக்குப் பகுதியில் உதவி அக்கௌண்டன்ட்டாகப் பணி புரிந்து கொண்டிருந்தாள். சில மாதங்களில் தலைமைப் பதவி கிட்டக் கூடும் என்றதொரு பேச்சு அடிபட்டுக் கொண்டிருந்தது. அலுவலகத்திலே அவளுக்கு நல்ல பெயர். வேலையில் கறாரான ஆசாமி என்றதொரு புகழ்.

மேஜை மேல் குவிந்து கிடந்த ஃபைல்களை ஒரு வழியாகக் கவனித்து விட்டு அவள் நிமிர்வதற்குள் பகல் உணவு நேரம் நெருங்கி விட்டிருந்தது. எழுந்து சென்று வாஷ் பேசினில் முகத்தைக் கழுவி முடியைச் சீர் திருத்திக் கொண்டு தன் அறைக்குள் வந்து உட்கார்ந்தாள். சாதாரணமாக அவள் தினமும் தன் கையோடு கொண்டு வரும் டிபனைத் தன் அறைக்குள் அமர்ந்தபடியே சாப்பிட்டு முடிப்பது வழக்கம். அவசரத்தில் டிபனை மறந்துவிடும்போதுதான் அலுவலகப் பையனை அனுப்பி ஹோட்டலிலிருந்து சிற்றுண்டி ஏதேனும் தருவித்துக் கொள்வாள். சில நாட்கள் வெறும் காப்பியுடன் பகல் உணவை முடித்துக் கொண்டு பல்லைக் கடித்துக்கொண்டு வேலை பார்ப்பதும் உண்டு. கடும் பசியுடன் வீட்டுக்குத் திரும்பும்போது சமைக்கணுமே என்று அடுப்பைக் கண்டு அரண்டு போய் நிற்பதும் உண்டு. அலுவலகத்து வேலைக்குப் பின் அவள் அப்படிக் களைத்துப் போவது வழக்கம். ஆனல் இப்பொழுதெல்லாம் பள்ளிக்கூடக் குழந்தை சாப்பாட்டு டப்பாவை வேகமாகத் திறந்து அம்மா என்ன டிபன் அனுப்பி யிருக்கிருள் என்று ஆவலுடன் பார்ப்பதுபோன்று – சாப்பாட்டு வேளையின்போது அலுவலகத்துக்குக் கையோடு கொண்டு வரும் அந்த அழகான சிறு சதுர மூங்கில் கூடையைச் சட்டென்று திறந்து பார்ப்பதில் ஓர் உற்சாகம் இருந்தது. அலுப்பு ஏற்படாது மாமியாருக்கு. மருமகள் நாளைக்கொரு விதமான டிபனைக் கட்டிக் கொடுத்து அனுப்பி வந்தாள். மாமியாருக்கும் வயதை மறந்து பள்ளிக்கூடப் பாப்பாவைப் போல ஆவலுடன் திறந்து பார்ப்பதில் எத்தனை ஆசை? அறையின் ஓரமாக ஆபீஸ் பையன் கொண்டு வைத்திருந்தபிரம்புகூடையை எடுத்து மேஜையின் மேல் வைத்துக் கொண்டாள்.

மாதங்கி வீட்டுக் காரியங்களைக்கூட ரசனை உணர்வோடுதான் செய்து வந்தாள்.

கச்சிதமாகக் கூடைக்குள் வெள்ளைத் துணி மடிப்பைப் போட்டு அதற்குள் சூடு தணியாத ஸ்டீல் கண்டெய்னரில் இட்லியும் வெங்காயச் சட்னியும் வைத்து அனுப்பியிருந்தாள். பிளாஸ்கில் காப்பி – தாகத்துக்குக் குடிக்கக் காய்ச்சி ஆறவைத்த தண்ணீர் ஒரு சிறு பாட்டிலில். கடைசியாகச் சாப்பிட ஒரு சிறு ஆரஞ்சுப் பழம்.

இட்லி பூப்போல் சாப்பிடச் சுகமாகவே இருந்தது.

அதுவும் சில நாட்களாகக் கஞ்சியும் மோருமாகச் சாப்பிட்டு அலுத்துவிட்ட நாக்குக்கு வெங்காயத் துவையல் வெகு ருசியாகத் தான் இருந்தது.

டிபன் அடுக்கின் மூன்றுவது காலி தட்டுக்குள் ஒரு துண்டுக் கடிதத்தை வைத்திருந்தாள் மருமகள்.

'கூடை ஓரத்தில் சின்ன பிளாஸ்டிக் டப்பாவுக்குள் நீங்கள் பகல் வேளைக்குச் சாப்பிட வேண்டிய மாத்திரைகளை வைத்திருக்கிறேன். இன்னும் தொடர்ந்து சில நாட்கள் மட்டும் சாப்பிட்டால்போதும் என்று டாக்டர் சொல்லியிருக்கிருர். மறக்காதீர்கள் – மாதங்கி'.

காப்பியுடன் மருந்தையும் சேர்த்து விழுங்கி விட்டுக் கூடையை மூடி அப்பால் வைத்தாள். கையைக் கழுவிக் கொண்டு மறுபடி உள்ளே வந்து ஆசனத்தில் அமர்ந்து கொண்டாள்.



வயிறு நிறைந்து விட்டிருந்தது. ஆனாலும் கண்களில் பட்ட தூசி போல் சந்தேகத்தின் அடிப்படையில் எழுந்த ஒரு கேள்வி வேதனையாக மனத்தைச் சதா உறுத்திக் கொண்டிருந்தது. வேலையின்போது மறந்துவிட்டிருந்தாள். பகல் மறுபடியும் அலுவலகம் துவங்கக் கொஞ்ச நேரம் இருந்தது. அந்த ஓய்வு நேரத்தில் மனத்துக்குள்ளே மீண்டும், மீண்டும் அந்த உறுத்தல்.

இந்தப் பெண் மாதங்கி நீண்ட நாள் அனுபவம் உள்ள குடும்பத் தலைவி போல் வீட்டைச் சாமர்த்தியமாகத்தான் நிர்வகிக்கிறாள்.

அடக்கமாக — பொறுமையாக — அன்பாகவே நடந்து கொள்கிறாள்.

இப்படிப்பட்டவள் பெரியம்மா சுமதி சொன்னதைப் போன்றதொரு காரியத்தைச் செய்திருப்பாளா?

தனது பழைய காதல் விவகாரம் மாமியாருக்குத் தெரியக்கூடாது என்பதற்காகப் பொறுமையாக இருப்பவள் போல நடிக்கிறாளா?

தனக்குள்ளே பலவாறு எண்ணி முடிவுகாண முடியாது சஞ்சலப் பட்டுக் கொண்டிருந்தாள் கஸ்தூரி.




அன்று காலை புறப்படு முன் மருமகள் முகத்தைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்த போது கூட மனத்தில் அதே கேள்வி தான்.

கபடமே இல்லாது வெளிப்படையாகப் பேசும் இவள் அந்தக் காரியத்தைச் செய் திருப்பாளா?...

காதலிப்பது என்பது பெரும் குற்றமா என்ன? இளம் வயது. தாய் தந்தை இல்லாத தாலே எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ள ஒரு நல்ல தோழி கிடையாது. உணர்ச்சி வசத்திலே... இளமை மயக்கத்திலே ஏதாவது ஒரு தவறு செய்திருக்கலாம். அதற்காக இப்போது அவளைத் திரும்பப் பெரியப்பா வீட்டுக்கு விரட்டப் போகிறாளா?

அவள் மகன் ஹர்ஷன் மட்டும் பண்பின் சிகரமா? ஒழுக்கத்தின் இலக்கணமா? ஊர் மீனாவுடன் காதல் என்று ஊரைச் சுற்றி வரவில்லையா? மகனுக்கு ஒரு நியாயம் இன்னொருத்தி மகளுக்கு ஒரு நியாயமா?...

பெண்களின் உரிமையைப் பற்றி அழுத்தமாகக் கூட்டங்களில் பேசும் மாதர் சங்கத்துத் தலைவி அவள்.

அவள் வீட்டு விஷயம் என்றதுமே அடிப்படைக் கொள்கைகள் கலகலத்து விட்டனவோ?

மனச்சாட்சி முள்ளாகத் தைத்தது,

திடீரென்று மேஜையின்மேலிருந்த தொலைபேசியில் எண்களைச் சுழற்றினாள்.

''ஹலோ!'' — மறு பக்கத்தில் மாதங்கியின் இனிய குரல் காதைத் தழுவியது.

''அத்தையா?.... என்ன இந்த நேரத்தில்... உடம்புக்கு ஏதாச்சும்....'' கவலையுடன் கேட்டாள் மருமகள்.

அந்தக் குரலில் தொனித்த ஆதங்கமும் அன்பும் கஸ்தூரியைப் புல்லரிக்கச் செய்தன.

'என்ன மட்டமான புத்தி எனக்கு? மருமகள் என்ன செய்து கொண்டிருக்கிறாள் என்று துப்புத் துலக்கக் கூப்பிட்டேனே! சே!...' என்று தன்னைத் தானே சாடிக்கொண்டாள்.

''பத்து நாளா வீட்டோட உன்னோடு கூடவே இருந்துட்டு இப்ப ஆபீசுக்கு வந்துட்டேன் இல்லையா... உன் குரலைக் கேட்கணும் போல இருந்தது. கூப்பிட்டேன்... ஏதாவது சாப்பிடு; பட்டினியா வேலைசெய்துக் கிட்டு இருக்காதே....''

''அத்தை! நீங்க ஒரு பச்சைக் குழந்தை!'' கலகலவென்று மாதங்கி சிரித்தாள்.


தொலைபேசியை வைத்துவிட்டு முகத்தைக் கைக்குட்டையால் அழுத்தித் துடைத்துக் கொண்டாள் கஸ்தூரி.

அவள் செய்த காரியம் அவளுக்கே அவமானமாகத்தான் இருந்தது.

மாலையில் காரை ஓட்டிக் கொண்டு வீட்டை நோக்கி வந்த சமயம் பாதி வழியில் அந்த நினைப்பு வந்தது.

அசலாம்பிகைக் கல்லூரியின் தலைவி ராதிகாவை அவளுக்கு நன்றாகவே தெரியும். இருவரும் ஒரே கல்லூரியில் படித்தவர்கள்.





நெருங்கிப் பழகினவர்கள். ஹர்ஷன் கல்யாணத்தின்போது வெளியூரிலிருந்து வாழ்த்துச் செய்தி அனுப்பி யிருந்தாள்.

கல்லூரி விடுமுறை முடிவடையும் தறுவாயிலிருந்ததால் அவள் வெளியூரிலிருந்து கட்டாயம் திரும்பியிருப்பாள். அவள் வீடு, போகும் வழியில்தான் இருக்கிறது. எதேச்சையாக அந்தப் பக்கம் போனவள் அவளைப் பார்த்துவிட்டுப் போக வந்தேன் என்று சொல்லிக்கொண்டு ராதிகாவை அணுகினால்?

நெடுஞ் சாலையினுள் குறுக்கே ஓடிய தெருவிலிருந்த சிறிய வீட்டின் முன் காரை நிறுத்திவிட்டுக் கஸ்தூரி இறங்கினாள்.

கம்பிக் கதவிடப்பட்டிருந்த வராந்தாவில் ராதிகா சாய்வு நாற்காலியில் மாலைப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தாள்.

"வா...வா! பார்த்து ரொம்ப நாளாச்சு!" மகிழ்ச்சியுடன் வரவேற்றாள்.

"கல்லூரியில் யாருக்கோ இடம் வேண்டிச் சிபாரிசு செய்ய வந்து விட்டதாகப் பயப்படாதே. இந்த வழியாகப் போனேன். அப்படியே உன்னைப்பார்த்து நாலுவார்த்தை பேசிவிட்டுப் போகலாம்னுதான் வந்திருக்கேன்.." சிரித்தபடி மோடாவில் அமர்ந்தாள்.

சிறிது நேரம் சம்பந்தமில்லாத பல கதைகளைப் பேசிவிட்டு மெல்ல ஆரம்பித்தாள். கேட்டுத் தெரிந்து கொள்ள அவமானமாகத்தான் இருந்தது. கேட்காதிருக்கவும் மனம் ஒப்பவில்லை.

"ஹர்ஷன் கல்யாணத்தின்போது உன் வாழ்த்துச் செய்தி கிடைத்தது. நீ நேரில் வர முடியலையேன்னு கொஞ்சம் வருத்தமாத்தானிருந்தது. நான்கூட உன் வாழ்த்துச் செய்திக்கு நன்றி தெரிவிக்க எழுதியிருந்தேன். கடிதம் கிடைச்சிருக்கும். உனக்குக் கல்யாணத்தின்போது நடந்த விபரீதம் தெரிய நியாயமில்லே.... கல்யாணத்துக்கு முதல் நாள்...."

ராதிகா சட்டென்று கஸ்தூரியின் கரங்களைப் பற்றிக் கொண்டாள்.

"நீ விவரிக்க வேண்டாம். ஜயந்திக்குப் பதில் அந்தப் பெண் மாதங்கியை வச்சுக் கல்யாணத்தை நீ சமாளிச்சுட்டேன்னு கேள்விப்பட்டேன். உண்மையில் அதைக் கேட்டதும் ரொம்பச் சந்தோஷப்பட்டேன்."

"என்ன சொல்றே...?"

"நாம படிச்ச காலம் வேறே — இப்பப் படிக்கிற மாணவிகளின் மனநிலைக்கும் நமது மனநிலைக்கும் இடைவெளி ரொம்பவே அதிகம். அதனாலே ஒரு கல்லூரியைத் திறமையா நிர்வகிக்கணும்னு தலைவிக்கும் ஆசிரியர்களுக்கும் அதில் படிக்கும் மாணவிகளைப் பற்றி ஓரளவு நன்றாகவே தெரிந்திருக்க வேண்டும். அதுவும் கொஞ்சம் மாறுபட்ட நடத்தை உடைய பெண்களை நாங்கள் தீவிரமாகவே கண்காணிக்கிறது வழக்கம்."

கஸ்தூரியின் நெஞ்சு படபடத்தது.

"இரு...நாம சாப்பிடத் தேநீர் எடுத்து வர சமையல்கார அம்மா கிட்டச் சொல்லி விட்டு வரேன்...." ராதிகா எழுந்து உள்ளே சென்று விட்டாள். அவள் திரும்புவதற்குள் நேரம் யுகமாகக் கஸ்தூரிக்குக் கனத்தது.

"கல்யாணப் பத்திரிகையைப் பார்த்தபோது என் மனம் கொஞ்சம் சங்கடப் பட்டது. திருமணம் சுவர்க்கத்தில்நிச்சயிக்கப் படுகிறது என்கிறார்களே... எத்தனை பெரிய உண்மைன்னு நான் வியந்து போனேன். கடைசி நிமிஷத்தில் வந்து குழப்புவது நல்லதல்லவே அதனால் மௌனமாக இருந்து விட்டேன். உன் சம்பந்தி வீட்டைப் பற்றிப் பேசுகிறேன் என்று கோபிச்சுக்கப்பியோ?"



## ஸ்ரீதேவியின் பாஸ்போர்ட் • பரிசு ரூ 500/-

**உயரம் - 4'.7", 5'.2", 5'.7"**

**கண்களின் நிறம் - கறுப்பு, நீலம், பிரௌன்**

**உடலில் மச்சம் இருப்பது - வலது புஜத்தில், வலது குதிகாலில் உள்பக்கம், கழுத்தில்**

**பிறந்த தேதி - 1963, ஜனவரி 6, ஆகஸ்ட் 13, செப்டம்பர் 27**

**சென்ற நாடுகள் - அமெரிக்கா, ஐரோப்பா, ஸ்ரீலங்கா**

இங்கு ஒவ்வொரு அம்சத்துக்கும் மூன்று விடைகள் உள்ளன. ஸ்ரீதேவியின் பாஸ்போர்டைப் பார்த்த "சவன்" சரியான விடைகளைத் தம்மிடமே வைத்துக் கொண்டுள்ளார், ரகசியமாக! 'சவனி'ன் விடைகளும் நீங்கள் ஒரு தபால் கார்டில் எழுதி அனுப்பும் விடைகளும் ஒரே மாதிரி இருந்தால் பரிசு ஐந்நூறு ரூபாய்! ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் வந்தால் பரிசுத்தொகை சமமாகப் பகிர்ந்தளிக்கப்படும். முடிவு தேதி ஏப்ரல் 29. "ஸ்ரீதேவியின் பாஸ்போர்ட்" என்று தலைப்பு குறிப்பிடவும்.




ஆம்! நான் லக்ஷ்மி' விலாஸ் பாங்கில் சேமிக்கத் தொடங்கிய தினமே எனது வாழ்வின் பொன்னாள்! லக்ஷ்மி விலாஸ் பாங்கிலுள்ள எனது சேமிப்பு ஒளிமயமான எதிர்காலத்திற்கு வழி வகுத்தது மட்டுமின்றி இன்றைய அத்யாவசியத் தேவைகளையும் பூர்த்தி செய்து எனது கனவுகளை நனவாக்கியது.' இன்றும் நான் லக்ஷ்மி விலாஸ் பாங்கில் தொடர்ந்து சுலபமாக சேமித்து வருகிறேன். உங்கள் வாழ்வும் ஒளிமயமாக விளங்கிட, லக்ஷ்மி விலாஸ் பாங்கில் இன்றே சேமிக்கத் தொடங்கிடுவீர்!

அன்னியச் செலாவணியில்
வர்த்தகம் செய்ய
அங்கீகாரம் பெற்றவர்கள்.

LVB

**லக்ஷ்மி விலாஸ்**
**பாங்க் லிமிடெட்**

பதிவு அலுவலகம் : கரூர்-639 001.
நிர்வாக அலுவலகம்: சென்னை-600 086.

என்.வி. ஸ்ரீநிவாசன்
சேர்மன்

SUSAK/LVB/0004/81

அனைவருக்கும் எமது உளங்கனிந்த
தமிழ்ப்புத்தாண்டு வாழ்த்துக்கள்

சமையல்கார அம்மாள் கொண்டு வந்து வைத்த தேநீர்க் கோப்பையை எடுத்துத் தோழியிடம் நீட்டினாள் ராதிகா.

''உண்மையைச் சொன்னால் ஏன் கோவிச்சுக்கணும்...'' கஸ்தூரி மெல்லச் சிரித்துக் கொண்டே தேநீரை ஒரே மூச்சில் பருகி முடித்தாள். விவரிக்க முடியாத ஒரு அச்சத்தில் அவள் உடம்பில் ஒரு நடுக்கம் பரவிக் கொண்டது.

ராதிகா என்ன சொல்லப் போகிறாள்?... ரொம்பச் சுற்றி வளைக்கிறாளே...

''பிறகு நடந்ததைக் கேள்விப்பட்டபோது நீ ரொம்ப அதிர்ஷ்டக்காரின்னு நினைச்சு மகிழ்ச்சி அடைந்தேன்.

''உன் மருமகள் மாதங்கி வகுப்பிலே ரொம்பக் கெட்டிக்காரி. எல்லாத்திலும் முதல் இடம் பெறுகிறவள். அடக்கமான பெண். ரொம்பப் பணிவான குணம். எனக்கு அவளை ரொம்பப் பிடிக்கும்.

''ஆனால் தயானந்தனின் சொந்த மகள் ஜயந்தி படு பொல்லாத குட்டி. ரொம்ப வாய்த்துடுக்கு. பெரிய சண்டைக்காரி. மொத்தத்தில் ரெட்டை வால். அவளைச் சமாளிக்க ஆசிரியைகள் ரொம்பவே பாடு பட்டார்கள். போதாததற்குச் சின்னவயதிலேயே ஒருவனுடன் சிநேகம். பஸ் நிலையத்தில்.... கடைத் தெருவில்... என்று சந்திப்புக்கள். அது போதாது போல அவன் அவளைத் தேடிக் கொண்டு கல்லூரிக்கே வரத் தொடங்கினான்.

''கல்லூரி மாணவிகள் காதலிக்கட்டும். ஏராளமாகக் காதலித்துத் தொலைக்கட்டும். நாம் தடுத்து நிறுத்திவிடக் கூடிய காரியமல்ல காதல் விஷயம்.

''அதை எங்கள் கல்லூரிக்கு ஒரு விளம்பரமாக அமைப்பதைத்தான் நாங்கள் விரும்புவதில்லை.

''கல்லூரி வாயிலுக்கு அப்பாலே மாணவிகள் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும். — அது எங்கள் பொறுப்பல்ல என்பது என் கொள்கை. அதனால் அவளது அப்பாவைத் தொலைபேசியில் அழைத்து மகளின் நடத்தையைப் பற்றி ரொம்பக் கடுமையாக நான் பேசிவிட்டேன். ஆனால் என்ன காரணத்தினாலோ அவர் தம் மகளை அடக்குவதை விட்டு நன்றாகப் படித்துக்கொண்டிருந்த மாதங்கியைபி.யு.சி. படிப்புடன் நிறுத்திக் கொண்டு விட்டார்.

''ஜயந்தி படிப்பை முடித்துக் கொண்டு எங்கள் கல்லூரியை விட்டுப் போகும்வரை எங்களுக்கு அவள் ஒரு தலைவலியாகவே இருந்தாள். அதனால்தான் முதலில் கல்யாணப் பத்திரிகையில் அவள் பெயரைப் பார்த்தபோது மன வேதனைப்பட்டேன்..

'' 'நம் சிநேகிதி கஸ்தூரிக்கு இவளா மருமகளாக அமையணும், அட கடவுளே!' என்று சங்கடப்பட்டேன். பிறகு நடந்தது வேறு என்று தெரிந்தபோது நான் பட்ட மகிழ்ச்சி கொஞ்ச நஞ்சமல்ல.'' — புன்முறுவலித்தாள் ராதிகா.

''அப்படியா...?''— கஸ்தூரிக்கு இதுவரை தொண்டையை அடைத்துக் கொண்ட கனம் எங்கேயோ மறைந்து விட்டது போன்றதொரு லேசான உணர்வு ஏற்பட்டது.



நர்ஸ்: ''மயக்க மருந்து ஸ்டாக் இல்லையே.... எப்படி டாக்டர் பேஷண்டை மயக்கமடையச் செய்தீங்க....?''

டாக்டர்: ''ஆபரேஷன் செய்ய ஃபீஸ் எவ்வளவுன்னு பேஷண்டிடம் சொன்னேன் .... அவ்வளவு தான்!''

—உ.ராஜாஜி

---

''மாதங்கி ரொம்பவும் நல்ல பெண். எனக்கு அவளை ரொம்பவும் பிடிச்சிருக்கு. ஒரு மாமியார் மருமகளுக்குக் கொடுக்கும் சான்றிதழ் இது... ஞாபகமிருக்கட்டும்!'' சிரித்துவிட்டு எழுந்தாள்.

கேட்டை அகலமாகத் திறந்து வைத்து விட்டு ஆவலுடன் கார் அருகே ஓடிவந்த மருமகளின் முகத்தை உற்றுப் பார்த்த கஸ்தூரி மனம் கரைந்து போனாள்.

மாதங்கி எத்தனை அருமையானதொரு மருமகள்?

''என்ன அத்தை ஒரு மாதிரி இருக்கீங்க?'' கையிலிருந்த பிரீஃப் கேஸை வாங்கிக் கொண்டபடி கேட்டாள் மாதங்கி.

''ஒன்றுமில்லை. நாமெல்லோரும் சாப்பிட்டதும் ஒரு சினிமாவுக்குப் போய் வரலாம்னு பார்க்கிறேன்.''

''அவரும் கூட வருவாரா அத்தை?'' ஆவலுடன் மாதங்கி கேட்டாள்.

''ஹார்ஷனுக்கு நகைச் சுவை நிறைந்த படம்னா ரொம்பப் பிடிக்கும். வயிறே வலிச்சுடுமாம். அப்படிச் சிரிக்கிற காட்சிகளாம் அந்தப் படத்திலே. எனக்குக் கூட வாய் விட்டு நல்லாச் சிரிக்கணும் போல ஆசையா இருக்கு. அதனாலே மூணு டிக்கட்டு வழியிலேயே ஏற்பாடு பண்ணிட்டு வந்திருக்கேன். சரியா?''

முகம் மலர்ந்து போன மாதங்கியின் முதுகில் அன்போடு தட்டினாள்.

ராதிகா சொன்னது போல் மாதங்கியை மருமகளாக அடைந்தது பெரிய அதிர்ஷ்டம்தான். — எண்ணியபடியே மன நிறைவுடன் உள்ளே சென்றாள். (தொடரும்)

# மாலா

ஷைலஜா

ரயிலை விட்டு இறங்கிய சில நொடிகளில் பரிச்சயமில்லாத குரல் ஒன்று, ''ஹலோ! மிஸ்டர் சங்கர்!'' என்று கூவியதும் உடனே தலையைத் திருப்பி நான் வியப்புடன் குரலுக்குரியவரை ஏறிட்டேன். என்னைப் போல் முப்பது வயது இளைஞராகத்தான் இருந்தார். 'பளிச்' என்ற முகம். அகல நெற்றியே 'அறிவாளி' என்று பறைசாற்றியது.

கண்களில் சிநேக பாவத்துடன், சிரித்த முகமாய் அந்த இளைஞர் என்னை நெருங்கினார்.

பெங்களூருக்கு ஆபீஸ் விஷயமாக நான் வருவது முன் பின் அறிமுகமில்லாத இவருக்குத் தெரிந்தது எப்படி சாத்தியம் என்று நினைத்து நான் வியப்பதற்குள் அவர் தம்மை அறிமுகப்படுத்திக் கொள்ள ஆரம்பித்தார்

''ஐ ஆம் சுதாகர். மாலாவின் கணவர். மாலாவுக்கு அவள் அம்மா எழுதிய கடிதத்தில் நீங்கள் ஆபீஸ் விஷயமாக ஒரு வாரம் பெங்களூர் வரப் போகிற விஷயத்தையும், வருகிற தேதியையும் எழுதி இருந்தார். மாலா அடிக்கடி உங்கள் போட்டோவைக் காட்டி இருக்கிறாள். அதனால் உங்களைக் கண்டு பிடிப்பது சுலபமாகி விட்டது.''

களங்கமின்றிச் சுதாகர் சிரித்தபோது என் மனம் சட்டென்று கலங்கிப் போனது.

இவரா மாலாவின் கணவர்?

''க்ளாட் டு மீட் யூ!'' என்று வலிய ஒரு புன்னகையை வரவழைத்துக் கொண்டு கை நீட்டினேன்.

டிக்கெட்டைக் கொடுத்துவிட்டு ஸ்டேஷனை விட்டு வெளியேறியதும் சுதாகர் கேட்டார்.

''மிஸ்டர் சங்கர்! ஒரு வாரமும் நீங்கள் எங்கள் வீட்டிலேயே தங்கலாம். ஒன்றும் அசௌகரியமிருக்காது. இதில் உங்களுக்கு ஆட்சேபணை இல்லையே?''

''ஸாரி மிஸ்டர் சுதாகர். ஆஃபீஸ் மூலம் ஏற்கனவே 'புக்' செய்துவிட்ட லாட்ஜில்தான் நான் தங்க வேண்டும். ஆனால் இப்போது உங்களுடன் வீடு வர ஆட்சேபணை இல்லை.''

''ஓ.கே. ஒரு நிமிஷம் நீங்க இங்கேயே இருங்க. நான் ஆட்டோவுக்கு டிரை பண்ணுறேன்'' — சிரித்தபடி சுதாகர் ஆட்டோ பிடிக்க நகர்ந்தான். உடனேயே என் மனத்தை மாலா பிடித்துக் கொள்ள ஆரம்பித்தாள்.

மாலா!

அவளும் நானும் மதுரையில் பக்கத்துப் பக்கத்து வீட்டில் சிறு வயதிலிருந்தே ஒன்றாய்ப் பழகியவர்கள். பருவம் வந்ததும் எங்கள் நட்பு காதலாகியது. எங்கள் நட்புக்குத் தடை சொல்லாத வீட்டுப் பெரியவர்கள் காதல் கல்யாணம் என்ற பேச்சு வந்தபோது ஜாதகங்கள் பொருந்தவில்லை என்ற காரணம் கூறி எங்களைப் பிரித்தனர். எனக்கும் மாலாவுக்கும் பேரதிர்ச்சியாகி விட்டது. என்னை மாலா திருமணம் செய்து கொண்டால் ஆறு மாதத்தில் அவள் விதவையாகி விடலாம் என்று வேறு ஜோஸியம் கேட்டுத் தெரிந்து கொண்டதும் கல்யாணப் பேச்சு ஆரம்பத்திலேயே அடியோடு முறிந்து போய் விட்டது.

மாலா என்னிடம் வந்து கதறி அழுதாள். அவள் காதலின் வேகம் கட்டுப்படுத்த முடியாமல் இருந்தது.

''சங்கர்! உன்னை விட்டு நான் வேறு ஒருத்தனை எப்படிக் கல்யாணம் செய்து கொள்வேன்?'' என்று குமுறினாள்.

''மாலா... என்னை நீ கல்யாணம் செய்து கொள்வது நல்லதில்லை. இதற்காக நீ என்னைக் கோழை என்றாலும் சரி. என் முடிவு இதுதான். ப்ளீஸ்...மன்னித்துவிடு...''

அன்று அவளிடம் அப்படிச் சொல்லிவிட்டு உடனேயே திருச்சியில் ஒப்புக்கொள்ள வேண்டிய கம்பெனி வேலைக்கு ஓடி வந்து விட்டேன். மாலாவை மறக்க எண்ணித் தோல்வி அடைந்தேன். ஆனால் மூன்று மாதத்தில் மாலாவுக்குத் திருமணம் நடந்து விட்டதால் விஷயம் தெரிந்ததும் மனம் கொஞ்சம் லேசாகியது.

மாலா, எங்கிருந்தாலும் நன்றாக வாழ வேண்டும்.

திருச்சியில் வேலைக்குச் சேர்ந்து ஆறு மாதத்துக்குப் பிறகுதான் மதுரைக்கு நான் போனேன்.



மதுரையில் நான் போன நேரம் என் தாயாருக்கு உடல் நிலை சரியில்லாமல் போக ஒரு வாரம் அதனால் நான் தங்க நேர்ந்தது. மாலாவின் தாயார் நீண்ட நாளாய் என் அம்மாவின் சிநேகிதி ஆதலால் சுச்ருஷை செய்து கொண்டிருந்தார். பேச்சு வாக்கில் என் தாயிடம் பெங்களூருக்கு ஆபீஸ் விஷய மாய் ஒரு வாரம் போகும் விஷயத்தைச் சொல்லி இருந்தேன். அப்போது அங்கிருந்த மாலாவின் தாய், சாதாரணமாய் எழுதுவது போல் பெண்ணுக்கு என் வரவைப் பற்றித் தெரியப்படுத்தி விட்டாள்.

'கீச்' என்ற பிரேக் சத்தம் என் சிந்தனையைக் கலைத்தது. ஆட்டோ!

''ஏறிக்கொள்ளுங்கள், மிஸ்டர் சங்கர்!'' என்ற சுதாகர் ஆட்டோவின் உள்ளிருந்த படியே என் சிறு சூட்கேஸை வாங்கிக் கொண்டார்.

காலை நேரத்துப் பெங்களூர் குளிர் சிலென்று முகத்தில் குளிர்ச்சியாய் அடித்தாலும் மனம் என்னவோ கொதித்துக் கொண்டு தான் இருந்தது.

சுதாகர்! அழகான பெயர்! ஆளும் அழகாய்த்தான் இருக்கிறான். மாலாவுக்கு ஏற்ற ஜோடி. அவளை மாதிரியே நல்ல சிவப்பாய், சுருள் தலை முடி, நல்ல பர்ஸனாலிடி.

என்னவோ இடீரென ஒரு பொறாமைத் தீ என்னைப் பாதாதி கேசம் சுட்டுப் பொசுக்கியது. என் இடத்தில் சுதாகர் வந்துவிட்டது விதியின் வலிமையால் தானே? அதனால்-தானோ என்னவோ என் கலகலப்பான சுபாவம் சுதாகரைக் கண்ட நாழி முதல் எங்கோ பதுங்கிக் கொண்டு விட்டது.

பொறுமிப் பெருமூச்சு ஒன்றை நான் விட்டபோது, ''மிஸ்டர் சங்கர்! வீட்டுக்குப் போவதற்கு முன் உங்களிடம் சில வார்த்தைகள் பேச நினைக்கிறேன்'' என்றார் சுதாகர் நிதானமாய்.

எனக்குள் ஏதோ உதைத்தது.

''மிஸ்டர் சங்கர்! மாலா உங்களை மறக்கவேயில்லை.. கல்யாணத்தன்றே மாலா என்னிடம் உங்களைக் காதலித்ததை, கல்யாணம் செய்து கொள்ள முடியாமல் போனதை யெல்லாம் மறைக்காமல் சொல்லி விட்டாள். ஆனால் அவள் மனம் எல்லாம் சங்கர் வியாபித்திருப்பதாய்க் கூறியபோது எனக்கு அதிர்ச்சி ஒருபுறம்; அவள் பேரில் அனுதாபம் ஒருபுறம். எனக்கு வேண்டியது என் மனைவியின் அழகு உடம்பில்லை. அன்பான மனசு. அதைத் தொட்ட பிறகுதான் அவள் உடம்பில் சுண்டுவிரல் பட அனுமதிக்கப் போகிறேன். ஆனால், இத்தனை நாளாய் அவள் மனத்தைத்தொட நான் எடுத்துக் கொண்ட முயற்சிகள் எல்லாம் வீண்தான். அவளால் உங்களை மறக்க இயலவில்லை, மிஸ்டர் சங்கர். அதனால்தான் உங்களிடம் இப்போ கெஞ்சுகிறேன். என் மணவாழ்க்கை மணம் வீச உதவுங்கள்... ப்ளீஸ்!''

சுதாகர் என் கைகளைப் பிடித்துக் கொண்டு கெஞ்சியபோது அந்தக் கணம் நான் குன்றிப் போனேன்.

பிறகு இருவரும் வீடு போகும்வரை எங்களுடன் மௌனம்தான் பேசிக் கொண்டு வந்தது.

''வா சங்கர்!''

வாசலிலேயே நின்று வரவேற்றாள் மாலா. முகமெல்லாம் பூரிப்பு.

''மிஸ்டர் சங்கர்! நீங்களும் மாலாவும் பேசிக்கிட்டு இருங்கள். நான் கடைக்குப்



போய்ப் பத்திரிகை ஏதாவது வாங்கி வரேன்.

சுதாகர் வீட்டில் நுழைந்ததும் உடனே வெளியேறிவிட்டார்.

தனிமை, அதுவும் மாலாவுடன்....!

மாலா அருகில் வந்து விசாரித்தாள்.

''சங்கர்! ஏன் இப்படி இளைச்சிட்டாய்? சரியாச் சாப்பிடறதில்லையா?''

''சாப்பிடறேனே!''

''சும்மா சொல்றெய். ஆமாம், உனக்கு நான் பெங்களூரில் இருக்கிற விஷயம் தெரியாது? அப்புறம் ஏன் நீ எனக்கு இங்குவருவது பற்றி எழுதக் கூடாது? அம்மா லெட்டர் வந்ததும் அப்படியே ஆகாசத்தில் பறந்தேன். இவரிடம் உன் போட்டோவைப் பல முறை காட்டியிருக்கிறேன். 'ஜாக்கிரதையாய் சங்கரை அழைச்சிண்டு வாங்க'ன்னு சொல்லி அனுப்பினேன். இன்ஃபாக்ட், ராத்திரியெல்லாம் நீ வரப் போவதை நினைத்தபடியே தூங்காமல் முழிச்சிருந்தேன்...''

மாலாவின் நீண்ட பேச்சுக்கு நான் சிறு புன்னகையைப் பதிலாக்கினேன்.

''சரி, வெந்நீர் ரெடி. குளிச்சிட்டு வா... டிபன் சாப்பிடலாம்.''

பக்கெட், பக்கெட்டாய்த் தண்ணீரை விட்டுக் குளித்து பாத்ரூமை விட்டு வெளியே வந்தும் உடம்பைப் போல் மனம் சுத்தமாக வில்லை.

சுதாகர் அப்போது திரும்பியிருந்தார். டிபன் சாப்பிடும்போது பொதுவான பேச்சில் சுதாகர் என் கவனத்தைத் திருப்பி விட்டார்.

நான் ஆபீஸுக்குக் கிளம்பத் தயாரான போது, மாலா எதிரில் வந்தாள்.

''சங்கர் ராத்திரி சாப்பாட்டுக்கு இங்கே தான் வரணும். மறந்துடாதே...'' என்றுள் ஆர்வத்துடன்.

''ஆமாம் மிஸ்டர் சங்கர். ராத்திரி டின்னருக்கு வந்துடுங்க, ப்ளீஸ்...'' என்றார் சுதாகரும்.

தலையாட்டினேன்.

ஆனால் இரவுச் சாப்பாட்டுக்கு அவர்கள் வீட்டுக்குச் சென்றபோது ஒரு முடிவுடன், தீர்க்கமாய் இருந்தேன்.

மாலா விதம் விதமாய்ச் சமைத்திருந்தாள். பெண்களின் 'மூட்' சமையலில் வெளிப்பட்டு விடுமே!

''சங்கர்... உனக்குப் பிடித்த வெங்காய சாம்பார். எப்படி இருக்கு?'' என்றுள் மாலா பிரியத்துடன்.

மிகக் கஷ்டத்துடன் ஒரு பொய் சொல்லத் தயாரானேன்.

''எனக்கு இப்பொழுதெல்லாம் வெங்காய சாம்பார் பிடிப்பதில்லை.''

''ஏன் சங்கர்?'' மாலாவின் குரல் தழைந்து விட்டது.

''என் வருங்கால மனைவி – இப்போது என் ஆபீஸில் என் கீழ் வேலை பார்க்கும்


நரைத்த கேசம்
மற்றும் கேச சாயங்கள்
பற்றிய உங்கள் பழைய
கருத்துக்கள் அனைத்துக்கும்,
கோத்ரெஜ்
விடை காணுகிறது
சுலபமாக.
கேசம் நரைப்பது இயற்கைதான்
ஆம், சந்தேகமில்லை. ஆனால் நரைமுடியை நரையாகவே விட்டு விடுவது இயற்கையல்ல. அதுவும் கோத்ரெஜ் கேச சாயம் பூசுவதை ஷாம்பு செய்வதைப் போன்று மிகவும் இயற்கையாகவும், வெகு சுலபமாகவும் செய்திருக்கும்போது.
நரைமுடி ஒருவருக்கு 'எடுப்பான' தோற்றம் தருகிறது!
ஒருவருக்கு நரைமுடி 'எடுப்பான' தோற்றம் அளிக்கக் கூடும். ஆனால் அதே சமயம், தோற்றத்துக்கு முதுமையையும் தருகிறது. உங்கள் கண்ணாடியையே கேட்டுப்பாருங்கள்'
கேசத்துக்கு சாயம் பூசும் தொல்லையை யார் தாம் விரும்புவர்?
எவரும் விரும்பார். ஆகையால்தான் கோத்ரெஜ், தானாகவே பரவும் ஒரு கேச சாயம் வழங்குகின்றனர். அதாவது, கேசத்தைப் 'பகுதிகளாகப் பிரித்து சாயம் பூசும்' தொல்லையை அனுபவிக்காமல், இப்பொழுது இந்த சாயத்தைப் பூசி, நுரை வரச் செய்து, சிறிது காத்திருந்து, பின்னர் அதைக் கழுவி விடுங்கள். அவ்வளவுதான். எவ்வளவு சுலபம் பாருங்கள்!
கேச சாயம் கேசத்தைப் பாழ்படுத்துமா?
பழைய முறையிலுள்ள சில கேச சாயங்கள் நிச்சயம் பாழ்படுத்தக் கூடும். ஆகையால்தான் கோத்ரெஜ், அலாதியான முறையில் இதைத் தயாரித்துள்ளனர். இதனுள்ளேயே 'ஹேர் கண்டிஷனர்' அடங்கி இருப்பதால் இது உங்கள் கேசத்துக்கு இளமையையும் பளபளப்பையும் அளிக்கிறது.
Godrej
Permanent
hair dye
கோத்ரெஜ்
பர்மனெண்ட்
ஹேர்-டை
—கேச சாயம் பூசுவதிலுள்ள 'தொல்லையைப் போக்குகிறது; உங்கள் தோற்றத்தில் இளமை ததும்ப வைக்கிறது.
இரு அளவுகளில் கிடைக்கிறது: 20 மி.லி. மற்றும் 40 மி.லி.
ஆடவருக்கும், பெண்டிருக்கும், 2 வண்ணங்களில்: இயற்கையான கருமை, கருமையான பழுப்பு.
CASGS-134-172 Tam

# கல்கி

சந்தா விவரம்

★

மானேஜர்
கல்கி
கிண்டி, சென்னை - 600 032

| | ஓராண்டு | ஆறு மாதம் |
|---|---|---|
| இந்தியா | ரூ. 60 | ரூ. 30 |
| இலங்கை | ரூ. 70 | ரூ. 35 |
| இதர வெளிநாடுகள் | ரூ. 110 | ரூ. 55 |

டைப்பிஸ்ட் — ராதிகாவுக்கு வெங்காயமே பிடிக்காதாம்!''

மாலா முகம் கருங்கிப் போனது.

''எப்போ கல்யாணம்?'' என்றார் சுதாகர்.

''நான் கிடந்து தவிக்கிறேன். அவள் வீட்டில் தையில் வைத்துக் கொள்ளலாம் என்கிறார்கள். ஜாதகப் பொருத்தம் எல்லாம் ஓ.கே. ஃபார்மாலிடிக்குப் பெண் பார்க்கும் படலமும் ஓவர்! இன்ஃபாக்ட் தினம் ராதிகா வீட்டில்தான் நான் சாப்பிடுகிறேன். தங்குவது கூட அவள் வீட்டு மாடி அறையில் தான். ராதிகா ரொம்ப இன்டலிஜென்ட் கேர்ல். நன்றாய்ச் சமைப்பாள், பாடுவாள், பார்க்கவும் பேரழகியாய் இருப்பாள். நான் ரொம்ப அதிருஷ்டசாலி!''

நான் முடித்தபோது மாலா அங்கு இல்லை. ஆனாலும் மீண்டும் நான் தொடர்ந்தேன்.

''மிஸ்டர் சுதாகர்! ஒரு வாரம் நான் எப்படித்தான் ராதிகாவைப் பிரிந்து இருக்கப் போகிறேனோ, எனக்கே என் பேரில் நம்பிக்கை இல்லை. அவளுக்கும் என்னைப் பார்க்காமல் நிமிஷ நேரம் கூட இருக்க முடியாது.''

மாலா முகத்தைத் திருப்பிக் கொண்டு போனவள்தான். பிறகு நான் வீட்டை விட்டுப் புறப்படும்வரை கண்ணில் தென்படவேயில்லை.

திரும்பவும் திருச்சி புறப்படும் தினம். பெங்களூர் சிடி ஸ்டேஷனில் ஐலண்ட் எக்ஸ்பிரஸ் முதல் வகுப்பில் ஏறுகிறேன்.

சட்டென்று ஜன்னல் வழியே திரும்பிப் பார்க்க அங்கே சுதாகர்.

என் கைகளை ஜன்னல் கம்பிகளினூடே இறுகப் பற்றிக் கொண்டு சுதாகர் கண்கள் பனிக்கச் சொன்னார்:

''தாங்க்யூ மிஸ்டர் சங்கர். உங்கள் வருகையில் மாலா முற்றிலும் மாறிவிட்டாள். இத்தனை நாள் என்னை உதாசீனப்படுத்தியதற்கு மன்னிப்பும் கேட்டு விட்டாள்.''

நான் சிரமப்பட்டுச் சிரித்தேன்.

ரயில் கூவியது.

''குட் பை சங்கர்! மேரேஜ் இன்விடேஷன் அனுப்ப மறந்துடாதீங்க....''

சுதாகர் தலை மறையும்வரை ஜன்னல் வழியே கை அசைத்துவிட்டு யாருமில்லாத அந்தத் தனிக் 'கூபே'யில் விசித்து அழத் தொடங்குகிறேன்.

மாலாவிடம் மானசீகமாக மன்னிப்புக் கேட்டுவிட்டு நாளை திருச்சியில் ஆபீஸ் போனதும் என் கீழ் வேலை பார்க்கும் அந்த டைப்பிஸ்ட் ராதிகாவிடம் இப்படிச் சொல்லி விட ஒரு முடிவும் எடுக்கிறேன்.

''ராதிகா... அன்று நீ என்னைக் காதலிப்பதாகச் சொன்னபோது நான் பதில் சொல்லாமல் நழுவினேன். இன்றைக்கு நான் உடனடியாய் உன்னிடம் வேண்டுவதெல்லாம் விரைவில் நம் கல்யாணத்தை முடிக்க இருவரும் பிரயத்தனம் செய்ய வேண்டும் என்பதுதான்.''



# மௌனயுத்தம்

ஒரு கர்ச்சீப் வாங்கக்கூட நண்பன் சங்கரை யோசனை கேட்கும் (ஆருயிர், நக-சதை, பூவும் மணமும்) ரவீந்தர், குடி போதையில் நினைவின்றி நண்பனின் மனைவியைக் கெடுத்துவிட்டு அதை அவனிடம் சொல்லாமல் இருப்பானா? சொல்லாததால் கதை இடைவேளைக்குப் பின் சூடுபிடிக்கிறது மானம் பெரிதென மனைவி (ரூபா) உயிர்விட, சங்கர், ரவீந்திரனின் புதுமண வாழ்வில் புகுந்து மௌனமாய் ஒரு கலக்குக் கலக்க, தன் புது மனைவியைச் சந்தேகப்பட்டு ரவீந்தர் புழுங்க... கதை வளர்கிறது.

தன் உயிர் நண்பனின் மனைவி சாவுக்குத் தானே காரணமாய் இருந்துவிட்டு உடனே எப்படித் திருமணம் செய்து கொள்ள முடியும் ரவீந்தரால்? வெலவெலக்கும் கதை.

சங்கர் ரூபா காதல்: ஆபீஸிலேயே போனில் பேசிக் கொள்வதும், புத்தகம் மாற்றிக் கொள்வதும் என்று அழகாய் ஆரம்பிக்கிறது. சங்கர் பெண் கேட்கப் போய் பயந்து வீட்டுக்கு அட்வான்ஸ் கொடுத்து வருவது சுவையான இடம்.

ஆபீஸில் ஆண்டுவிழா என்று கூறி அரைகுறையாய் சீமா குரூப் டான்ஸ். பட்டும் படாத விரசமாய் நகைச்சுவைக் காட்சிகள். ரவீந்தர் கிடைக்காமல் சமாளிக்கப் பட்ட சாமர்த்திய சண்டைக் காட்சி.

சங்கர் கொஞ்சம் வேகமாய்ப் பேசலாம் வேகமாய் இயங்கலாம். ரூபா — மதிப்பு இறங்கு முகம். ரவீந்தர் முன்னேற்றம். சத்யகலா— இதைவிட—செய்ய முடியாது. துல்லியமான மல்லி தயாளன். மற்றபடி மௌனமாய் இருப்பதே உத்தமம்!

—நளினி சாஸ்திரி



# பாரதி குவிஸ்

**பா**ரதி நூற்றாண்டு விழா நெருங்குவதை யொட்டி மாணவர்களுக்கு ஒரு க்விஸ் போட்டி நடத்தியது கல்கி. இதற்கு ஒத்துழைப்புத் தந்தது பாரதி கலைக் கழகம். இதன் தலைவர் நாளெல்லாம் பாரதி நினைவிலேயே மூழ்கிக் கிடக்கும் திரு இரா. சுராஜ்.

சென்னைக் கல்லூரிகளில் ஆறு, சீட்டுக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொரு கல்லூரி சார்பிலும் ஒவ்வொருவர் வீதம் ஆறு மாணவமாணவியர் 'பாரதி க்விஸ்' நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

திரு இரா.சுராஜ் வினா—விடை நிகழ்ச்சியை நடத்திக் கொடுத்தார். சென்னை மத்திய நூலகக் கட்டிடத்தில் இந்நிகழ்ச்சி 12-3-81 மாலை நடைபெற்றது.

பல எழுத்தாளர்கள் பாரதி அன்பர்கள் குழுமி நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.

பங்கேற்ற மாணவ மாணவியர்:

1. திரு ஆ. பாலகிருட்டிணன், பச்சையப்பன் கல்லூரி, சேத்துப்பட்டு
2. குமாரி கல்பனா வைஷ்ணவா பெண்கள் கல்லூரி, சென்னை-44
3. குமாரி மாலா விக்கி கண்ணன் எத்திராஜ் கல்லூரி, எழும்பூர்.
4. திரு ஜி. ரவிசங்கர் ஏ.எம். ஜெயின் கல்லூரி, மீனம்பாக்கம்.
5. திரு பரமேஸ்வரன் விவேகானந்தா கல்லூரி, மயிலாப்பூர்.
6. திரு எஸ்.—ராமச்சந்திரன் வைஷ்ணவா ஆண்கள் கல்லூரி, அரும்பாக்கம்

கேள்விகள் :

1. பாரதியார் பிறந்த தேதி, மாதம், வருடம் என்ன?
(சரியான பதிலை மாலா அளித்தார்.)
2. பாரதியாரின் 'ஞான குரு' யார்?
(கல்பனா சரியான விடையளித்தார்.)
3. பாரதியாரின் அரசியல் குரு யார்?
(இதற்கான பதிலைக் கூறியவர் ரவி சங்கர்.)
4. பாரதியாரின் கண்ணன் பாட்டை முதலில் வெளியிட்டது யார்?
(பரமேஸ்வரன் சரியான விடையளித்தார்.)
5. நமது நாட்டின் தந்தையை மகாகவி எப்படிப் போற்றினார்?

✖ எட்டயபுரம் பாரதி மணிமண்டபம்
✖ திருவல்லிக்கேணியில் பாரதி வசித்த வீடு
படம்: ரா. அ. பத்மநாபன்



(ராமச்சந்திரன் பதிலளித்தார்.)

6. முதன் முதலில் பாரதி மணி மண்டபத்தை எங்கு கட்டினார்கள்? அதற்குப் பெருமுயற்சி செய்தது யார்?
(கல்பனா விடையளித்தார்.)

7. அவ்வை அருளியது ஆத்திச்சூடி. அதே போல் பாரதி பாடியது....?
(ரவி சங்கர் சரியாகப் பதிலளித்தார்.)

8. புதிய ஆத்திச்சூடியில்பெண்களை பாரதி எப்படி உயர்வுபடுத்தினார்?
(எவரும் பதிலளிக்கவில்லை.)

9. புதிய ஆத்திச்சூடி மொத்தம் எத்தனை?
(பார்வையாளரில் ஒருவர் பதிலளித்தார்.)

10. பாரதியாரின் முப்பெரும் பாடல்கள் யாவை?
(ரவிசங்கர் பதிலளித்தார்.)

11. பாரதிக்குப் பெரிய அளவில் விழா நடத்திய இரு சினிமா நடிகர்கள் யாவர்?
(பரமேஸ்வரனும், மாலாவும் பதில் அளித்தனர்.)

12. பாரதி வேடத்தில் நடித்துள்ள சினிமா நடிகர்கள் யார்? யார்? எந்தப் படங்களில்?
(எஸ். ராமச்சந்திரனும், கல்பனாவும் விடையளித்தனர்.)

13. பாரதியார் தம் கடைசிக் காலத்தில் வாழ்ந்த வீடு எங்குள்ளது?
(மாலா சரியான விடையைக் கூறினார்)

14. பாரதியின் பிரபலமான ஓவியத்தை எழுதியுள்ள ஓவியர் யார்?
(பார்வையாளர்களில் ஒருவர் விடையளித்தார்.)

15. பாரதியாரால் புகழப்பட்ட ஓவியர் யார்?
(பாலகிருட்டிணன் பதிலளித்தார்.)

16. பேரறிஞர் அண்ணா பாரதியை என்னவென்று அழைத்தார்?
('தென்னாட்டு காந்தி' என்று ஒரு மாணவர் கூற சரியான விடையைக் கூறியவர் பார்வையாளர்களில்ஒருவர்.

17. சென்னையில் பாரதி சிலை எங்குள்ளது?
(சரியான விடையைக் கூறியவர் பரமேஸ்வரன்.)

18. பாரதியார் நீண்ட நாட்கள் பணியாற்றிய தமிழ் தினசரியின் பெயர் என்ன?
(எஸ். ராமச்சந்திரன் சரியான விடையைக் கூறினார்.)

19. பாரதி தமிழாசிரியராகப் பணி புரிந்தார் சில காலம். எங்கு? பள்ளியின் பெயர் என்ன?
(மாலா சரியாக விடையளித்தார்.)

20. பாரதி பாடலில் ஒரு பூனை வருகிறது. அது எத்தனை குட்டிகள் பெற்றது. அவை என்னென்ன நிறங்கள்?
(கல்பனா சரியான விடையைக் கூறினார்.)


21. கனகலிங்கம் என்பவர் யார்?
(சரியான விடையைக் கூறியவர் கல்பனா)

22. பாரதி கனகலிங்கத்தை எப்படிப் பெருமைப் படுத்தினார்?
(பாலகிருட்டிணன்சரியாக விடை கூறி, பலத்த கரவொலி பெற்றார்.)

23. பாரதியின் எந்த அடிகளை கல்கி இதழ் தன் மகுடமாகக் கொண்டுள்ளது?
(எஸ். ராமச்சந்திரன் விடையளித்தார்.)

24. பாரதி வாழ்ந்த காலத்தில் இந்தியாவின் ஜனத்தொகை எவ்வளவு? ஆதாரம் கூறுக.
(எஸ். ராமச்சந்திரனே இதற்கும் விடையளித்தார்.)


25. பாரதி பாஞ்சாலி சபதத்தை யாருக்குக் காணிக்கையாக்கியுள்ளார்?
(பார்வையாளரில் ஒருவர் சரியான விடை கூறினார்.)



✱ பாரதி கலைக்கழகத் தலைவர் திரு இரா. சுராஜிட மிருந்து ராமச்சந்திரன் பரிசு பெறுகிறார்

✱ போட்டியில் பங்கேற்ற மாணவ மாணவியரும் நிர்வாகிகளும்







மகன்: "அப்பாவுக்கு வரவர ஞாபகமறதி அதிகமாகிக் கிட்டிருக்கும்மா!"

அம்மா: "ஏண்டா.."

மகன்: "ஸ்கூட்டரை வித்துட்டு சைக்கிள் வாங்கின ஞாபகம் கூட இல்லாமல் சைக்கிள் பெடலை அழுத்து அழுத்துனு அழுத்திக்கிட்டு 'சனியன்ஸ்டார்ட்டே ஆகமாட்டேங்குதுனு' முணுமுணுத்துக்கிட்டிருக்கார் வீட்டு வாசலில்!"

-உ. ராஜாஜி

26. பாரதியாரின் ஒரு நூலுக்கு வ.வே.சு. அய்யர் முன்னுரை வழங்கியுள்ளார். அந்த நூல் எது?
(கல்பனா சரியாக விடையளித்தார்.)

27. பாரதி தன்னை ஒரு கவிஞரின் தாசன் என்று கூறிக்கொண்டதுண்டு. யார் அவர்?
(ராமச்சந்திரன் விடையளித்தார்.)

28. பாரதி ருஷ்ய எழுச்சியைப் பாடினார். அவர் ஒரு நாட்டின் வீழ்ச்சியையும் பாடி இருக்கிறார். எந்த நாடு அது?
(இக்கேள்விக்கும் ராமச்சந்திரன் விடையளித்தார்)

29. பாரதி வட நாட்டுக் கவிஞர் ஒருவரின் கவிதைகளை மொழிபெயர்த்துள்ளார். யார் அவர்?
(பரமேஸ்வரன் பதிலளித்தார்.)

30. தமிழ், தமிழர், பாரதம் இவற்றை ஒருங்கே வாழ்த்தி-ஒரே அடியில் பாரதி பாடியுள்ளார். அந்த அடியைக் கூறுக.
(ராமச்சந்திரன் விடையளித்தார்.)

[ஒருசில கேள்விகளைத் தவிர மற்ற எல்லாக் கேள்விகளுக்கும் விடையளித்து மாணவ-மாணவியர் பாரதியைப் பற்றிய தங்களது அறிவுத்திறனை வெளிப்படுத்தி, பலத்த கரவொலி பெற்றனர்.

அதிக மதிப்பெண் பெற்ற வைஷ்ணவா ஆண்கள் கல்லூரி மாணவர் திரு எஸ். ராமச்சந்திரன் 'கல்கி'யின் பரிசான ரூ. 100 பெற்றார். பங்கு பெற்ற எல்லா மாணவ மாணவியருக்கும் புத்தகங்களும் பிரபல ஓவியர் திரு ஆர்யா வரைந்த பாரதியார் திருவுருவப் படமும் அளிக்கப்பட்டன. திரு இரா. சுராஜ் பாரதியாரின் பெருமைகளைப் பற்றி அருமையான சொற்பொழிவாற்ற நிகழ்ச்சி நிறைவுற்றது]

விடைகள் :

(1) 11-12-1882. (2) நிவேதிதா தேவி. (3) பால கங்காதர திலகர். (4) பரலி சு. நெல்லையப்பர். (5) வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா நீ வாழ்க வாழ்க! (6) எட்டையபுரம். திரு கல்கி. (7) புதிய ஆத்திசூடி. (8) தையலை உயர்வு செய். (9) 110. (10) கண்ணன் பாட்டு. பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு. (11) சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன். (12) நாகேஷ் - இரு கோடுகள்; எஸ். வி. சுப்பையா-கப்பலோட்டிய தமிழன் சிவாஜி கணேசன் - கைகொடுத்த தெய்வம் (13) திருவல்லிக்கேணி துளசிங்கப் பெருமாள் கோயில் தெருவில். (14) ஓவியர் ஆர்யா. (15) திரு ரவி வர்மா. (16) மக்கள் கவிஞர். (17) சென்னை கடற் கரையில் பொதுப் பணித் துறை அலுவலகம் எதிரில். (18) சுதேச மித்திரன். (19) மதுரை, சேதுபதி உயர்நிலைப் பள்ளியில். (20) நான்கு பூனைகள். பாலின் நிறம், பாம்புநிறம், சாம்பல் நிறம், கருஞ்சாந்தின் நிறம். (21) பாரதியின் சீடர். ஓர் ஹரிஜன். (22) அவருக்குப் பூணூல் போட்டுப் பெருமைப் படுத்தினார். (23) தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா. (24) 30 கோடி; முப்பது கோடி முகமுடையாள். (25) வரப்போகும் மகா கவிஞர்களுக்கும் அவர்களை ஆதரிக்கப்போகும் பிரபுக்களுக்கும். (26) கண்ணன் பாட்டு. (27) ஷெல்லி. (28) பெல்ஜியம். (29) ரவீந்திரநாத் தாகூர். (30) வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர். வாழிய பாரத மணித்திருநாடு.

ஏற்பாடு, தொகுப்பு : நாயகன்

புகைப்படம் : மன்னை மூர்த்தி




காதல் என்பது ஓர் இளவரசன் ஒரு தேவதையை முத்தமிடுவதில் ஆரம்பிக்கிறது; வழுக்கைத் தலையன் குண்டோதரியைப் பார்த்துக் கொட்டாவி விடுவதில் முடிவடைகிறது.

- க்விப்ஸ்

- எஸ். ராஜகணேஷ்

# விமர்சகர்கள் கிரிக்கெட்!



● "நீங்கள் பம்பாய் போகிறீர்களாமே எதற்கு?"

"கிரிக்கெட் ஆடுவதற்கு!"

"இந்த வயசிலா?" — ஏளனம் தொனிக்கிறது.

"ஒரு மாசம் பயிற்சி முகாம் நுங்கம்பாக்கம் நகரசபை ஸ்டேடியத்திலே நடந்தது! என் கிரிக்கெட் ஆற்றலைப் பார்த்துவிட்டு என்னை செலக்ட் பண்ணியிருக்காங்க! ஜே.கே. போஸ் கிரிக்கெட் பந்தயம் விளையாட்டு விமர்சகர்களுக்கு மட்டும்தான்!"

"'கானை மயிலாட' கதைதான்!" என்று சிரித்தார் நண்பர்.

● தமிழக விளையாட்டு விமர்சகர்கள் குழு பம்பாய் வான்கடே ஸ்டேடியத்தை நெருங்கியபோது அவர்களுக்கு ஓர் அதிசயம் காத்திருந்தது! நான்கு வருஷங்களாகத் தொடர்ந்து சாம்பியனான கல்கத்தா விமர்சகர்கள் விளையாட்டுக் குழுவினர் பம்பாய் குழுவினரிடம் தோல்வியடைந்திருந்தனர்!

● பம்பாய் வான்கடே ஸ்டேடியம். தமிழக அணி கல்கத்தா குழுவினரோடு முதல் மாட்ச்.

தமிழகக் குழு காப்டன் மோகன் நன்கு பந்து வீசி விக்கெட்டுகளை வீழ்த்தினார்! வெற்றி கல்கத்தா குழுவுக்கே! தமிழகக்குழு கவாஸ்கர் விசுவநாத் போன்ற படே படே பேர்வழிகள் ஆடிய மைதானத்தில் ஆடியதையே பெரும் பாக்கியமாகக் கருதியது! இந்த மாட்சை ரசித்தது வெற்று ஸ்டேடியம்! மாதிரிக்கு ஒரு ரசிகர்கூட இல்லாத மாட்ச்!

● "ஸார்! பீல்டிங்கா? பாட்டிங்கா? பௌலிங்கா?"

"ரெண்டுங்! இவங்க கூட வந்திருக்கிற ஆசாமி! மாட்சைக் கட்டாயமாகப்பார்த்துத் தொலைக்க வேண்டிய புள்ளி!"

● "விருந்தோம்புகிற பம்பாய்க்காரங்க ரொம்பப் பொல்லாதவங்க!"

"ஏன் அப்படிச் சொல்றீங்க?"

"ஜே. கே. போஸ் கோப்பை, பாலி கோப்பை அனைத்தையும் நம்மகிட்டு விருந்து பிடுங்கிக்கிட்டல்ல நமக்கு விருந்து வேறே வைக்கிறாங்க!"

● பம்பாய் விளையாட்டு விமர்சகர்கள் சங்கக்காரியதரிசி சுந்தர்ராஜன் என் கையைக் குலுக்கினார்: "நீங்க அடிச்ச ஒரே பவுண்டரி ஏ-ஒன். உங்க கடைசி ஷாட் ரொம்ப மதிப்புள்ள ஷாட்! அந்தப் பந்தை எங்க காப்டன் விஜய்கோர் பிடித்துத்தான் வெற்றியைச் சம்பாதித்தார்!"

● தமிழக விளையாட்டு விமர்சகர் குழுவில் டி. கோவிந்தராஜன் நன்றாகப் பந்து வீசியும் ரன் எடுத்தும் புகழ் பெற்றார்!

மூன்றாவது மாட்ச் தொடங்குவதற்குமுன் கைக்குத் தொட்டில் போட்டாகி விட்டது. கிரவுண்டில் விழுந்து அடிபட்டுக் கொண்டிருந்தால் பெருமையாக இருந்திருக்கும். ஆனால் மனுஷன் பாத்ரூமில் விழுந்து கையை முறித்துக் கொண்டார்!

● ஏர் இந்தியா திரிசூல் விமானம். விமான உபசாரிணிப் பெண் எல்லோருக்கும் காலைச் சிற்றுண்டி பரிமாறி வந்தார்.

"நீங்கள் சைவமா, அசைவமா?"

"சைவ உணவு!"

"முட்டை சேர்ப்பீர்களா?"

"ஊஹூம்! இரண்டுமாட்சிலும் எனக்கு 4, 4தான்! முட்டைக்கே வழியில்லை!"

"அடக் கடவுளே! உங்களை நான் எப்படிச் சமாளிப்பது!" என்று நகர்ந்து பதினைந்து நிமிஷங்களுக்குப் பிறகு சைவ உணவு படைத்தார்! அசைவ உணவுக்காரர்களுக்கு மத்தியில் எனக்குக் கிடைத்த இந்த வெற்றியைக் கண்டு 'பூரி'த்தேன்! பூரியும் கிழங்கும், என் வெற்றிக்கு உதவின!

● "பம்பாயிலிருந்து என்ன வாங்கிண்டு வந்தீர்கள்?" — குழந்தைகளின் ஆவல் கேள்வி.

"தோல்வியை!" — என் எரிச்சல் பதில்.

எனது பாண்டும் பூட்ஸும் ஒரு வருஷ ஓய்வுக்குப் பரணை நாடின! அடுத்த வருஷம் காஷ்மீரில் ஜே. கே. போஸ் கிரிக்கெட் பந்தயம்! ஸ்ரீநகர் குளிருக்கு இப்பொழுதே காலும் கையும் நடுங்கத் தொடங்கிவிட்டன!

— குண்டுமணி

படம் நன்றி: "ஹிந்து"

தமிழக விளையாட்டு விமர்சகர்கள் குழு






● இந்த மாதிரி அநாவசியமான சினிமா செய்திகளைப் போட்டு (நடுப்பக்கப் பின்னல் புதிரைத்தான் குறிப்பிடுகிறேன்) பக்கத்தை வீண் செய்வதை இதோடு நிறுத்திக்கொள்ளுங்கள். தொடருமானல் நடப்பதே வேறாய் இருக்கும்....

கதிர்மங்கலம் — வி. ரங்கநாதன்

● 'ஆட்சியில் இருப்போருக்கு மறக்காமல் துணை போகும் பெரியவர் ம. பொ. சி.யா எம். ஜி. ஆரின் மதுவிலக்கு ரத்தை எதிர்க்கிறார்! என்று ஆவலோடு படித்தால் கடைசியில் 'பழி'யை மத்தியஅரசின் மீது போட்டுத் தப்பித்துக்கொள்வது வேடிக்கையாகத்தான் இருக்கிறது.

பெங்களூர்-21 — எஸ். எல். பி. குமார்

● 'பட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால் கொட்டைப் பாக்கு என்ன விலை?' என்று கேட்பது போல இருக்கிறது நிதியமைச்சர் ஆர். வி.யின் கூற்று. அதை 'நாடாளு மன்ற நாடகம்' தலையங்கத்தின் மூலம் சிறப்பாக விளக்கியுள்ளீர்கள்.

திருப்பூர்-2 — கே. பி. ஆண்டவன்

● ஸ்ரீவேணுகோபாலன் எழுதும் ''சுவர்ண முகி'' சரித்திரத் தொடர் வெளிவருவதை ஒட்டிய அட்டைப் படம் அருமை. தொடரை ஆவலுடன் எதிர்நோக்க வைத்தது.

சென்னை-28 — லா. ரா. சுந்தரராஜன்

● கோடிட்ட இடத்தைச் சரியாகப் பூர்த்தி செய்ய முடிகிறதா பாருங்கள்!

பு — தி — வித — — க — ல — லை சமா — ப் — தி — — ல் — — குறி — ர் க — கி — ன் !

600035 — சி. பூபால் சிங்

● விலைவாசி நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே வருகிறது என்பதை எண்ணும் போது கஷ்டமாக இருந்தாலும் அதற்குத் தாங்கள் போட்டிருந்த 'ஸ்டில் துணுக்கு' என்னை வயிறு வலிக்கச் சிரிக்க வைத்து விட்டது.

திருத்தங்கல் — ஜி. சுந்தரராஜன்

● விஜயாலயனின் சிறுகதை சிறப்பு. வார்த்தைகள் குறைப்பு. படிப்பதற்குச் சுவைப்பு. முடிவு இனிப்பு.

அம்மையப்பட்டு — கவிஞர் காசிதாசன்

● பால்கிவாலாவின் நாட்டு நடப்பு விமர்சனங்களைப் பிரசுரித்துத் தரத்தை உயர்த்திக் கொண்டிருக்கிறீர்கள். நன்றி.

திருநெல்வேலி-1 — ஜி. சதாசிவம்

● நியூஸ் ஜூஸ் அத்தனையும் நன்கு பிழிந்து எடுத்த சாறுகள். ஆபாசங்களைச் சாடியிருப்பதும், தங்க ஏலத்தைப் பற்றி எழுதியிருப்பதும் – இரண்டும் ஆப்பிள் ஜூஸ் குடித்த மாதிரி இருந்தது. இந்தப் பகுதியைத் தொடருங்கள்.

சென்னை-5 — சங்கர சுப்பிரமணியன்

● வேலூர் கோவில் பற்றி எழுதி இறுதியில் கோபுர நுழைவாயிலில் ஆர். எஸ். எஸ். கொடி பறக்கிறது என குறிப்பிட்டுள்ளீர்கள். அந்தக் கொடி நமது இந்து சமயத்தின் தார் மீகக் கொடியாக இருக்கும். சிவாஜி மன்னன் எந்த நிழலில் ஆண்டாரோ அந்தக் கொடி. ஆர். எஸ். எஸ். கொடி அதன் கூட்டம் நடக்கும் இடத்தில் குறிப்பிட்ட நேரமே பறக்க விடப்படும்.

விழுப்புரம் — ஆர். வி. ராமானுஜம்

● வேலூர் ஜலகண்டேசுவரர் ஆலயம் பற்றிய கட்டுரையில் விடப்பட்டுப்போன இரு சுவையான விவரங்கள்:

(1) இதே கோட்டைக்குள் ஒரு மசூதியும், ஒரு சர்ச்சும் இருக்கின்றன. இவைகளில் மட்டும் நீண்ட காலமாக வழிபாடு நடந்து கொண்டு வருகிறது.

(2) இக்கோயிலின் பின்புறம் ஒரு கிணறு உள்ளது. இக் கிணற்றினுள் இறங்கினால் தண்ணீருக்குப் பதில், உள்ளே சுரங்க மண்டபம் ஒன்று இருக்கிறதென்றும் இதில் ஜலகண்டேசுவரர், அம்மன் ஆகிய கடவுளரின் நகைகள் இருப்பதாகவும் பலரது நம்பிக்கை!

சென்னை-5 — எஸ். வி. ராஜசேகர்

● மூன்று வருஷ காலம் தமிழக அரசை மற்றவர்கள் கையில் ஒப்படைத்துவிட்டு காமராஜர் இந்திய அரசியலுக்குச் சென்றதன் நேரடி விளைவுதான் காங்கிரஸ் கட்சி 1967ல் படுதோல்வி அடைவதற்கு முக்கிய காரணம் என்று கண்ணதாசன் குறிப்பிட்டுள்ளார்.

1957ல் முதன் முதலாக தி. மு. க. பொதுத் தேர்தலில் ஈடுபட்டு 15 இடங்களைக் கைப்பற்றியபோது காமராஜர்தான் (தமிழ் நாடு) சென்னை முதல்வராக இருந்தார். 1962ல், 15 பேராக இருந்த தி. மு. க. வினரின் எண்ணிக்கை 50 ஆக உயர்ந்தது. அப்போதும் கோட்டையில் கொலுவீற்றிருந்தது காமராஜர்தான். பதினைந்து ஐம்பதாக உயர்வதைத் தடுக்க முடியாத பெருந் தலைவர் ஐம்பது, நூற்றி முப்பது ஆவதை எப்படித் தடுத்திருப்பார்?

ஆலடியூர் — வெள்ளகால் இரா. கந்தையா

● ''கல்யாணம் செய்துகொள்ளாமல் இருந்தால் வாழ்க்கை வீண் என்று கூறுவீர்களா?'' என்ற வாசகர் கேள்வி ஒன்றுக்குப் பதில் கூறிய கடுகு, ''மாட்டேன்'' என்று கூறி நியூட்டனை உதாரணம் காட்டியுள்ளாரே! காமராஜரைத் தெரியாதா? இல்லை மறந்து விட்டதா?

ஈரோடு — அ. ராஜா ரஹ்மான்

## 15. ''வஸந்த்! வஸந்த்!''

வஸந்த், கணேஷை தாளாது தாசத்தனத்துடன் பார்த்தான். ''பாஸ்! நீங்க என்னைக் காப்பாத்திஙீங்க. நேத்துராத்திரி என்னை அரெஸ்ட் பண்றதுக்கு எதுக்காக ஆலாப் பறந்தீங்கன்னு இப்பத்தான் புரியுது.''

''இல்லே வஸந்த். இந்த மாதிரியான தாக்குதலுக்குச் சாத்தியம் இருக்கலாம்னு எனக்கு பின்னிரவில்தான் தோணிச்சு. நான் உன்னைக் கைது செய்யறதுக்கு இன்ஸிஸ்ட் பண்ணதுக்கு நான் மூதல்ல சொன்னதுதான் காரணம். நம்ம மேலே பழி போட்டதைப் போலீஸ் நம்பிட்டாங்கன்னு அவங்களுக்குப் பாவலாக் காட்டணும்.''

''ரொம்ப சுத்தி வளைக்கிறீங்களே கணேஷ்!'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''இந்தக் கேஸ்ல இதுவரைக்கும் எனக்குச் சரியான பிக்சர் கிடைக்கலே. உங்களுக்கு?''

''ம்ஹூம்! கிரைம் என்னன்னு கூடத் தெளிவா இல்லே கணேஷ். நீங்க அந்தச் சதாசிவத்தின் வீட்டுக்குப் போய்ச் சோதனை போடணும்னீங்களே?''

''அதை நீங்க செய்யுங்க இன்ஸ்பெக்டர். நாங்க இன்னிக்கு முழுக்கப் பெரும்பாலும் போலீஸ் ஸ்டேஷனிலேயே இருக்கறதுதான் பத்திரம்னு தோணுது. நீங்க ஸர்ச் பண்ணுங்க. முக்கியமா அந்தப் பார்லரே பீரோ அல்லது அலமாரி அல்லது வேற எங்கேயாவது ஒளிச்சு வெச்சிருக்காங்களான்னு பார்த்துருங்க. அது முக்கியம்.''

''துப்புரவாப் பார்த்துர்றேன்.''

''இன்னொரு வேலே செய்யணும் நீங்க.''

''சொல்லுங்க.''

''பஸ் ஸ்டாண்டிலே பெட்டி பறிகொடுத்த கேஸ் உங்க ரிக்கார்ட்ஸ்லே இருக்கே, தஞ்சாவூர்க்கார தைலப் பாட்டில் காளிதாஸ்; அன்னிக்குச் சாயங்காலம் அவன் பெட்டியைத் திருப்பிக் கொண்டு கொடுத்தானே அவன் விலாசம் கொடுத்தீங்க இல்லே?....''

''ஆமா. அங்க கூடப் போகணுமா?''

''வேண்டாம் ஸார், அவனே இங்கே ஸ்டேஷனுக்கு வரவழைக்க முடியுமா?''

''தாராளமா. வேணும்னு வாரண்ட் போட கூட....''

''அதெல்லாம் வேண்டாம். சும்மா ருட்டீன் விசாரணைக்குன்னு அதிக தடபுடல் இல்லாமக் கூட்டி வரச் சொல்லுங்க.''

''செய்துட்டாப் போறது.''

''அப்ப நீங்க போய்ப் பார்த்துட்டு வந்துர்றீங்களா. நானும் வஸந்தும் இங்கதான் இருக்கப் போறோம். வெளியில எங்களுக்குப் பத்திரமில்லே.''

வஸந்த்! வஸந்த்!

சுஜாதா



இன்ஸ்பெக்டர் புறப்பட வஸந்த் ''ஏட்டய்யா இங்க பக்கத்தில சிகரெட் கடை இருக்கா? ''என்று கேட்டான்.

''எதுத்தாப்பலே இருக்குது. பையனை வரச் சொல்றேன்.''

''அப்படியே ரெண்டு வேப்பங் குச்சி கொண்டு வரச் சொல்லுங்க. காலேல இருந்து பல் விளக்கக்கூட இல்லே.''

வஸந்த் சோம்பல் முறித்துக் கொட்டாவி விட்டான். உக்கல் கொக கொஞ்சம் ஃபாமிலி சைஸ்ல இருக்கு. பாஸ் நேத்திக்கு ரெண்டு மூணு சேர்ந்து என்னைத் தூக்குடா வீட்டுக்கு எடுத்துப் போயிடலாம்னு பேசிக்கிச்சு.''

கணேஷ், ''வஸந்த்! நாம ரெண்டு பேரும் இந்தக் கிராமத்தில் இனி இருந்தா ராத்திருக்குள்ளத் தீர்த்துக் கட்டிடுவாங்க. இங்ஸ் ஆர் கெட்டிங் ஹாட்'' என்றான்.




''அந்தக் காளிதாஸ் பொட்டியைத் திருப்பிக் கொடுத்தவன் எதுக்கு? சில சமயம் உங்க மூளை வேலே செய்யற பாதை பஜாரஸ் சந்துகள் மாதிரி சிக்கலா இருக்கு.''

''ரொம்ப சிம்பிள் லாஜிக்! சதாசிவம் நம்மகிட்டப் பத்துக்கு நாப்பதுன்னு ஏதோ பேரம் பேசினுன். என்னன்னு இனிமேச் சொல்லமாட்டான். உஷாராய்ட்டான். ஆனு அந்த இன்ஃபர்மேஷனே நாம வேற விதத்தில பிடிக்கப் பார்க்கலாம். காளிதாஸ் கேஸைப் பாரு. யாரோ ஒருத்தன் வந்து தஞ்சாவூர்க்காரனுன்னு கேக்கறுன். ஆமாங்கறுன். 'ஸாம்பிள் கொண்டு வந்திருக்கியா'ன்னு கேக்கறுன். கவுனி. ஸாம்பிள்!''

''இவன் தன் நாத்த தைல சாம்பிள் தான்னு நினைச்சுக்கிட்டு ஆமான்னிருக்கான்.''

''அப்பறம் வியாபாரம். பத்துக்கு நாப்பது! பத்துக்கு நாப்பது என்ன?''

''தெரியாது.''

''ஆனு ஏறக்குறைய சதாசிவம் பேசின 'பத்துக்கு நாப்பது' ''

''அதெல்லாம் சரி பாஸ்! வாட் ஆர் யு எய்மிங் அட்?''

''பஸ் ஸ்டாண்டிலே காளிதாஸ் கிட்ட வந்து பேசினவன் அந்தக் கோஷ்டியில் ஒரு ஆசாமி. இரண்டாவது இந்த பிஸினஸ் ரெண்டு மாசமா நடந்துக்கிட்டிருக்கு...''

''அதாவது ராஜ ராஜன் கிணத்துக்கு முன்னடியே?''

''ஆமா. என்ன பிஸினஸ், யார் நடத்தறுங்க? தெரியாது.''

''சிலேத் திருட்டுத்தான் பாஸ். அதில சந்தேகமில்லே.''

''என்னுல இவ்வளவு ஷ்யூராச் சொல்ல முடியாது. அதைப்பத்தி கவலேயும் இல்லே.''

''பொட்டியைக் கொண்டு கொடுத்த ஆள் கிட்ட இருந்து என்ன கண்டு பிடிக்கமுடியும்? ஏதோ ரோட்டில பெட்டியைப் பார்த்திருக்கான். ஒரு உண்மையுள்ள பிரஜை, கடமை உணர்ச்சியோட டான்னுபோலீஸ் ஸ்டேஷன்ல கொண்டு வந்து கொடுத்துட்டான்.''

''வஸந்த்! மர மண்டை! அவன் அந்தப்பெட்டியை எந்த இடத்தில கண்டுபிடிச்சான் அந்தச் சங்கதி முக்கியமில்லேயா?''

''எப்படி?''

''அந்தப் பெட்டியை வாங்கிட்டுப் பிடுங்கிட்டுப் போனவங்க அதைத் தங்களுடைய ஆபீஸுக்கோ டென்னுக்கோ எங்கயோ கொண்டு போய்ப் பிரிச்சுப் பார்த்திருக்கணும். அது உபயோகமில்லே ஆள் மாருட்டம் ஆயிடுச்சுன்னு தெரிஞ்சதும் விசிறிக்கடாசி இருப்பாங்க. அதனுல்....''

''புரியுது! பெட்டி கண்டு பிடிக்கப் பட்ட இடத்திலிருந்து சமீபத்தில அந்தக் கோஷ்டியோட இடம் இருக்கு.''

''அதான்!''

''என்ன ஸார் வந்துட்டீங்க?''

''இன்ஸ்பெக்டர் உள்ளே வந்து மேஜை அருகில் உட்கார்ந்து,ஸ்...அப்பாடா! காலேல எட்டு மணிக்கு என்ன வெய்யில் பாத்தீங்களா'' என்றுர்.

''போன காரியம் என்ன ஆச்சு?''

''சதாசிவத்து வீட்டைத் துப்புரவாப் பாத்துட்டோம். அங்க ஒண்ணும் கிடையாது. ரெண்டு மூணு மரக்கா நெல்லு ஓட்டைப் பாத்திரங்கள் பழைய சனி சேரு....''

''சதாசிவம் எங்க இப்போ?''

''வீட்டுக்குப் போயிட்டான். அங்கதான் படுத்திருக்கான். ஸர்ச் வாரண்ட் வேற இல்லே. இருந்தாலும் அவனே மிரட்டியே எல்லாத்தையும் துப்புரவாப்பார்த்துட்டேன். அவனே சந்தோஷமா எல்லாத்தையும் திறந்து திறந்து காட்டினுன். அவன் நேத்து என்ன வெச்சிருந்தாலும் இப்ப இல்லே அது.''

''எங்களைப் பத்தி ஏதாவது கேட்டானு?''

''விசாரிச்சான். நான் சொல்லிட்டேன் அவங்களே அரெஸ்ட் பண்ணி ஸ்டேஷன்லே வெச்சிருக்கேன்னு.''

''தாங்க்யூ.''

''இப்ப என்ன? அந்தப் பொட்டியைக் கொண்டு கொடுத்த ஆளேக் கூட்டியாரணும்.''

''அவ்வளவுதான்.''

''இன்ஸ்பெக்டர்! நீங்க இந்தக் கேஸை ஸால்வ் பண்ணிங்கன்னு உங்க கியாதி பல மடங்கு அதிகமாகிப் பிரமோஷன் கிடைக்கும்....''

''சும்மா ஐஸ் வைக்காதீங்க. இந்த ஸ்டேஷன் இதுவரைக்கும் கொயட்டா இருந்தது. இப்ப என்னவோ எசகேடா ஊர்ல நடந்துக்கிட்டிருக்கு. அதை ஸால்வ் பண்ணறதுக்கு உங்க ஹெல்ப்பையும் எடுத்துக்கிறதில எனக்கு ஒண்ணும் தப்பு இருக்கறதா தெரியலே.''

''கரெக்ட்.''



புத்தாண்டு
வாழ்த்துக்கள்.
வற்றாத வளம் சுரக்க
வாழ்வினிலே நலம் கொழிக்க
உற்றாரும் உறவினரும்
உளம் மகிழ
புத்தாண்டே வருக!
புதுப் பொலிவு தருக!!
ஸ்பிக்
SPIC
சதர்ன் பெட்ரோகெமிக்கல்
இண்டஸ்ட்ரீஸ்
கார்ப்பொரேஷன் லிமிடெட்
தலைமை அலுவலகம்: ஸ்பிக் சென்டர்,
97, அண்ணாசாலை, சென்னை 32.

இன்ஸ்பெக்டர் மறுபடி கேஸ் டயரியைப் பார்த்து விலாசம் குறித்துக் கொண்டு இந்தாளைக் கையோட கூட்டிக்கிட்டு வாங்க'' என்று கான்ஸ்டபிளைப் பணித்தார்.

''அதிகம்காபராபப்படுத்தி விட்டுராதீங்க.''

''சரிதாங்க.''

''என்ன சாப்பிடறீங்க? நாஷ்தா எதாவது கொண்டு வரச் சொல்லட்டுமா?''

''வேண்டாம்.''

''என்ன பாஸ் வேண்டாம்! பசி குலை யைப் பிடுங்குது. ஒரு டஜன் இட்லி வாங்கிட்டு வரச்சொல்லுங்க.''

''அப்புறம் ஒரு பக்கெட் சாம்பாரா?'' என்றான் கணேஷ்.

''சும்மாருங்க பாஸ். ஸார் தரேங்கறார். அவர் சொன்னா பூமாதிரி இட்லி கொண்டுட்டு வருவாங்க.''

இன்ஸ்பெக்டர் பர்ஸிலிருந்து பணம் எடுத்துத் தந்தது கொஞ்ச ஆச்சரியமாக இருந்தது.

''கணேஷ்! உங்களுக்கு என்ன வேணும்னு சொல்லலியே?''

''எனக்கு காஞ்சிபுரத்திலே டிபன் சாப்பிட்டது வயறு சரியில்லே. பட்னி போடலாம்னு பார்க்கிறேன். ஒரு சோடா போதும்.''

''வெறும் வயத்தில சோடாவா? சரிதான்.''

''இன்ஸ்பெக்டர் நீங்க?''

''எனக்கு வீட்ல இருந்து தோசை வரும். கொஞ்சம் ஷேர் பண்ணிக்கலாம்.''

''பார்க்கலாம்'' என்றான் கணேஷ்.

வஸந்த் இட்லியை ரசித்துத் தின்றான். கடையில் தண்ணீர் அருந்திவிட்டு ஏவ்... என்று ஏப்பம்.

கணேஷ் இன்ஸ்பெக்டருக்கு வீட்டிலிருந்து வந்திருந்த தோசையில் கொஞ்சம் விள்ளல் மட்டும் சாப்பிட்டுவிட்டுசோடாவை நிராகரித்துவிட்டு அவர் தந்த மோர் கொஞ்சம் அருந்தினான்.

பெட்டி கொண்டு வந்தவனைத் தேடப் போன கான்ஸ்டபிள் ''அந்த ஆள் வீட்டில இல்லிங்க'' என்று திரும்பி வந்து விட்டான். ''தகவல் சொல்லி வச்சிருக்கேன். வந்த உடனே ஸ்டேஷனுக்கு வரச் சொல்லி.''

''என்னன்னு சொன்னிங்க? பயங் காட்டலியே?''

''சேச்சே. அதெல்லாம் இல்லிங்க. முன்னை ஒருக்கா பொட்டியை போலீஸ் ஸ்டேஷன்ல திரும்பக் கொடுத்ததுக்கு ரிவார்டு கொடுக்கிறதைப் பத்தி பேச வரச் சொன்னாருன்னு சொல்லி வந்திருக்கிறேன்.''

''சபாஷ்! சரியான கான்ஸ்டபிள் வெச்சிருக்கீங்க.''

''எல்லாம் நம்ம டிரெயினிங் இல்லே?''

''பாஸ்! காஞ்சிபுரத்தில சாப்பிட்ட டிபன் எனக்கும் இப்பத்தான் கொஞ்சம் வேட்டா வேலே செய்ய ஆரம்பிச்சிருக்கு.''

''ஏண்டா?''

''கொஞ்சம் வயத்தை என்னவோ செய்யுது. எக்ஸ்க்யூஸ் மி'' என்று ஸ்டேஷன் பின்புறத்துக்குச் சென்றான்.

---

## ஒரு துணுக்..?

⌘ மேஜர்நாதன், ஈரோடு-10

கே. மனிதன் பிறக்கும்போதே இறக்கும்நாளைத் தெரிவித்து விட்டால் எப்படி இருக்கும்?

ப: வாழ்க்கையே மோசமாக இருக்கும். பிறந்த தினத்திலிருந்தே அவன் இறக்க ஆரம்பித்து விடுவான்!

⌘ என். ராமகிருஷ்ணன், நிம்மராஜபுரம்

கே. கேள்வி கேட்பவர்களுக்குச் சொல்லும் ஓர் ஆலோசனை?

ப: நம் பெயர் பத்திரிகையில் வரவேண்டும் என்ற ஒரே எண்ணத்தை மனத்தில் வைத்துக்கொண்டு நூற்றுக் கணக்கான கேள்விகள் கேட்காதீர்கள். ''என் கேள்விக்கு ஏன் பதில் வரவில்லை?' என்பது மாதிரிக் கேட்காதீர்கள். சினிமா நடிகர், நடிகைகளைப் பேட்டி காணும்போது கேட்கிறார்களே அந்த மாதிரிக் கேட்காதீர்கள். இது கடுகு பதில்களுக்கு மட்டுமல்ல; எல்லா கேள்வி — பதில் பகுதிக்கும் பொருந்தும்.

⌘ ஜிங்கில் கண்ணன், திருச்சி

கே. ஒரு துணுக்?

ப: அண்ணாவின் பெயரையும் அன்பழகன் பெயரையும் சேர்த்து வைத்திருக்கும் அண்ணா அன்பழகன் என்ற வாசகர் வசிக்கும் ஊர்: அந்தணப்பேட்டை!

⌘ கே. எம். இளங்கோ, குப்புச்சிபாளையம்

கே. வேலை இல்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க எல்லா கல்லூரிகளையும் பள்ளிகளையும் சில ஆண்டுகள் மூடி விடலாம் என்கிறேன்?

ப: நல்லவேளை நீங்கள் அமைச்சராக இல்லை. நாடு பிழைத்தது. முன்பு பெட்ரோல் பற்றாக்குறையைப் போக்க ஒரு அதிகாரி யோசனை கூறினார்: பெட்ரோல் விலையை எக்கச்சக்கமாக ஏற்றிவிடலாம் என்றார். வாங்கவே ஆள் இருக்காது; தட்டுப்பாடும் இருக்காது. அந்த அதிகாரி குப்புச்சிப் பாளையக்காரரோ!

⌘ ராஜலட்சுமி மணி, அண்ணாநகர்

கே. மீண்டும் கோகிலா எப்படி?

ப: மீண்டும் கமல்! (அல்லது கமல் மீண்டார்!)

⌘ அன்புமணி, ஈரோடு-9

கே. அன்புமணி, ஈரோடு-9 என்று என் பெயர் கல்கியில் ஒரு தரம் வர வழி பண்ணுவீர்களா?

ப: முடியாது! (இதோ வந்து விட்டதே என்று சொல்லாதீர்கள். நீங்கள் ஒரு தரம் என்றுதான் சொன்னீர்கள். ஆனால் இங்கு இரண்டு தரம் வந்திருக்கிறது!

⌘ தோ ஜெயராமன், பொகாரோ ஸ்டீல் சிடி

கே. ஏழையின் பலம் எது? பணக்காரனின் பலவீனம் எது?

ப: ஏழையின் பலம் பணமின்மை. அவனது வறுமையே அவனுக்குப் பலம் தருகிறது. 'நம்ப சொத்தை எவன் எடுத்துக்கப் போகிறான்!' என்கிற எண்ணம் அவனுக் குத் துணிச்சல், கவலை இன்மை, தைரியம் எல்லாவற்றையும் அளிக்கிறது. பணக்

## கடுகு பதில்கள்

கணேஷ் கேஸ் டயரியில் இன்னும் சில எண்ட்ரிகளைப் பார்த்தான்.

''வேற ஏதாவது கேஸ்கள் வெளியூர்க் காரங்க சம்பந்தப்படுத்தி இருக்குமான்னு பார்க்க விரும்பறேன்.... ஸாரி இன்ஸ் பெக்டர். உங்க ஸ்டேஷன் விவகாரத்தில நாங்க அநாவசியமாக் குறுக்கிடறதா நீங்க நினைக்கக் கூடாது.''

''சேச்சே! உங்களை முகத்தைப் பார்த்த துமே தெரிஞ்சுக்கிட்டேன். இதுல எனக் கென்ன? நான் ஒண்டி ஆளா இதைச் சமா ளிக்க முடியாது. ஒத்தாசைக்கு நீங்க வந் தீங்கன்னு அதை நான் ஏன் மறுக்கணும்... ஆஃப்டர் ஆல் நீங்களும் சட்டம் படிச்ச வங்கதானே?''

கணேஷ் மறுபடி ரிஜிஸ்தரில் ஆழ்ந்தான். ''இது என்னங்க கேஸு?''

''ரொம்ப சின்ன விஷயங்க. கேஸு கூட இல்லே. ஒரு ஆளு பஸ் ஸ்டாண்டில நூறு ரூபா நோட்டு கீழ கிடக்கறதைப் பார்த்து அதைக் கொண்டு வந்து எங்க கிட்ட ஒப்படைச்சிருக்கான். ஓனர் வர வரைக்கும் மூணு மாசமாவது காத்திருந்து விட்டு அப்புறம் டிரஷரியில் கட்டணும். இந்த மாதிரி சின்ன கேஸுகள்தான் டயரி யில நிறையக் கிடைக்கும்.''

''நான் தேடறது கொஞ்சம் வித்தியாச மான சம்பவங்களை. இந்தக் காளிதாஸ் மாதிரி வழக்கத்துக்கு மாறு....''

''அப்படி ஒண்ணும் இல்லேன்னுதான் தெரியுது. என்ன பார்க்கறீங்க?''

''வஸந்த் எங்க? போனவ ஆளை இன்னும் காணமே?''

''என்ன? அங்கேயே உட்கார்ந்துட்டாரா?''

''போய்ப் பத்து நிமிஷம் இருக்காது?''

''இருங்க. கான்ஸ்டபிளைப் போய்ப் பார்த் துட்டு வரச் சொல்றேன்.''

கணேஷுக்கு திடீர் என்று மின் அதிர்ச்சி போல் ஒரு பயம் அடித்தது.

''ஸார்! ஸம்திங் ராங்! இருங்க நான் போய்ப் பார்த்துட்டு வர்றேன்.''

''நானும் வரேன்.''

இருவரும் போலீஸ் நிலயத்தின் பின் கட்டுக்கு விரைந்தார்கள். சதுர வடிவமாகச் சுமாராக பரேடு பழகக் கூடியதாக சின்ன இடம். அதன் வட கோடியில் ஜி. ஐ. தகடு களால் அமைக்கப்பட்ட கழிவறை இருந் தது. அதன் கதவு ஒன்றும் அவ்வளவு வலு வானதாகத் தெரியவில்லை. மூடியிருந்தது. கணேஷ் அருகில் சென்று ''வஸந்த்! வஸந்த்!'' என்று கூப்பிட்டான். பதில் இல்லை.

''இதுக்குள்ளதான போனாரு?''

கணேஷ் கதவைத் தட்டினான்.

உள்ளே தாளிடப்படாமல் ,தட்டின சுருக் கில் ஆடியது.

கணேஷ் உள்ளே எட்டிப் பார்த்தான்.

வஸந்த் கன்னு பின்னு என்று வாந்தி எடுத்திருந்தான். அந்தக் குறுகலான இடத் தில் கீழே விழுந்து கிடந்தான். (தொடரும்)

---

காரனின் பலவீனம் பணம்தான். பணம் இருப்பதால் சுலபமாக இச்சைகளுக்கு அடிமையாகிறான். தவறுகள் செய்யப் பணம் தூண்டி விடுகிறது. பணத்தால், தான் செய்யும் தவறுகளை மூடி மறைக்க முடியும் என்பதால் அவன் மனத்தளவில் பலவீனமடைகிறான்.

⌘ ஆர். பி. திருஞானம், கொரட்டி

கே. வேதனை நீர, சோதனை குறுக்கிடாமல் சாதனை புரிவது எப்படி?

ப: உங்கள் கேள்விதனை எத்தனை எத்தனை முறை படித்தாலும் சிந்தனையில் போதனை எதனையும் உருவாக்கிட முடியவில்லை. வேதனை, ரோதனை, சோதனை என்பதனைத் தையும் மறந்து ஊக்கமதனையும் விடா முயற்சிதனையும் கைப்பிடித்தால் பனைத் துணை இல்லாவிட்டாலும் தினைத்துணை சாதனையாவது புரிய முடியும். (பதிலைப் படித்துவிட்டு வந்தனை செய்யாவிட்டா லும் நிந்தனை செய்யாதீர்கள்!)

⌘ அன்பு. ரத்தினகுமார், பட்டுக்கோட்டை

கே. ஜெய்சங்கர் தொடர்ந்து வில்லனாக நடிப்பதைப் பற்றி....?

ப: எனக்குக் கடுகளவு ஆட்சேபனைகூட இல்லை. எந்தரோல் ஆனால் என்ன? ஆற்றல் இருந்தால் சோபிப்பார்.

⌘ டி. எல் ரெட்டி, வேலிடுபட்டி

கே. தாங்கள் கற்றது எவ்வளவு?

ப: கற்றது உலகளவு (கல்லாதது ஈரேழு பதினாலு லோகம் அளவு!)


⌘ நீ. ஜனார்த்தனம், திருவனந்தபுரம்

கே. சில கேள்வி - பதில் பகுதிகளில் கேள்விகளையும் தாங்களே எழுதிவிடுகிறார்களாமே.

ப: இருக்கலாம். கடுகு பதில்களைப் பற்றி அப்படிச் சொல்ல முடியாது. கேள்விகள் யாவும் கெட்டிக்காரத் தனமாக இருப் பதே அதற்குச் சான்று.


பரிசு பெறுபவர் :

திருமதி கீதா ஜெயராமன்
2237 வீதி 6, செக்டார் IV-D,
பொகாரோ ஸ்டீல் சிடி-827004.




# Kalki Shopping Page









# தாபம்...

## ருக்மிணி பார்த்தசாரதி

சந்திரன் தன் பெற்றோர்களை வெறுத்தானென்று சொல்ல முடியாது. அவர்களிடம் அவனுக்கு எந்தவிதமான பிடிப்பும் இல்லை என்று சொல்லலாம். புதுடில்லியில் கண்ணைக் கவரும் மினுமினுப்பில், மஸாலா கொட்டும் உணவின் சுவையில், சிவந்த நிற சுந்தரிகளின் ஷிபான் சேலைக் கவர்ச்சியில், தன்னையே பறி கொடுக்கச் சித்தமாயிருந்த இருபத்தைந்து வயது இளைஞன் அவன். ஆபீஸ் உண்டு வீடு உண்டு விட்டு வேலை உண்டு என்றிருக்கும் தாயிடமும் அவனுக்கு எந்தவிதமான ஈர்ப்பும் கிடையாது. தந்தை அரசாங்கத்தில் உயர் அதிகாரிதான். புதுடெல்லியில் வேலை. ஆனால் பகட்டையும் 'ஷோ'வையும் வெறுப்பவர்.

அவன் விரும்பிய பகட்டான வாழ்க்கை நாளுக்கொரு விருந்து, பொழுதுக்கொரு பிக்னிக். அதை விரும்பாதவர்களோடு இருப்பதையே அவன் முள் மேல் நிற்பதாகத்தான் உணர்ந்தான். பெற்றோர்களின் ஒரே குழந்தை அவன். தந்தைக்கு முப்பத்திரண்டு வயது முடிந்தபோது பிறந்தவன். இப்போது அவருக்கு ஐம்பத்தெட்டாவது வயது நடக்கிறது. இன்னும் சில மாதங்களில் ஓய்வு பெற்றுவிடுவார். இந்த நிலையில் சந்திரன் காதல் வயப்பட்டான்.

அவனோடு வேலை செய்யும் பெண். பால் வெளுப்பில், லிப்ஸ்டிக்கும், கையில்லா ரவிக்கையுமாக, காதிலும் கழுத்திலும் பிளாஸ்டிக் நகைகள் பளிரிட, அழகுப் பொம்மையாக இருந்தாள்.... பெயர் மோஹினி.

பஞ்சாபிப் பெண்.

பஞ்சாபிப் பெண் என்பதில் சந்திரனுக்கு ஒருவிதமான வக்கிர திருப்தி. பெற்றோர்களிடமிருந்து தன் வாழ்வைக் கத்தரித்துக் கொள்ள இது பொன்னான காரணம் என்று சந்தோஷப்பட்டான்.

மோஹினி உண்மையிலேயே சந்திரனைக் காதலித்தாள். அவனன்றித் தனக்கு வாழ்க்கை இல்லை என்று தன் பெற்றோர்களிடம் வாதாடினாள். அவர்கள் மறுக்கவில்லை.

சந்திரன் மோகினியோடு மாலை வேளைகளைக் கழிக்க ஆரம்பித்தான். சினிமா, பார்க், இப்படி.... பல முறைகள் அவள் வீட்டுக்கே சென்று அவளோடு பேசிக்கொண்டு இருந்துவிட்டு, இருட்டிய பின் வீடு செல்வான். ஆரம்பத்தில் அப்பா கோபிப்பாரே என்ற பயம் அடி மனத்தில் இருந்தது. இதற்கு மோஹினிதான் வழி கற்றுத் தந்தாள். — "ஆபீஸில் வேலை அதிகம் என்று சொல்லுங்கள்!"

முதன் முறை அப்பா, "ஏன் சந்திரா இத்தனை லேட்?" என்றதற்கு அவன், "ஆபீஸில் வேலை அதிகம்!" என்று கச்சிதமாகச் சொன்னான். தனக்காகப் பெற்றோர்கள் சாப்பிடாமல் காத்திருப்பது சற்று — சற்றே தான் — மனத்தைத் தைத்தது. அடுத்த முறை இந்த நெருடல் கூட இல்லை.

திருமணத்தை இன்னும் தள்ளிப் போடக் கூடாது என்று தோன்றியபோது மோகினியின் பெற்றோர், "நாங்கள் உன் பெற்றோர்களை எப்போது பார்க்க வரலாம்? லௌகிகம் பேச வேண்டும்!" என்றார்கள். "நோ லௌகீகம்! இது தெய்விகக் காதல்!" என்று அவர்களை ஆனந்தப்படுத்தி விட்டு வீடு வந்தான் சந்திரன். சர்வ சாதாரணமாக, "நான் மோஹினி என்ற பஞ்சாபிப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன்!" என்றான்.

தாய் தந்தையர் அதிர்ச்சி யடைவார்கள் என்று எதிர்பார்த்தவன் ஏமாறவில்லை. தாய் முகம் வெளிறப் பேச்சற்றுச் சிலையாகிப் போனாள். தந்தை அவனை நேருக்கு நேர் பார்த்தார். முகம் கோணி, பின் கணப்பொழுதில் தன் பழைய நிலைக்கு வந்தது.

நிதானமாக, "நாங்கள் ஆட்சேபித்தால்?" என்றார்.

"கல்யாணம் எனக்கு அப்பா, உங்களுக்கு இல்லை!" என்றான் அவன்.

"என்னது!" — தாய் திடீரென்று உயிர் பெற்றவள் போல், "அடப் பாவி! என்ன தைரியமிருந்தால்..." என்று கத்த ஆரம்பித்துக் குரலெடுத்து அழலானாள். தந்தையோ, "பெண்ணின் பெற்றோர்கள் என்ன சொல்கிறார்கள்?" என்றார்.

"சம்மதித்து விட்டார்கள்.... உங்களைப் பார்க்க வருவதாகச் சொன்னார்கள்..."

**மனவாசம்**

திரு கண்ணதாசன் உடல் நலமின்றி மருத்துவமனையில் இருக்கிறார். அவருக்கு ஓய்வு தேவைப்படுகிறது. எனவே மனவாசம் அடுத்த வாரம் தொடரும். - ஆசிரியர்





விடை

சிவகுமார்

கமலஹாசன்

தீபா

ராஜசுலோசனா

கே. ஆர். விஜயா

''எதற்கு?''

''பிள்ளையின் அப்பா என்பதால்...''

''அதுதான் எதற்கு? கல்யாணம் உனக்குத்தானே, எனக்கு இல்லையே!''

அவன் முகம் ரத்தமாகச் சிவந்தது... கோபத்தில் கைகள் லேசாக நடுங்கின.

''ரிஜிஸ்டர் மாரேஜ்தான் உத்தமம்.... தேதி நிச்சயப்படுத்தி எனக்குச் சொல்... நானும் அம்மாவும் வருகிறோம். ரிஜிஸ்டரில் கை யெழுத்துப் போட. எங்கள் ஆசீர்வாதமாக ஒரு செக் தருகிறோம்!'' — அவருடைய நிதானத்துக்கு முன் அவன் தோற்றவன் போலக் கூனிக் குறுகிப் போனான்.

அவனுடைய திருமணம் நடந்தேறியது. உடனேயே அவனுடைய தந்தை தாமாக ஒய்வு கேட்டுப் பெற்றுக் கொண்டு மனைவியோடு சென்னைக்குச் சென்று விட்டார். சந்திரன் வரை இது நிம்மதிதான். மோஹினிக்கு மாமனார் மாமியார் தொல்லையிலிருந்து விடுதலை!

எப்போதாவது அவன் தன் பெற்றோருக்கு ஒரு நாலு வரி கடிதம் எழுதுவான். அவர்களிடமிருந்து ரத்தினச் சுருக்கமாகப் பதில் வரும். மற்றபடி அவன் சென்னை செல்லவுமில்லை, அவர்கள் புதுடெல்லி வரவுமில்லை.

வருடங்கள் மறைந்தன.

இப்போது சந்திரன் இரண்டு குழந்தைகளின் தகப்பன். மோஹினி வேலையை விட்டு விட்டாள். சுறுசுறுப்பான இல்லத்தரசி, அவள்.

சந்திரன் வேலை பார்த்த கம்பெனியார் புதுக் கிளை ஆரம்பிக்க முடிவு செய்தார்கள். அதற்காக எத்தனையோ முக்கிய குறிப்புகள் சேகரிக்க வேண்டியிருந்தது.

சந்திரன் புத்திசாலி, திறமைசாலி... அதனால் இந்த அதிகப்படியான வேலை அவன் தலையில்தான் விழுந்தது. பலன், சந்திரன் தாமதித்து வீடு திரும்ப ஆரம்பித்தான்.

''ஏன் இத்தனை லேட்?'' என்றாள் மோஹினி.

''ஆபீஸில் வேலை அதிகம்!'' என்றான் சந்திரன்.

''என்னது?''

''அதுதான் சொன்னேனே! ஆபீஸில் புதிதாகக் கிளை....''

புயலெனச் சீறினாள் அவள். ''என்னை ஏமாற்றவா பார்க்கிறீர்கள்? என்னிடமே இப்படிச் சொல்கிறீர்களே, இந்த யுக்தியைக் கற்றுக் கொடுத்ததே நான்தானே! உங்கள் பெற்றோர்களைப் போல் நான் ஏமாளி இல்லை. வேலை அதிகமா, இல்லை, ஏதாவது அழகி....''

''மோஹினி!'' — அவன் கத்திவிட்டு அடிபட்டவன் போல அப்படியே சுருங்கிப் போனான். திருமணமாகு முன், அவன் ஆபீஸிலிருந்து வீடு திரும்பும்வரை சாப்பிடாமல், நாள் மேல்நாளாக, பொறுமையோடு, ஏதோ தவம் போல் காத்திருந்த பெற்றோர்கள் கண்முன் சுழன்றனர். ஓடிச் சென்று அவர்களைப் பார்க்க வேண்டும் என்ற தாபம் சட்டென்று நெஞ்செல்லாம் நிறைந்தது.



# சந்தேகத்தின் நிழலில்...



ஜெயவண்ணன்

**மா**லை மணி ஆறு இருக்கும்.

அந்தக்காலனியின் கோடியில் தனித்திருந்த அந்த வீட்டின் முன் போலீஸ் வேன் வந்து நின்றதும்இன்ஸ்பெக்டர் திவாகரும், இரண்டு கான்ஸ்டபிள்களும் அவசர அவசரமாக அந்த வீட்டினுள் விரைந்து சென்று நுழைய, கைரேகை நிபுணர் ஒருவரும் புகைப்படக் காரர் ஒருவரும் அவரைத் தொடர்ந்தனர்.

நாற்காலி ஒன்றில் சோகமே உருவாக அமர்ந்திருந்த ராம்குமார் காலடி ஓசை கேட்டு நிமிர்ந்து இன்ஸ்பெக்டரைப் பார்த் தான். மறு கணம் குலுங்கிக் குலுங்கி அழத் தொடங்கி விட்டான்.

இன்ஸ்பெக்டர் திவாகர் தம் கரத்தை அவன் தோளில் பதித்து மெல்லத் தட்டிக் கொடுத்தார். பின், ''ஸாரி மிஸ்டர் ராம்... ஏதோ நடக்கக் கூடாதது நடந்து விட்டது. மனசைத்தேற்றிக்கொள்வதைத்தவிர நாமெல் லாம் வேறென்ன செய்ய முடியும்?'' என்றார்.

உள்ளே...

பெட்ரூமின் கதவருகே தலைகுப்புற விழுந்து கிடந்தாள் ஒரு பெண். அவள் தலையின் பின் பக்கம் பலமாக அடிபட்டதால் பெருக்கெடுத்து ஓடிய ரத்தம் அவளைச் சுற்றிச் சில அடி தொலைவு வரை அப்படியே தரையில் உறைந்திருந்தது.

இன்ஸ்பெக்டர் திவாகர் அந்தப் பெண்ணை யும், அந்த அறையையும் சுற்றி ஒரு நோட்டம் விட்டார். புகைப்படக்காரர் 'பளிச்', 'பளிச்' என்று பணியைத் துவக்க....

''என்ன நடந்தது, மிஸ்டர் ராம்?'' என்று இன்ஸ்பெக்டர் கேட்க...

ராம் பேசத் தொடங்கினான். ''வழக்கம் போல ஆபீஸ் முடிந்து ஐந்தரை மணிக்கு வீட்டுக்குத் திரும்பினேன். அனிதா—என் மனைவி – பகல் காட்சி சினிமாவுக்குப் போகப் போவதாகக் காலையிலேயே சொல்லியிருந் தாள். வீட்டின் ஒருசாவி என்னிடம் எப்போ தும் இருக்கும். நான் வந்தபோது வீடு திறந்து கிடக்கவே, சந்தேகப்பட்டு உள்ளே நுழைந் தேன். அலங்கோலமாகக் கொலை செய்யப் பட்ட நிலையில் என் மனைவி... விரியத் திறந்து கிடந்த நிலையில் இரும்பு பீரோ... கண்ட கண்ட இடங்களில் சிதறிக் கிடந்த துணிகள் ....யாரோ அனிதாவைக் கொலை செய்து விட்டுப் பீரோவில் இருந்ததைக் கொள்ளை யடித்துக் கொண்டு போயிருக்கிறார்கள்... இருபத்தைந்து பவுன் நகைகள்.... என் னால்... என்னால் இந்த அதிர்ச்சியைத் தாங்க முடியவில்லை இன்ஸ்பெக்டர்....''

''ஐ ஸீ....'' என்ற இன்ஸ்பெக்டர் ''பீரோவின் சாவி....'' என்று இழுத்தார்.

''பீரோ சாவி எப்போதும் அவகிட்டே தான் இருக்கும். அதை இடுப்பில் செருகி யிருப்பா. சினிமாவுக்குப் போன அனிதா படம் பிடிக்காமப் பாதியிலேயே திரும்பி வீட்டுக்கு வந்தவ வீடு திறந்திருக்கிறதைப் பார்த்துட்டு உள்ளே நுழைஞ்சிருக்கா. அவ ளுக்கு முன்னே மாற்றுச் சாவி போட்டு வீட் டைத் திறந்து திருடன் உள்ளே இருந் திருக்கான். அவளைக் கண்டதும் அனிதா கூச்சல் போட்டிருப்பா. அவனுக்கு வேறே வழியில்லாம இவளைக் கொலை செய்துட்டு, இவ இடுப்பிலே இருந்த சாவியை எடுத்துப் பீரோவைத் திறந்து நகைகளைத் திருடிக் கிட்டு ஓடியிருக்கான்...''

''இந்த வீட்டில் வேறே யாரும் இல் லையா?''

''இல்லே. நாங்க ரெண்டு பேரும் மட்டும் தான். எங்களுக்கு உதவ ஒரு வேலைக்காரி இருக்கா.''

''அவ பேரு?''

''வேதா.''


''இப்போ வேதா எங்கே?'' என்று இன்ஸ் பெக்டர் கேட்டதும், ''நான்தான் ஐயா வேதா'' என்று கூறிக் கொண்டே அவர் எதிரே ஒரு பெண் வந்து நின்றாள்.

வேலைக்காரி என்றதும் ஐம்பதுக்கு மேல் கற்பனை செய்து கொண்டிருந்த இன்ஸ் பெக்டருக்கு எதிரே பதினெட்டு இருபது வயதில் ஓர் அழகுச் சிலை வந்து நிற்கவே ஒரு கணம் அசந்து விட்டார்.

''நீதான் வேதாவா? எவ் வளவு நாளா இங்கே வேலை பார்க்கறே?''

''ஒரு வருஷமா.''

''இன்னிக்கு இங்கே எப்போ வந்தே?''



''ஐந்தரை மணி இருக்கும். நான் உள்ளே வந்தப்போ ஐயா அழுதுக்கிட்டிருந்தாங்க. அம்மா....அம்மா... இப்படி நடக்கும்னுஎன்னுலே நினைச்சுக் கூடப் பார்க்க முடியலே ஐயா....''

கண்களைக் கசக்கத் தொடங்கிய வேதாவைப் பார்த்தார் இன்ஸ்பெக்டர்.

அழும்போதுகூட அழகாகத்தான் இருக்கிறுள்.

''உனக்குக் கல்யாணம் ஆயிட்டுதா?''

''இன்னும் இல்லே.''

''கடைசியா அம்மாவை நீ எப்போ பார்த்தே?''

''காலைல பத்து மணிக்கு வேலையை முடிச்சுட்டுப் போகும்போது பார்த்ததுதான். 'மாட்னிக்குப் போறேன். வர ஆறு மணியாகும். நீ வழக்கமா வர்றது போல அஞ்சு மணிக்கு வரவேண்டாம். கொஞ்சம் லேட்டாவே வா'' என்று சொன்னுங்க....''

''ஐ, ஸீ''

''ரைட் நீ போ. கூப்பிட்டு அனுப்பினு ஸ்டேஷனுக்கு வரணும். என்ன தெரியுமா?'' என்று அதட்டி அவளை அனுப்பிவிட்டு ''மிஸ்டர் ராம். நீங்க ஒரு நிமிஷம் ஹாலில் போய் உட்காருங்க...''என்று ராம்குமாரைப் பார்த்துக் கூறவே, அவன் அந்த இடத்தை விட்டு ஹாலை நோக்கி நடந்தான்.

அவன் அப்பால் சென்றதும் இன்ஸ்பெக்டரின் பார்வை அந்த அறையில் இருந்த ஒவ்வொரு பொருளின் மீதும் பட்டுத் திரும்பியது.

இன்ஸ்பெக்டர் மேஜை அருகே சென்று அதனருகே தரையில் இருந்த குப்பைக் கூடையைக் கையில் எடுத்தார். பின், சடேரென்று அதைத் தரையில் கவிழ்த்துவிட்டு, கசங்கிப் போன காகிதத் துண்டுகளை ஒவ்வொன்றுய்ப் பிரித்துப் பார்க்கத் தொடங்கினர்.

வெளிர் நீல நிறத்தில் இருந்த ஒரு சீட்டை ஒரு கணம் பிரித்து உற்றுப் பார்த்தவர், சட்டென்று அந்தச் சீட்டைச் சட்டைப் பையில் வைத்துக் கொண்டார்.

பின், அனிதாவின் உடலைப் பிரேதப் பரிசோதனைக்கு அனுப்பிவிட்டு ராம்குமாரிடம் சொல்லிக்கொண்டு வேனில் ஏறி அமர்ந்தார்.

வேன் புறப்பட்டதும் சட்டையில் சிறைப் பட்டிருந்த அந்தத் துண்டுச் சீட்டை எடுத்துப் பிரித்தார்.

அது....

ஒரு டாக்டர் எழுதிக் கொடுத்த மருந்துச் சீட்டு. மூன்று தேதிகளுக்கு முந்திய தேதி இடப்பட்டிருந்தது அந்தச் சீட்டில்.

'இந்தச் சீட்டு மட்டும் இந்தக் கேஸில் 'மெட்டீரியல் ஆப்ஜெக்'டாகப் பயன் பட்டால்....?'

அந்தச்சீட்டிலிருந்த டாக்டரின் பெயரைக் கவனித்தார் இன்ஸ்பெக்டர் திவாகர்.

டாக்டர்மோகன்பாபு, எம்.டி....

''டாக்டர், உங்களுக்குச்



ரெமம் தர்றதுக்கு மன்னிக்கணும். இந்தச் சீட்டை நீங்க யாருக்கு எழுதிக் கொடுத்தீங்கன்னு சொல்ல முடியுமா?''

''மிஸ்டர் ராம்குமாருக்குத்தான் இதை எழுதிக் கொடுத்தேன்.... இது ஒரு கருச்சிதைவு காப்ஸூல் இதில் மூன்று சாப்பிட்டால் போதும். ஒரு மாத அளவிலான கருத்தரிப்பைக்கலைத்து விடலாம். இந்த மாத்திரையின் பலன் ஒரு வாரத்தில் தெரிந்து விடும். இதனால் பலன் நிச்சயம் ஏற்படும்னும் சொல்ல முடியாது. ஒரு முயற்சி தான் இது. நாலு நாளைக்கு முன்னே ராம்குமார் என் கிட்டேவந்தார், அவருடைய மனைவி இப்போ பிரக்னெண்டா இருக்கிறதாகவும், இன்னும் கொஞ்ச நாளைக்கு மகப் பேறைத் தள்ளி வைக்க விரும் பறதாகவும் மருந்து எழுதித் தரும்படியும் கேட்டார்....''

''தேங்க்யூ டாக்டர்...''

இரண்டு தினங்களுக்குப் பின் ஒரு நாள் மாலை.

ஜீப்பிலிருந்து இறங்கிய இன்ஸ்பெக்டர் ராம்குமார் வீட்டினுள் நுழைந்தார்.

''கொலைகாரனை ,என் அனிதாவைக்கொலை செய்தவனைக் கண்டு பிடிச்சிட்டீங்களா?''

''எஸ், மிஸ்டர் ராம்குமார். கொலைகாரன் இங்கேதானே இருக்கான். ஸோ, அவனை அரெஸ்ட் செய்ய நான் இங்கே தானே வந்தாகணும்.''

''இன்ஸ்பெக்டர்!''

''மிஸ்டர் ராம்குமார்! யூ ஆர் அண்டர் அரெஸ்ட்....''



''இன்ஸ்பெக்டர்!.... நான்... நான்... இந்தக் கொலையைச் செய்தேனு? இதுக்கு என்ன ஆதாரம் இருக்கு?''


''டாக்டர் மோகன் பாபு எழுதிக்கொடுத்த மருந்துச் சீட்டு...''

''இதுக்கும் கொலைக்கும் என்ன தொடர்பு இருக்கு?''

''சொல்றேன்.... அனிதா இறப்பதற்கு மூணு நாளைக்கு முன்னேதான் இந்த மருந்தை எழுதி வாங்கியிருக்கீங்க. அனிதா கர்ப்பமா இருக்கிறதாகவும், அதைக்கலைக்கணும்னும் டாக்டர் கிட்டே சொல்லியிருக்கீங்க. பிரேதப் பரிசோதனை ரிப்போர்ட்டிலே அனிதா கர்ப்பமா இல்லைன்னு தெரிஞ்சதும் என் சந்தேகத்தின் நிழல் உங்க மேல் விழ ஆரம்பிச்சுட்டுது. நீங்க பொய் சொல்லி எழுதி வாங்கின இந்த மருந்துச் சீட்டு உங்களுக்கு ரொம்பவும் வேண்டிய ஒருவருக்கு, அதுவும் ஒரு பொண்ணுக்காகத்தான் இருக்கணும் என்ற முடிவுக்கு வந்தேன். அவ்வளவு நெருக்கமான உறவுக்கு உரிய பொண்ணு வீட்டுக்கு வெளியிலேயோ அல்லது உள்ளேயோ இருக்கலாம் அல்லவா? உடனே என் நினைவுக்கு வந்தது வேதாதான். உங்களுக்கும் வேதாவுக்கும் அந்தரங்கத் தொடர்பு உண்டு....''

''நோ....நோ... இது சுத்தப் பொய். அபாண்டம்....'' என்று கூவினன் ராம்குமார்.

''இதிலே எதுவுமே பொய் இல்லே. உங்க தொடர்பால வேதா கல்யாணமாகாமலே




கர்ப்பமா ஆகியிருக்கா. நீங்க அவளுக்காக வாங்கிக் கொடுத்ததுதான் இந்த மருந்து.

''சம்பவம் நடந்த அன்று அனிதா சினிமாவுக்குப் போனதும் நீங்களும் வேதாவும் முன்கூட்டியே திட்டமிட்டபடி இங்கே வீட்டிலே சந்திச்சிங்க. அனிதா வரமாட்டாங்க என்ற துணிவிலே ரொம்ப ஃப்ரீயா இருந்திருக்கிங்க. ஆனா, எதிர்பாராத விதமா படம் பிடிக்காம அனிதா பாதியிலேயே திரும்பியிருக்காங்க. கதவு பூட்டப்படாமல் இருந்ததைப் பார்த்துட்டுச் சந்தேகப்பட்டுக் கதவைத் தட்ட நீங்க வந்து திறந்திருக்கிங்க. உள்ளே நுழைஞ்ச அனிதா உங்க ரெண்டு பேரையும் பார்த்ததும் பத்திரகாளியா மாறிவிட்டாங்க. கோபத்திலே உங்க ரெண்டு பேரையும் கண்டபடி திட்ட, ஆத்திரத்தில் வெறி கொண்ட நீங்க அருகே மேஜை மேல் இருந்த பேப்பர் வெயிட்டை எடுத்து அனிதாவை நோக்கிப் பலங்கொண்ட மட்டும் வீச, அந்தத் தாக்குதலில் இருந்து தப்ப அனிதா சற்றே திரும்ப, பாய்ந்து வந்த அந்தக் கண்ணாடி வெயிட் அவுங்க தலையின் பின்புறம் அசுரத்தனமாத் தாக்கி, மூளையைச் சிதறச் செய்து, அதே நொடியில் அவுங்க உயிரைப் பறிக்க, விஷயம் இந்த அளவு மோசமாகும்னு நீங்களோ வேதாவோ கொஞ்சமும் எதிர்பார்க்கலே. அனிதா இறந்துட்டாங்கன்னு தெரிஞ்சதும், இந்தக் கொலைக் குற்றத்திலிருந்து தப்பிக்க, திருடன் வந்துட்டுப் போனதா ஒரு 'இமேஜை' உருவாக்கினீங்க. ஆனா, திருடன் யாரும் இங்கே வரவும் இல்லே... எதையும் திருடவும் இல்லே...நகைகள் பாங்க் லாக்கர்லே பத்திரமா இருக்கு....

''இன்ஸ்பெக்டர், உங்க கற்பனே ரொம்ப அழகா வேலே செய்யுது!''

''வேதா சொன்ன வாக்கு மூலத்தை வைச்சுத்தான் நடந்ததை நான் சொன்னேன்.''

''என்ன... வேதா சொன்னுளா?''

''எஸ். ஒரு அப்ரூவர் பெரும்பாலும்போய் சொல்றதில்லே....''

''அப்ரூவரா? அடிப் பாவி...'' என்று கூவிய ராம்குமார், துவண்டு போய் அப்படியே சிலநிமிடங்கள் உட்கார்ந்துவிட்டான். பின், ''ஸாரி, இன்ஸ்பெக்டர். நான் தயார்....'' என்று கூறவே, இன்ஸ்பெக்டர் அவன் கைகளில் விலங்கை மாட்டினர்.


ஜீப்பில் ராம்குமாருடன் இன்ஸ்பெக்டர் ஏறி அமர்ந்ததும் ஜீப் புறப்பட்டது.

இன்ஸ்பெக்டர் திவாகர் மெல்லத் தமக்குள் சிரித்துக் கொண்டார்.

எவ்வளவு முயன்றும் வேதாவிடமிருந்து அவரால் உண்மையை வரவழைக்க முடியவில்லே என்பதோ, நடந்த சம்பவங்களுக்கு உருக்கொடுத்து அவர் சொன்னது அனைத்தும் அவரது யூகம்தான் என்பதோ ராம்குமாருக்கு நிச்சயம் தெரியாது.

பாவம், ராம்குமார்!

இனி, வேதாவைப் பேச வைப்பது இன்ஸ்பெக்டருக்கு அவ்வளவு சிரமமா என்ன?



# சிவாஜி முழங்கிய "வந்தேமாதரம்!"

ம.பொ.சி



**பா**ரதியின் தேசியப் பாடல்கள் அடங்கிய நூல் சென்னை மாகாண அரசால் தடை செய்யப் பட்டு, அதன் பிரதிகள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டன. இதை எதிர்த்து நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. அந்த வழக்கிலே 'பாரதியாரின் தேசியப் பாடல்கள் பாரத தேசத்தின் பழைய சிறப்புக்களையும், தற்போதுள்ள சீரழிந்த நிலையையும் வர்ணிக்கின்றன என்பது உண்மைதான். ஆனால், அவை அனைத்தும் அரச நிந்தனையானவை என்று சொல்லி விட முடியாது' என்று கூறி பாரதியின் பாடல்கள் மீது விதிக்கப்பட்ட தடையை ரத்து செய்து நீதி மன்றம் தீர்ப்பளித்தது. பறிமுதல் செய்யப்பட்டிருந்த பிரதிகளை பாரதி பிரசுராலயத்துக்குத் திருப்பித் தர வேண்டும் என்றும் உத்தரவாயிற்று. பாரதியாரின் பாடல்களிலே அரச நிந்தனைப் பிரசாரம் நேரடியாக இல்லையென்றாலும் சுதந்திர ஆவேசத்தை அவை வளர்த்தன என்பதில் ஐயமில்லை.

பாரதியாரின் தேசியப் பாடல்கள் தடை செய்யப்பட்டதை எதிர்த்து சென்னை மாகாண சட்ட மன்றத்திலே வாதம் எழுந்தது. ஸர்வஸ்ரீ எஸ். சத்தியமூர்த்தி, மதுரை எஸ். துளசிராம் ஆகிய உறுப்பினர்கள் பாரதி பாடல்களைத் தடை செய்ததற்காக அரசைக் கண்டித்துப் பேசினர். தடை செய்யப்பட்ட பாடல்களில் ஒன்றை சட்ட மன்றத்திலேயே பாடித் தங்களைக் கைது செய்து தண்டிக்குமாறு அரசுக்கு அறைகூவல் விட்டனர்.

பள்ளிக்கூடங்களிலே பாரதியாரின் பாடல்களை மாணவர்கள் பாடுவதற்கும் தடை விதித்தது அரசு. அந்தத் தடை 1937ல் ராஜாஜியின் தலைமையில் காங்கிரஸ் ஆட்சி வந்த போது நீக்கப்பட்டது. காங்கிரஸ் ஆட்சி போய் இரண்டாவது உலகப் போரும் போர் நடந்த காலத்தில் வெள்ளையரைக் கொண்ட ஆலோசகர் ஆட்சியும் வந்ததும் பழையபடி பாரதியார் பாடல்களுக்குத் தடை விதிக்கப்பட்டது. அந்தத் தடை நாடு சுதந்திரம் பெற்ற பின் நீக்கப்பட்டது.

பாரதி போர்க் களப் புலவனுதலால், அன்னிய ஆட்சிக் காலத்திலே அவனுடைய பாடல்கள் அடுத்தடுத்துப் பல முறை அடக்குமுறைகளைச் சந்தித்தன. ஆனால், இறுதி வெற்றி பாரதிக்குத்தான்!

"**ச**த்ரபதி சிவாஜி தன் சைன்யத்துக்குக் கூறியது" என்னும் தலைப்பிட்டு ஒரு கவிதையைப் பாரதி படைத்திருக்கிறான். அதிலே முதல் மூன்று வரிகளைச் சொல்கிறேன். கேளுங்கள்:

"ஜய ஜய பவானி! ஜயஜய பாரதம்!
ஜயஜய மாதா! ஜயஜய துர்க்கா!
வந்தே மாதரம்! வந்தே மாதரம்!"

இந்த மூன்று வரிகளிலே முதலிரண்டு வரிகளில் வரும் வாசகங்கள் சிவாஜி சொன்னவையாக இருக்க நியாயமுண்டு. ஆனால், மூன்றாவது வரியாக உள்ள "வந்தே மாதரம்! வந்தே மாதரம்!" என்னும் வாசகத்தை எவ்வாறு சிவாஜி சொல்லியிருக்க முடியும்? அந்த மாவீரன் காலத்திலே இந்த மந்திரச் சொல் வழக்கில் இல்லை. சிவாஜிக்கு இருநூறு ஆண்டுகளுக்குப் பின் தோன்றிய பங்கிம் சந்திரர் படைத்த ஆனந்த மடம் என்னும் நூலிலேதான் முதன் முதலாக இந்த வாசகம் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. அதற்குப் பிறகுதான் இந்திய தேசிய விடுதலை இயக்கத்தோடு வந்தே மாதரம் என்னும் வாசகத்துக்குத் தொடர்பு ஏற்பட்டது. இந்த வாசகத்தை வீர சிவாஜி சொன்னதாக பாரதியார் பாடக் காரணம், அவருக்கிருந்த விடுதலை ஆவேசம்தான்! அந்த அளவுக்கு "வந்தே மாதரம்" அவரை ஆட்கொண்டிருந்தது

(மயிலை இலக்கிய வட்டச் சொற்பொழிவிலிருந்து)

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press, Race Course, Road, Guindy, Madras-600 032. (Phone: 431543) Editor: K. Rajendran

# ISI தர முத்திரை பெற்றது
# விநிபா சந்தன முகப்பவுடர்

IS 3959
ISI
CM/L/8273

விநிபா சந்தன முகப்பவுடர் தரமாகத் தயாரிக்கப்படு கின்றது. சான்றாக இப்போது ISI-யின் தரமுத்திரை பெறுகின்றது.

சருமத்திற்கு மென்மையும், பொலிவும் அளிக்கவல்ல தூய 100% மைக்ரோஃபைன் செய்யப்பட்ட மைசூர் சந்தனம், இந்தியாவின் அபூர்வ மூலிகைகள், மேனாட்டு வாசனை திரவியங்கள், உயர்ந்த அத்தர் வகைகள், தூய புனுகு, ஜவ்வாது, அரகஜா இவற்றை ஒருங்கே கலந்து நவீன விஞ்ஞான ரீதியில் தயாரிக்கப்படும் நறுமணம் கமழும் பவுடர் விநிபா.




விநிபா ப்ராடக்ட்ஸ்
"கோகுல் கார்டன்ஸ்," கும்பகோணம்.

Criterion VP 3668 TMB

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka



